பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 06 வெள்ளிக்கிழமை (20.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 091

ம் கோ
THE RAMCO ... LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# பாடசாலை நீர்த்தாங்கியில் கிருமிநாசினி கலப்பு

## 26 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி







(யாழ்ப்பாணம்)

ஏழாலை மயிலங்காடு ஸ்ரீமுருகன் வித்தியாலய நீர்த்தாங்கியில் இனந்தெரியாத விசமிகள் கிருமிநாசினியை கலந்தமையால் அங்கு கல்வி பயிலும் மாணவர்களில் 26 பேர் கிருமிநாசினி கலந்த நீரை அருந்தியதால் வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (24 ஆம் பக்கம் பார்க்க)

## மோடிவந்து என்ன செய்தார்?

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் பிரிவினைவாதத்திற்கு சக்தியூட்டும் கிருமியை பரப்ப இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது இலங்கை விஜயத்தின் போது நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தேசிய விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது தேசிய விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் வீரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் இலங்கை பாராளுமன்றத்தில் 13-ம் திருத்த சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வு வழங்குவதாக 24 ஆம் பக்கம் பார்க்க...

## நாடாளுமன்றத்தில் மதுபான வர்த்தகர்கள்

(கொழும்பு)

எத்தனோல் மதுசாரத்தை பயன்படுத்தி மதுபானங்களை உற்பத்தி செய்யும் தொழிலுடன் சம்பந்தப்பட்ட நான்கு பேர் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பதாக நிதியமைச்சர் ரவிகருணாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

முந்தைய அரசாங்க காலத்தில் இருந்து இந்த தொழிலுடன் இவர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அவர்களின் பெயர்களை இச்சந்தர்ப்பத்தில் வெளியிடப் போவதில்லை எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனை 24 ஆம் பக்கம் பார்க்க....

## கைது செய்யும்போது பொலிஸ் பக்கச்சார்பாக நடக்கின்றது - மகிந்த

(கொழும்பு)

நாட்டில் ஆட்களை கைது செய்யும் போது பொலிஸார் பக்கச்சார்பாக நடந்துகொள்வதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றஞ் சாட்டியுள்ளார். மஹர சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நாடாளு 24 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையின் தேசிய கீதத்தை தமிழ் மொழில் பாட முடியாது


### பொது பல சேனா, உதய கம்மன்பில எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடுவதை எதிர்ப்பதாக பிவித்துரு ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதிவழங்கியிருப்பது இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 7-வது ஷரத்துக்கு அமைய எதிரானதாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் 24 ஆம் பக்கம் பார்க்க....

ஓம் சக்தி
காரைநகர் மணற்காடு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
(C-389)
1008 கலாஷாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தி பெருவிழா
ஜய வருடம் பங்குனி 07-ம் நாள் 21.03.2015 சனிக்கிழமை காலை 6.00 மணிமுதல் கிரியைகள் நடைபெறும்
இரவு மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய பூந்தண்டிகையில் அம்பாள் அதிவிசேட வாண வேடிக்கையுடன் வீதி உலாவரும்காட்சியும், தொடர்ந்து கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம மாணவிகளின் நடனநிகழ்வும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.
ஆலய திருப்பணிச் சபையினர், மண்டலாபிஷேக பூர்த்தி உபயகாரர் "தெய்வீகத் திருப்பணி அரசு" சுப்பிரமணியம் கதிர்காமநாதன்



## தேசிய கீதத்தை தமிழில் பாடலாம்

### பிரஜைகளின் உரிமை என்கிறது அரசு

(கொழும்பு)

அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது போல், தமிழ் மொழியில் தேசிய கீதத்தை பாடுவது பிரஜைகளின் உரிமை என அரசாங்கம் தெரிவித்துள்ளது. தமிழ் மொழியில் தேசிய கீதத்தை பாட வேண்டாம் என்று கூறும் எந்த சட்டமும் நாட்டில் அமுலில் இருக்கவில்லை என அமைச்சரவை பேச்சாளரான சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை 24 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாணவர்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பு கூறுவது யார்?

## வீதி மறியலில் பெற்றோர்



(யாழ்ப்பாணம்)

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய மாணவர்கள் குடிதண்ணீருக்காகப் பயன்படுத்தப்படும் நீர் தாங்கியில் விஷம் கலக்கப்பட்டமையைக் கண்டித்து நேற்று வியாழக்கிழமை நண்பகல் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் இணைந்து பாடசாலை முன்றிலில் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு, சுன்னாகம் பொலிஸாரே உடனடியாக குற்றவாளியை கைது செய்யுங்கள் போன்ற கோஷங்களை எழுப்பி வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இதன் காரணமாக சிறிதுநேரம் வீதிப் போக்குவரத்துத் தடைப்பட்டது.

இதேவேளை - வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஏழாலை, மயிலங்காடு ஸ்ரீமுருகன் வித்தியாசாலையின் குடிதண்ணீர் தாங்கிக்குள் விஷமிகளால் நச்சுப் போத்தல் போடப்பட்டுள்ள செயலை வலி.தெற்குப் பிரதேசத் தலைவர் தி.பிரகாஸ் கண்டித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் உடன் கண்டறியப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டும் என்

# ஊழலற்ற, பேதமற்ற பணியை வழங்க பூரண ஒத்துழைப்பை வழங்குங்கள்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களில் 180 நாள் வேலையை பூர்த்தி செய்தவர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் வடமாகாண சுகாதார அமைச்சின செயலாளர் இ.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார்.

விசேட அதிதிகளாக பா.உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கு மாகாண பேரவை தலைவர் ச.வீ.கே.சிவஞானம், வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ சமூக சேவைகளும் புனர்வாழ்வும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் கலாநிதி ப.சத்தியலிங்கம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா, சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், வட மாகாண சபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, ப.அரியரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வரவேற்புரையினை மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆற்றினார்.

இந்த நிகழ்வில் நியமனக் கடிதங்களை வழங்கி வைத்து உரையாற்றிய வடக்கு மாகாண முதலமைச்சர்,

வடக்கு மாகாணத்தின் கீழ் இயங்கும் திணைக்களங்களில் தங்கள் நிரந்தர நியமனத்திற்காக காத்திருந்த பணியாளர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கி வைப்பதில் எமது வடமாகாண சபை மகிழ்ச்சி அடைகின்றது.

போராலும் பல்வேறு இடர்களாலும் பாதிக்கப்பட்ட உங்களுக்கு இந்த நிரந்தர நியமனங்கள் ஆறுதல் தரும் என்று நினைக்கின்றேன்.

இந்த நியமனங்களின் மூலம் நீங்கள் நிறைந்த அளவு மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென விரும்புகின்றோம்.

மக்களுக்கு இடையூறாக அல்லாமல் நேர்மையுடன் மக்களை நீங்கள் கவனிக்க வேண்டும். நாம் எம் மக்களை அரசியல் பேதங்களுடன் பார்க்கவில்லை.

நீங்கள் யாவரும் எமது மக்கள் என்ற அடிப்படையில்தான் நாங்கள் பணி செய்ய விரும்புகின்றோம். எனவே ஊழலற்ற, பேதமற்ற ஆட்சியை, மக்கள் பணியை வழங்குவதற்கு நீங்கள் எங்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன் என தெரிவித்தார். (செ-11)

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்.வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்வசம் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூசை, வசந்தமண்டப பூசையுடன் விநாயகப் பெருமான் திருவீதி வலம் வரவுள்ளார். (செ-11)

# கொக்குவில் மணியர்பதி முருகன் கொடியேற்றம் நாளை

## இரு இறுவெட்டுக்கள் வெளியிடப்படும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு மணியர்பதி ஸ்ரீசிவ சுப்பிரமணியர் ஆலய மஹோற்சவம் நாளை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அன்றைய தினம் ஈழத்தின் தலைசிறந்த தவில் நாதஸ்வர கலைஞர்களுடன் தென்னிந்திய தவில் மேதை மன்னார்க்குடி கல்யாண சுந்தரம் குழுவினரின் மேளக்கச்சேரி இடம் பெறும்.

தொடர்ந்து பன்னிரு திருமுறைகள், பயன்மிகு பதிகங்கள் எனும் இரண்டு இறுவெட்டுக்கள் வெளியிடப்பட்டு இலவசமாக வழங்கப்படுவதுடன் அன்னதான நிகழ்வும் இடம்பெறும். (ரு)

# நாயின் நகக் கீறலுக்குள்ளான இளம் குடும்பஸ்தர் மரணம்

நாயின் நகக் கீறலுக்குள்ளான இளம் குடும்பஸ்தர் ஒருவர் நான்கு மாதங்களின் பின்னர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் வீதியால சென்ற நாயைப் பிடிக்க முற்பட்ட வேளையில் அது தனது காலால் கீறிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இதனை கவனிக்காமல் விட்ட குறிப்பிட்ட நபர் நோய்வாய்ப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கு கொண்டு சென்ற போதிலும் பாதிக்கப்பட்டவரை தனியார் வைத்தியசாலைஏற்க மறுத்த நிலையில் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பும் வழியில் நேற்று வியாழக்கிழமை அவர் உயிரிழந்துள்ளார்.

ஏழாலை வடக்கைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான மகாலிங்கம் கமல்ராஜ் (வயது 46) என்பரே உயிரிழந்தவராவர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பிரேத பரிசோதனையைத் தொடர்ந்து, உடனடியாக இறுதிக்கிரியைகளை மேற்கொள்ளும்படி கூறி சடலம் பொதி செய்யப்பட்ட நிலையில் உறவினர்களிடம் வழங்கப்பட்டது. (செ-11)

# நவ்ரு தீவு முகாமில் பாரிய ஆர்ப்பாட்டம்



நவ்ரு தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை கண்டித்து நேற்று பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவில் புகலிடம் கோரி வந்தவர்கள் நவ்ரு முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த 17-ம் திகதி அகதிகள், நவ்ரு மக்கள் மற்றும் அதிகாரிகளுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக பாரிய கலவரம் வெடித்தது.

இந்தக் கலவரத்தில் அகதிகள் பலர் பலத்த காயங்களுக்கு உட்பட்டிருந்தனர்

இந்த சம்பவத்தை கண்டித்து நேற்று பாரிய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

3 வயது தொடக்கம் 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் இதற்கான வழக்கினை தொடரும்படி அகதி அமைப்புகளை கேட்டுள்ளதாக அகதி ஆர்வலர் இயன் தெரிவித்துள்ளார். நேற்றைய ஆர்ப்பாட்டத்தின் போதும் அகதிகள் தாக்கப்பட்டுள்ளதாகவும் இயன் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)


## விசேட கருத்தரங்குகள்

- சிறைச்சாலை ஜெயிலர் மற்றும் புனர்வாழ்வு உத்தியோகத்தர் பரீட்சைக்கு வெள்ளி (இன்று) 12 மணி, சனி 9.00-3.00 மணிவரை
- வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் மற்றும் வருமானப் பரிசோதகர்.
  சனி, ஞாயிறு 10.00-2.00 மணிவரை
- அரச முகாமைத்துவ உதவியாளர்
  ஞாயிறு 2.00 மணி
- அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் தடைதாண்டல் பரீட்சை சனி, ஞாயிறு 11.00 மணி.

தொ.பே:-0766883394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புப் பிரிவு
(ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷியல் வங்கி அருகில்)

(சி-408)



# மாநகர சபை-யாழ்ப்பாணம்

## திண்மக் கழிவு மற்றும் திரவக் கழிவு பதனிடல் வேலைக்கான விண்ணப்பம் கோரல்-2015

யாழ்.மாநகர சபையினால் சேகரிக்கப்படும் திண்ம மற்றும் திரவக் கழிவுகளை பதனிடும் வேலைகளை பின்வரும் அடிப்படையில் மேற்கொள்வதற்கு ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

| இல | வேலையின் விபரம் |
|---|---|
| 01 | சேதனக்கழிவுகளைப் பயன்படுத்தி கூட்டெரு தயாரித்தல் |
| 02 | பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளினை மீள் சுழற்சிக்குட்படுத்துதல் |
| 03 | மனித கழிவுகளினை ஏரியூட்டி சூழல் பாதிப்படையாதவாறு அகற்றல் |

மேற்படி திட்டங்களினை செயற்படுத்துவதற்கான நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான தகவல்களினையும் விண்ணப்ப படிவங்களினையும் யாழ்.மாநகர சபையின் வேலைப்பகுதியுடன் தொடர்பு கொண்டு பெற்று 31.03.2015 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

20.03.2015

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

(சி-407)



## விற்பனையாளர் உடன் தேவை

யாழ்.நகரில் உள்ள பிரபலமான புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள அல்லது பழக விரும்பும் பெண் விற்பனையாளர் உடன் தேவை. சீட்டை எழுதுநர் (பெண் 20-30 வயதிற்கிடையில்)

- குறிப்பு:-யாழ்.நகரில் இருந்து 10KMக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-0775556904, 0213213117

(சி-406)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**Workshop on Water Conflicts Resolution, Treatment & Desalination**

Department of Civil Engineering, Faculty of Engineering, University of Jaffna is organizing a workshop on water conflicts resolution and desalination. Workshop targets to cover research areas of reverse osmosis, water treatment, conflict resolution, climate change and resilience of water bodies and a few more related to water. This workshop is funded by Water and Society (WaSo) Project of University of Jaffna. Following resource persons are enlightening the event:

1. Prof. Harsha Rathnaweera, Norwegian University of Life Sciences, Norway.
2. Prof. Tore Saetersdal, Telemark University College, Norway.
3. Prof S. B. Weerakoon, University of Peradeniya.
4. Dr. A. Atputharajah, Dean, Faculty of Engineering, University of Jaffna.
5. Dr. S. S. Sivakumar, Head/Civil, University of Jaffna.
6. Dr. S.J. Arasakesari, Deputy Director, Regional Agriculture Research and Development Center, Kilinochchi.
7. Eng. D. S. Sampath, Lecturer/Civil, Faculty of Engineering, University of Jaffna.

**Venue** : Department of Civil Engineering, University of Jaffna, Ariviyal Nagar, Kilinochchi.

**Date** : 18th and 19th of April 2015

**Target group**: Engineers, researchers and scientists from industry, academics, university undergraduates and postgraduates in the fields of Engineering, Agriculture and Science.

Registration, workshop materials, lunch, refreshment, workshop tour and certificates will be free of charge. Certificates will be awarded upon sucess ful completion of the event.

A limited number of participants (50) will be accepted for the event and there fore please register on or before 5th April 2015 by dropping an email with your brief CV to wasojaffna@gmail.com. Registration will be done on the first come first serve basis only. For further details, contact Coordinator (WaSo workshop), Eng. Saliya Sampath (saliya@jfn.ac.lk, Mobile: 077-6993908)

**Registrar**

Sponsored by : NORHED Program of NORAD, Norway (C-404)

Asia Africa


# மஹர சிறையில் மகிந்த ராஜபக்ஷ



முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜ பக்ஷ மஹர சிறைச் சாலைக்கு நேற்று சென்று அங்கு தடுத்து வைக்கப்பட் டுள்ள முன்னாள் பிரதியமைச்சர் சரண குணவர்தனவை பார்வையிட்டார். (இ-5)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்) கச்சேரி நல்லூர் வீதி பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற் சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் ஞாயி ற்றுக்கிழமை முற்ப கல் 10 மணியளவில் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர் ந்து 15 தினங்கள் மஹோற்சவம் இடம் பெறவுள்ளது. (இ


## அறிவித்தல்

**கூறுவிலை**

யாழ். மாநகர சபையின் பண்ணையிலுள்ள கொல் களத்தில் இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளை பரிசீலனை செய்து அனுமதி வழங்குவதற்கான கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட மிருக வைத்திய அதிகாரிகளிடமிருந்து கோரப்படுகின்றது. தங்களால் சுயமாக தயாரிக்கப்பட்ட கூறுவிலை படிவத்தில் தங்களால் கோரப்படும் பரிசோதனைக் கட்டணத்தினை குறிப்பிட்டு (எழுத்தினாலும்) 26.03.2015ஆம் திகதிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக ஆணையாளர் , மாநகர சபை என்னும் முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

**19.03.2015**
**மாநகரசபை அலுவலகம்**
**யாழ்ப்பாணம்.**

(C-403)

## பெயர் மாற்றம்

மீசாலை கிழக்கு மீசாலையில் வசிக்கும் நாகராசா செகேஸ்வரி ஆகிய நான் 20.03.2015 இன்று முதல் எனது பெயரை லிங்கேஸ்வரன் ஜெகதீஸ்வரி என மாற்றிக் கொள்கின்றேன் என்பதையும் இனிவரும் காலங் களில் சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
**லிங்கேஸ்வரன் ஜெகதீஸ்வரி.**
(9840)

## பணியாளர் தேவை

கிளிநொச்சி நகரில் உள்ள ஸ்ரூடியோவிற்கு Photoshop நன்கு தெரிந்த பணியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். கிளிநொச்சி நகரை அண்மித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: கிரி கலர் லாப்,**
**077 261 6970**
(சி-400)

## வேலையாள் தேவை

மிக்ஷர் பொதி செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. (மானிப்பாய் பகுதியை அண்டியவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு:
021 225 5278, 077 772 5582
(சி-380)

## விற்பனைக்கு

கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள 3 மாடிக்கட்டடம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-**
**077 873 6561**


# இராசி பலன்

*20.03.2015*
*(பங்குனி 06, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு*
*அமாவாசை பிற்பகல் 4.08 மணிவரை*
*பூரட்டாதி பிற்பகல் 12.32 மணிவரை*
*இராகுகாலம் 10.48-12.18 மணிவரை*
*சுபநேரம் 6.18-7.48 மணிவரை*
*குழந்தைவேற் சுவாமிகள் விரதம்,*
*அமாவாசை விரதம்*

**வளவன்**

**மேடம்** — சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், பயணங்கள் இடம்பெறலாம்.

**இடபம்** — இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** — எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், அரசு வழியில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, வழிபாட்டால் குதூகலம் காண்பீர்கள்.

**கடகம்** — முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** — காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** — மகிழ்ச்சிதரும் பயணங்கள் இடம் பெறலாம், பெண்களின் சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** — தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உடல்நலனில் முன்னேற்றம் ஏற்படும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறுவதற்கு வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** — தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு** — பெற்றோர் மீது பிரியம் கூடும், திட்டமிட்ட காரியத்தைச் செய்து முடிப்பீர்கள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மகரம்** — விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள்,குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பாகப் பிரிவினைகள் அகலும்

**கும்பம்** — நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தினர் பெரு மைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம் விரதங்களில் நம்பிக்கை கூடும்

**மீனம்** — வழிபாட்டால் திருப்திகாண வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தனை யுண்டு, திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக் கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 166

## பயத்தை எதிர்கொள்ளல்

...வெளியிலிருந்து கவனித்தால்தான், எவ்வளவு முட்டாள்தனமான விளையாட்டு விளையாடப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்வீர்கள். நான் எப்பொழுதும் மக்களிடம் சொல்வதுண்டு.... நடிகர்களுக்கும், நடிகைகளுக்கும் வாழ்க்கையை ஒரு விளையாட்டாகப் பார்ப்பது மிகவும் சுலபம்; ஏனெனில், அவர்கள் எப்பொழுதும் ஏதோ பாத்திரங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கையை ஒரு பெரும் நாடகமாகப் பார்ப்பதில் அவர்களே மிகவும் நெருங்கி வருகிறார்கள். மற்ற அனைவரும் தமது பாத்திரங்களில் மிகவும் சிக்கிக் கொண்டிருப்பதால் அதுவே நமக்கு திடமான நிஜமாகிவிடுகிறது.

பெண்கள் மிகவும் பயந்தவர்களாக இருப்பதற்குக் காரணம் அவர்கள் உளவியல் ரீதியாக அப்படி உருவாக்கப்பட்டிருப்பதுதான். ஆணும் பெண்ணும் உடலளவில் மட்டுமின்றி உளவியல் ரீதியாகவும் வேறுபட்டே இருக்கிறார்கள்.

ஸ்வாமிஜி, சின்னச் சின்ன விடயங்களுக்குக்கூட பயப்படுவதிலிருந்து வெளியே வருவது எப்படி?

முதலில் எல்லாச் சின்னச் சின்ன பயங்களுமே, இறுதியான மரணத்தைப் பற்றிய பயத்தின் வெறும் பிரதிபலிப்புகள்தான் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். இரண்டாவது உங்கள் பயத்தை எதிர்க்காதீர்கள்; வெறுமனே உங்களுக்கு பயமாக இருக்கிறது என்பதை மட்டும் திரும்பத் திரும்ப உங்களுக்குள் சொல்லிக் கொண்டு அதை அனுபவியுங்கள்.



அவ்வளவுதான்! பயம் உங்களிடம் இருந்து போய்விட்டது என்பதை நீங்கள் வெகு சீக்கிரத்தில் கண்டு கொள்வீர்கள். ஏனெனில், நீங்கள் அதைப் பார்த்து அனுபவித்துவிட்டீர்கள். நீங்கள் ஒவ்வொரு முறை பயத்தை உணரும் பொழுதும் இதைச் செய்ய ஆரம்பியுங்கள்.

இதில் நீங்கள் விழிப்புடன் செயற்படும் பொழுது பயம் என்று நீங்கள் அழைப்பது ஏதோ ஒரு நிகழ்விற்கோ அல்லது ஒரு எண்ணத்திற்கோ உங்களுடைய பதில் அல்லது எதிர்ச் செயலைத் தவிர வேறல்ல என்பதைப் புரிந்து கொள்வீர்கள். உங்களுக்கு பயம் இருந்ததா இல்லையா என்பது உங்களுடைய பதிலைப் பொறுத்தது. மேலும் மேலும் விழிப்புணர்வுடன், உங்களால் பயத்திற்கு பயமில்லாமல் பதில் கொடுக்க முடியும்!

ஒரு விடயத்தை நினைவு கொள்ளுங்கள்... யாருமே பயமற்றவர் என்று உரிமை கோர முடியாது. பயத்தை பயமில்லாமல் கையாளுவதைக் கற்றுக்கொள்ள முடியும், அவ்வளவே, யாராவது பயமற்றவர் என்று பாசாங்கு பண்ணிக் கொண்டிருந்தால், அவர்கள்; பயத்தையும் அதற்கு மனிதனின் பதிலையும் பற்றி ஆழமாக ஆராய்ந்து பார்க்கவில்லை என்பதில் தெளிவாக இருங்கள். அவர்கள் மனித ஆற்றலை மீறிய சக்தி படைத்தவர்கள் என்றும் நீங்கள் தகுதி குறைவானவர்கள் என்றும் எண்ண ஆரம்பித்துவிடாதீர்கள்.

ஸ்வாமிஜி, நீங்கள் என்னுடைய சிலந்திகள் பற்றிய பயத்தை வெல்லுமாறு செய்ததை நினைவு கூர்கிறேன்!

(பரமஹம்ஸர் சிரிக்கிறார்) ஆமாம் ஆமாம், எப்படியென்று அவர்களுக்கு சொல்லும்மா!

(ஒரு சிறுமி சொல்கிறாள்) ஒரு நாள் நாம் பேசிக்கொண்டிருந்த பொழுது ஒரு சிலந்தியைப் பார்த்து நான் துள்ளிக் குதித்தேன். அதற்காக நீங்கள் என்னைப் பார்த்து சிரித்தீர்கள். நான் ஒவ்வொரு முறை சிலந்தியைப் பார்க்கும் பொழுதும் அதன்மீது என்னைத் தியானம் செய்யச் சொன்னீர்கள். நான் அதை கவனத்துடன் பின்பற்றினேன். ஒவ்வொரு முறை அதைப் பார்க்கும் பொழுதும் விழிப்புணர்வுடன் மனதை ஒருமுகப்படுத்தி அதைப் பார்த்தேன்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

## துடிக்கவில்லை... ஆனால் இதயம் இயங்குகிறது!

துடிப்பின்றி இயங்கும் இயந்திர இதயத்தை அவுஸ்திரேலியா விஞ்ஞானி ஒருவர் உருவாக்கியுள்ளார். அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேனை சேர்ந்த மருத்துவர் டேனியல் டிம்ஸ் (Daniel Tims) என்பவர் துடிப்பின்றி இயங்கும் இயந்திர இதயத்தை வடிவமைத்துள்ளார். இந்த இதயமானது முதன் முறையாக செம்மறி ஆட்டுக்கு பொருத்தி வெற்றிகரமாக பரிசோதனை செய்யப் பட்டுள்ளது.



இந்த இயந்திர இதயத்தில் சிறிய பிளேடு டிஸ்க் (Blade stick) உள்ளது. இது நிமிடத்துக்கு 2 ஆயிரம் தடவை சுழன்று துடிப்பின்றி உடல் முழுவதும் ரத்தத்தை பாய்ச்சும் திறன் படைத்தது

கடந்த ஜனவரி மாதத்தில் பிரிஸ்பேன் (Brisbane), டெக்காஸ் (Tekkas), சிட்னி (Sydney) மற்றும் மெல்போர்ன் (Melbourne) நகரங்களை சேர்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்கள் செம்மறி ஆட்டின் இருதயத்தை அகற்றிவிட்டு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குரிய அளவிலான இயந்திர எலெக்ட்ரானிக் இதயத்தை பொருத்தி வெற்றிகரமாக சோதித்தனர். இதே முறையில் மனிதர்களுக்கும் இந்த இதயத்தை பொருத்த முடியும் என நம்புகின்றனர். இன்னும் 3 ஆண்டுகளில் மனிதர்களி[illegible] சோதனை முயற்சி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சமைப்போம் சுவைப்போம்

## வெஜிடபிள் குழிப்பணியாரம்



**தே.பொருட்கள்:**

இட்லி மா- 1 கப்,
வெங்காயம் சிறியது - 1,
கரட் துருவல்,
முட்டைக்கோஸ் துருவல் - தலா 2 டேபிள் ஸ்பூன்,
கறிவேப்பிலை- சிறிதளவு,
இஞ்சி- சிறிய துண்டு
பச்சை மிளகாய் -1
எண்ணெய், உப்பு தே.அளவு.

**செய்முறை:**

வெங்காயம், கறிவேப்பிலை, பச்சை மிளகாய் ஆகியவற்றை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். இஞ்சியை தோல் சீவி பொடியாக நறுக்கிக் கொள்ளவும். இட்லி மாவில் வெங்காய துண்டுகள், கரட் துருவல், முட்டைக்கோஸ் துருவல், நறுக்கிய கறிவேப்பிலை, இஞ்சி, பச்சை மிளகாய் துண்டுகள், உப்பு சேர்த்துக் கலக்கவும். குழிப்பணியார சட்டியில் எண்ணெய் கொஞ்சம் விட்டு, மாக்கலவையில் ஒரு ஸ்பூன் அளவு எடுத்து விடவும். வெந்ததும் திருப்பி விட்டு நன்கு வெந்ததும் [illegible]டுக்கவும். (சத்து நிரம்பிய இந்த பணியாரம், எல்லா சட்னியும் தொட்டு சாப்பிட ஏற்றது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# லீஸ்மானியாசிஸ் (Leishmaniasis) காவியான Sandfly பற்றி விலங்கியல் துறை, யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆய்வுகள்



Phlebotomus argentipes ஆண்

Sandfly ஆனது மண்ணிறமான உடலைக் கொண்ட 5mm இலும் குறைவான நீளமுடைய சிறிய பூச்சிகளாகும். இவற்றின் உடல் முழுவதும் அடர்த்தியான மயிர்கள் காணப்படுகின்றது. இந்த பூச்சிகள் ஓய்வில் இருக்கும் போது அவற்றின் செட்டைகள் "V" வடிவில் அமைந்திருப்பதைக் கொண்டு இவற்றை வேறு பூச்சிகளிலிருந்து பிரித்தறிய முடியும்.

பாகுபாட்டியலாளர்கள் Sandfly இனை இராச்சியம் (Kingdom)- Animalia; கணம் (Phylum)-Arthropoda, வகுப்பு (Class) - Insecta, வருணம் (Order)-Diptera, குடும்பம் (Family)-Psychodidae இனை சேர்ந்த பூச்சி வகை என பாகுபடுத்தியுள்ளனர். Family –Psychodidae இல் பல சாதிகள் (Genus) காணப்படுகின்றன. அவையாவன Phlebotomus, Sergentomyia, Chinius, Lutzomyia, Wareleia, Brumptomyia என்பனவாகும். இவற்றில் Phlebotomus, Sergentomyia, Chinius என்பன old world நாடுகளிலும் Lutzomyia, Wareleia, Brumptomyia என்பன New world நாடுகளிலும் காணப்படுகின்றன. இவற்றில் Phlebotomus, Sergentomyia சாதிகளைச் சேர்ந்த இனங்கள் இலங்கையில் காணப்படுகின்றன.

Sandfly கள் Leishmania வகையைச் சார்ந்த புரொட்டோ சோவாக்களை காவுகின்ற காவியாகக் காணப்படுவதுடன் மனிதர்களிலும், விலங்குகளிலும் நோயைப் பரப்புகின்றன. Leishmania மனிதர்களிலும் விலங்குகளிலும் Leishmaniasis என்ற நோயை ஏற்படுத்துகின்றது. பெண் Sandfly கள் தமது முட்டை விருத்திக்காக விலங்குகளின் உடலில் இருந்து குருதியை உறிஞ்சுகின்றன. நோயாக்கியான Leishmania தொற்றுதலுக்குள்ளான Sandfly மனிதர்களைக் கடிக்கும் போது நோயாக்கியை அவர்களின் உடலினுள் செலுத்துகின்றது. அல்லது தொற்றுதலுக்குள்ளானவர்களை Sandfly கடிக்கும் போது



Phlebotomus salehi மேலே பெண் கீழே ஆண் பூச்சிகள்

Leishamania Sandfly இன் உடலினுள் சென்று பின்னர் ஏனையோருக்கு நோய் பரவ காரணமாகின்றது.

900இற்கும் அதிகமான Sandfly இனங்கள் உலகில் காணப்படுகின்ற போதிலும் சில இனங்கள் மட்டுமே நோயைக் காவுகின்றன. ஆகவே நாம் இலங்கையில் காணப்படும் Sandfly இனங்களை அடையாளங் காண்பதுடன் இவற்றில் எது அல்லது எவை காவியாகத் தொழிற்படுகின்றதெனவும் கண்டறிதல் வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விலங்கியல் துறையிலும் Sandfly தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேசிய ஆராய்ச்சி சபை (National Research Council) 2006ஆம் ஆண்டு வழங்கிய நிதியுதவியுடன் (Grant- NRC/06/24) இலங் கையின் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட Sandfly களை இனங்கண்டதன் மூலம் Phlebotomus argentipes. Phlebotomus Salehi Sergentomyia rudnicki, Sergentomyia baghdadis, Sergentomyia barraudi, Sergentomyia



grekovi, Sergentomyia malayae Sergentomyia Punjabensis, Sergentomyia babu insularis, Sergentomyia dentata போன்ற இனங்களை அறிக்கைப்படுத்தினார்கள்.

மேலும் இவை தொடர்பான ஆய்வுகளுக்கு மீண்டும் 2011இல் தேசிய ஆராய்ச்சி சபை (National Research Council) வழங்கிய நிதியுதவியுடன் (Grant- NRC/11/64) Sandfly தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர்ச்சி யாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் Sergentomyia babu babu, Sergentomyia arboris. Sergentomyia zeylanica போன்ற இனங்களும் அடையாளப்படுத்தப்பட்டன. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களில் Phlebotomus argentipes பிரதான காவி யாக இருக்கலாமென கருதப்படுகின்றது. Phlebo tomus argentipes, Phlebotomus salehi ஆகிய இரண்டும் இந்தியாவில் காவி யாக காணப்படுகின்றது. ஆயினும் ஆராய்ச்சிகள் வழியாக காவியினங்கள் எவையென உறுதிப்படுத்தல் வேண்டும்.

Sergentomyia சாதியினைச் சேர்ந்த இனங்கள் பொதுவாக நகருயிர்கள். பறவைகளின் குருதியை உறிஞ்சுகின்றன. ஆயினும் இதில் சில இனங்கள் மனிதனின் குருதியை உறிஞ்சுவதுடன் சில ஆய்வுகள் மூலம் அவற்றில் Leishmania இனையும் கண்டறிந்துள்ளனர். எமது ஆய்வுகளிலும் Sergentomyiazeylanica போன்றவற்றில் மனிதனின் குருதி காணப்படுவதை அவதானித்துள்ளோம்.

இதுவரை இலங்கையில் அறியப்பட்டுள்ள நிலப்பூச்சி இனங்கள் கீழ் வருமாறு:

**Genus: Sergentomyia Franca & Parrot**

1.Subgenus: Sergentomyia Franca & Parrot
a.Se. (Ser.) punjabensis Sinton
b.Se. (Ser.)dentata Sinton *
c.Se. (Ser.) pondicherriensis Srinivasan & Jambulingam*

2.Subgenus: Parrotomyia Theodor
a. Se. (Par.) franciscana Quate
b. Se. (par.) babu insularis Theodor
c. Se. (par.) rudnicki Lewis *
d. Se. (par.) baghdadis Adler & Theodor*
e. Se.(par.) species A Kaul, Dhanda & Modi*
f. Se. (par.) modii Lewis *
g. Se. (par.) grekovi Khodukin*
h. Se. (par.) bailyi Sinton*
i. Se. (par.) species B Kaul, Dhanda & Modi

3. Subgenus: Grassomyia Theodor
a. Se. (Gra.) dreyfussi turkestanica Theodor & Mesghali
b. Se. (Gra.) indica Theodor*

4.Subgenus: Neophlebotomus Franca & Parrot
a. Se. (Neo.) malayae Lewis*
b. Se. (Neo.) zeylanica Annandale*
c. Se. (Neo.) arboris Sinton
d. Se. (Neo.) jamesi


5. Subgenus: Demeillonius Davidson
a. Se. (Dem.) sp.*

**Genus: Phlebotomus Rondani & Berte**

1. Subgenus: Phlebotomus
a. Ph. (Phl.) salehi Mesghali*

2. Subgenus: Euphlebotomus Theodor
a. Ph. (Eup.) argentipes Annandale & Brunette sibling species A and B*


3. Subgenus: Anaphlebotomus
a. Ph. (Ana.)stantoni Newstead



இலங்கையில் இவற்றின் பரம்பல் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.

Leismaniasis நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அந்த நோயைக் காவுகின்ற நோய்க்காவியான Sandfly இனக் கட்டுப்படுத்துதல் சிறந்த வழிமுறையாகும். இதற்காக மேலதிக ஆய்வுகள் மூலம் இந்த நோயைக் காவுகின்ற காவியினத்தை/ காவிகளைக்

த.தர்மதா
ஆராய்ச்சி உதவியாளர்
விலங்கியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்




1-Delft Island; 2- Pungudutheevu; 3-Chunnakam and Jaffna mainland; 4-Anuradhapura; 5- Putalam; 6- Hambantota; 7- Matara; 8- Colombo and suburbs; 9-Kurunagale; 10- Vavuniya; 11- Padaviya and Siripura; 12- Trincomalee

## வாரத்திற்கு ஒரு புதிர்! 132

டிரான்ஸ் ஜெனிக் (Transgenic) என்றால் என்ன?

புதிர் 132 இற்கான விடைகளை 30.03.2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

திரு.க.கஜபதி
ஆசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி
யாழ். பல்கலைக்கழகம்.

**புதிர் 131 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

ச.சாருண்யா,
வற்றாப்பளை, முள்ளியவளை,
முல்லைத்தீவு

**புதிர் 131 க்கான கேள்வியும் விடையும்:**

சந்திராயன் என்ற இந்தியாவின் நிலாவுக்கான விண்வெளி ஓடம் எந்த ஆண்டு ஏவப்பட்டது.?

2008

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 132

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சத்தியமே வெல்லும்!

அக்பருடைய சபையிலிருந்தவர்கள் அனைவரிலும், பீர்பால் மட்டுமே அக்பரின் பிரியத்திற்குப் பாத்திரமானவராக இருந்தார். இதனால் பீர்பால் மீது சபையில் பலர்



பொறாமை கொண்டிருந்தனர்.

ஒருநாள், பீர்பால் மீது பொறாமை கொண்டவர்கள் ஒன்றுகூடி அவருக்கு எதிராக சதி ஆலோசனை செய்தனர். அவருக்கு எப்படியாவது கெட்ட பெயரை உண்டாக்கி விட வேண்டும் என்று அவர்கள் விரும்பினர்.

ஒவ்வொருவரும் ஒரு யோசனை கூற, தாவூத் என்பவர் பீர்பாலை அவமானப்படுத்த தன்னிடம் ஓர் அருமையான திட்டம் இருப்பதாகக் கூறினார்.

"பீர்பாலைப்பற்றி தவறாக எது சொன்னாலும் சக்கரவர்த்தி நம்ப மாட்டாரே!" என்று மற்றவர்கள் சந்தேகம் எழுப்ப, "சொல்கிற விதத்தில் சொன்னால், சக்கரவர்த்தி கட்டாயம் நம்புவார்" என்று தாவூத் அடித்துக் கூறினார். உடனே மற்றவர்கள் தாவூதை உற்சாகப்படுத்தினர்.

"என் திட்டம் வெற்றி பெற வேண்டுமானால், நீங்கள் எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும!" என்று தாவூத் கூற, "அது என்ன?" என்று மற்றவர்கள் கேட்டனர்.

"நாளைக்கு நீங்கள் அனைவரும் வழக்கப்படி குறித்த நேரத்தில் தர்பார் வந்து சேருங்கள்.

நான்மட்டும்தாமதமாகவருவேன். நான் ஏன் வரவில்லை என்று சக்கரவர்த்தி உங்களைக் கேட்பார். உடனே நீங்கள், "தாவூத் ஒரு பயங்கரமான குற்றத்தைத் தன் கண்களால் பார்த்துவிட்டார். அது அவருடைய மனதை மிகவும் பாதித்து விட்டது. அதனால் அவர் தாமதமாக வருவார்" என்று சொல்லி விடுங்கள். பிறகு நான் வந்து அது என்ன என்று அவரிடம் விளக்கிக் கூறுவேன்" என்று கூறினார் தாவூத்.

அனைவரும் அதற்கு சம்மதித்தபின் வீடு திரும்பினர். மறுநாள், தர்பார் கூடியது. பீர்பால் உட்பட அனைவரும் குறித்த நேரத்தில் தர்பாருக்கு வந்துவிட்டனர். தாவூத் மட்டும் வரவில்லை. அக்பர் தர்பாரில் நுழைந்ததும் அனைவரும் எழுந்து சலாம் செய்தனர். அக்பரும் புன்னகைத்தபடி தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அனைவர் மீதும், தன் பார்வையை செலுத்தினார்.

அதற்குள் ஒருவன் எழுந்து, "பிரபு! தாவூத் இன்று தாமதமாக வருவதற்குத் தங்களிடம் அனுமதி கோரியுள்ளார்!" என்றார்.

"தாமதமாக வர என்ன காரணம்?" என்று அக்பர் கேட்டார். "ஒரு பயங்கரமான குற்றத்தை தன் கண் முன்னே நடக்கக் கண்டார். இதனால் அவருடைய உடல் சோர்ந்து விட்டது. ஆகையால் சிறிது தாமதமாக வருவதாகக் கூறியுள்ளார்!" என்றார் அவர்.

சற்றுநேரத்தில் தாவூதே வந்து சேர்ந்துவிட்டார். உடனே அக்பர் அவரைப் பார்த்து, "ஒரு பயங்கரமான குற்றம் நிகழ்வதை நீ பார்த்தாயாமே!" என்று கேட்டார்.

"ஆம் பிரபு!" என்றார் தாவூத். "அது என்ன குற்றம்? உடனே சொல்! யார் அந்தக் குற்றவாளி?" என்று அக்பர் சீறினார்.

"அதை எப்படி என் வாயால் சொல்வேன் பிரபு? உங்களுடைய மிகுந்த நம்பிக்கைக்கும், அபிமானத்திற்கும் பாத்திரமான அவரைப் பற்றி என் வாயினால் எப்படிச் சொல்வேன் பிரபு? அதைக் கேட்டால், உங்கள் மனம் மிகவும் புண்படுமே!" என்று தாவூத் நாடகமாடினார்.



"சட்டத்தின் முன் அனைவரும் சமம்! அவன் யாராயிருந்தாலும் சரிதான்! அவன் யாரென்று உடனே சொல்!" என்று அக்பர் உறுமினார்.

"வேறு யாருமில்லை பிரபு! உங்களுடைய பீர்பால்தான் அது!" என்றதும் அக்பர் அதிர்ச்சியுற்றார்.

பீர்பாலும் அதிர்ச்சியுற்றார். ஆனால் பீர்பால் உடனே விடயத்தைப் புரிந்து கொண்டார்.

தன் மீது வீண் பழி சுமத்த தாவூத் திட்டமிட்டுள்ளார் என்று தெரிந்துவிட்டது.................

(தொடரும்)

## சிட்டுக் குருவி



சிட்டுக்குருவி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பறவையினத்தைச் சேர்ந்த உயிரினமாகும். சிட்டுக் குருவிகள் பசரீன்கள் குடும்பத்தைச் சார்ந்தவை.

புறநானூற்றில் உள்ள குரீஇ என்ற சொல்லே மருவி குருவி என்றானது என்பர்.

இந்தியாவில் இவை வீட்டுக்குருவிகள், அடைக்கலக்குருவிகள், ஊர்க் குருவிகள், சிட்டுக்குருவிகள் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன. காகத்திற்கு அடுத்து மனிதனுக்கு நன்கு அறிமுகமான பறவை குருவியாகும்.

இதன் முட்டைகள் பச்சை கலந்த வெள்ளை நிறத்தில் இருக்கும். ஆண், பெண் இரண்டுமே முட்டைகளையும், இளம் உயிரிகளையும் பாதுகாத்து வளர்க்கின்றன. குஞ்சுகள் பெரிதாகும் வரை கூட்டிலேயே வளர்கின்றன. பறக்கத் தொடங்கியவுடன் தனியே பிரிந்து விடுகின்றன.

சிட்டுக் குருவிகளின் வாழ்நாள் சுமார் 13 ஆண்டுகளாகும். சிட்டுக்குருவிகள் மனிதர்கள் இருக்கும் பகுதிகளிலேயே வசித்தாலும் மனிதர்களோடு பழகுவதில்லை.

மரத்திலும், வீடுகளின் மறைவான இடங்களிலும் வைக்கோல் போன்ற மெல்லிய பொருட்களைக் கொண்டும் கூடு கட்டி வசிக்கின்றன. இவற்றின் கூடுகள் கிண்ண வடிவில் இருக்கும். இவை குளிர் காலத்தில் கூட்டமாக ஒரு புதரில் ஒன்று சேர்ந்து இரவைக் கழிக்கின்றன.

சிட்டுக் குருவிகள் அனைத்துண்ணிகள். தானியங்களையும், புழு, பூச்சிகளையும் உணவாக உட்கொள்ளும். சில வகைக் குருவிகள் பூமொட்டுகளையும் உண்ணும்.

சுற்றுச் சூழல் மாற்றங்களால் நாம் ஏற்படுத்தும் பல இழப்புகளில் மரங்களும் பறவைகளும் உலகெங்கும் அழிந்தும், குறைந்தும் வருவதால் சுற்றுச் சூழல் சீர்கெட்டு உலகம் வெப்பமயமாகி இயற்கைப் பேரழிவுகள் நேர்கின்றன. தற்போது பல நகர்ப்புறங்களில் இவை முற்றிலுமாக அழிந்துவிட்டன அலைபேசியில் இருந்து வெளிவரும் (நுண்ணலைகள்) மின்காந்த அலைகளின் தாக்கம் இந்த குருவியினத்தின் இனப்பெருக்க மண்டலத்தை தாக்கி அவற்றை மலடாக மாற்றி விடுவதனால் இவற்றால் தங்களின் இனத்தை பெருக்க இயலவில்லை என கண்டறியப்பட்டுள்ளது.

சிட்டுக் குருவி இனத்தை அழியாமற் காக்க வேண்டும் என்று சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் வேண்டி வருகிறார்கள். எனவே மார்ச் 20 ஆம் திகதியை உலக ஊர்க்குருவிகள் தினமாகக் கொண்டாடி அவற்றைக் காக்கப் போராடி வருகின்றனர். இதனை உணர்த்தும் வகையில் பல நாடுகள் அஞ்சல் தலைகள் வெளியிட்டுப் பெருமைப்படுத்தியுள்ளன.

## 03.2015 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கிமு 44 - ஜூலியஸ் சீசரின் இறுதி நிகழ்வுகள் இடம் பெற்றன.
- 1602 - டச்சு கிழக்கிந்தியக் கம்பனி அமைக்கப்பட்டது.
- 1616 - சேர் வால்ட்டர் ரலி 13 ஆண்டுகள் சிறைவாசத்திற்குப் பின்னர் லண்டனில் விடுவிக்கப்பட்டார்.
- 1739 - நாதிர் ஷா டில்லியை கைப்பற்றி நகரைச் சூறையாடினான்.
- 1760 - பாஸ்டன் நகரில் இடம்பெற்ற பெரும் தீ நகரில் 349 கட்டடங்களை அழித்தது.
- 1815 - எல்பா தீவில் இருந்து தப்பிய நெப்போலியன் 140 ஆயிரம் இராணுவப் படைகளுடனும் 200 ஆயிரம் தன்னார்வப் படைகளுடனும் பாரிஸை மீண்டும் கைப்பற்றி "நூறு நாட்கள்" ஆட்சியை ஆரம்பித்தான்.
- 1861 - மேற்கு ஆர்ஜெண்டீனாவில் இடம்பெற்ற நில நடுக்கம் மெண்டோசா நகரை முற்றாக அழித்தது.
- 1916 - அல்பர்ட் ஐன்ஸ்டீன் தனது சார்பியற் கோட்பாட்டை வெளியிட்டார்.
- 1948 - சிங்கப்பூரில் முதலாவது தேர்தல் இடம்பெற்றது.
- 1956 - பிரான்சிடம் இருந்து துனீசியா விடுதலை பெற்றது.
- 1974 - லண்டன், பக்கிங்ஹாம் அரண்மனையின் வெளியே ஆன் இளவரசி, அவரது கணவர் கப்டன் மார்க் பிலிப்ஸ் ஆகியோரைக் கடத்த எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.
- 1988 - எரித்திரியாவில் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியினர் அஃபபெட் நகரைக் கைப்பற்றினர்.
- 2003 - ஈராக்கின் விடுதலை என்ற பெயரில் அமெரிக்கக் கூட்டு படைகளால் ஈராக் மீதான ஆக்கிரமிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

**பிறப்புக்கள்**

- 1828 - ஹென்ரிக் இப்சன் நோர்வே நாட்டவர், நவீன நாடக இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படுபவர் (இ. 1906).
- 1911 - அல்போன்சோ ரோபில்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1991)

**இறப்புக்கள்**

- 1993 - பொலிகிராப் கூஷ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (பி. 1911)

**சிறப்பு நாள்**

உலக சிட்டுக்குருவிகள் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

84

...ரஜினி:- பத்து வருடத்துக்கு முன்பாக பெரிய நடிகனாக வேண்டும், நிறைய சம்பாதிக்கணும், கார், பங்களா வாங்கணும் என்ற ஆசை நிறைய இருந்தது. மனுஷன் சந்தோஷமா, நிம்மதியா இருக்க இதெல்லாம் தேவை. இதெல்லாம் இல்லாம சந்தோஷமா, நிம்மதியா இருக்க முடியாதுன்னு நம்பியிருந்தேன். அப்போது பணம் எனக்கு ரொம்பத் தேவைப்பட்டது.

இதை எல்லாம் நான் அடைந்த பிறகு மன நிம்மதியோ, சந்தோஷமோ நிச்சயமாக பணம், புகழில் இல்லை. அப்படி யாராவது நினைச்சா அது முட்டாள்தனம். இதெல்லாம் அதிகமாக வரவரச் சிக்கல்களும், பிரச்சினைகளும் ஜாஸ்தியாயிகிட்டே இருக்கும்.

**ஆண்டவன் அருள்**


சுகம், நிம்மதியை நாம் விலை கொடுத்து வாங்க முடியாது. இதெலலாம் நம்ம மனசுக்குள்ளேயே இருக்கு. இதெல்லாம் கிடைக்கிறதுக்கு ஆண்டவனோட அருள் வேணும்.

பணம், புகழ் நிலையானது இல்லைன்னு தெரிஞ்ச பிறகு அதைப் பொருட்படுத்தாம நடிக்கிறதுதான் என்னோட கடமைன்னு தீர்மானிச்சேன். தவிர, பேரையும், புகழையும் என்னோட மன நிம்மதி, சந்தோஷத்தோட சேர்க்கலை. அது தனி, இது தனி.

**அரசியல்**

பாலசந்தர்:- புகழ் பெற்ற நட்சத்திரங்கள் அரசியலுக்கு வருவது நல்லது என்றுதான் நான் நினைக்கிறேன். அதிக படிப்பறிவில்லாத ஜனங்களுக்கு மத்தியில் ஜனநாயகம் நல்ல முறையில் செயற்பட வேண்டுமானால் நல்ல கருத்துக்களை மக்களிடம் எடுத்துரைக்க பிரபல நட்சத்திரங்கள் தேவைப் படுகிறார்கள். அதிலும்மக்களிடையே புகழ் பெற்ற தேசியத் தலைவர்கள் அதிகமில்லாத சமயத்தில். இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

ரஜினி:- நீங்கள் சொல்வதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அரசியலில் ஈடுபடுவதற்கு முன் ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டும். என்ன கஷ்டம் வந்தாலும், அதிலிருந்து நாம் பின்வாங்கக் கூடாது என்கிற உறுதியான எண்ணம் நம் மனதில் வரவேண்டும்.


பாலசந்தர்- ரஜினி

அரசியலை "சாக்கடை" என்று சொல்வார்கள். நாமும் அந்தச் சாக்கடையில் ஐக்கியமாகாமல் எதிர்நீச்சல் போட்டு எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும் என்கிற உறுதி வேண்டும்.

அரசியலில் ஈடுபடுவதற்கு முன் நம்முடைய பொருளாதார வசதி, குடும்பச் சூழ்நிலை முதலியவற்றை ஒருநிலைப்படுத்திக்கொண்டு "இனி இங்கே வேலை கிடையாது. எனவே அரசியலுக்குப்போவோம்" என்ற எண்ணமில்லாமல், உண்மையிலேயே மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்கிற குறிக்கோளுடன் அந்தச் சாக்கடையை சுத்தம் பண்ண நாம் போகவேண்டும். இல்லேன்னா சாக்கடைப் பக்கமே போகக்கூடாது.

பாலசந்தர்:- என்றாவது ஒரு நாள் அரசியலில் ஈடுபடலாம் என்கிற எண்ணம் உனக்குத் தோன்றுகிறது. பெங்களூரில் நீ பேசியதைக் கேட்டபின்பு, நீயும் அரசியலில் ஈடுபடவேண்டும் என்பதுதான் என் விருப்பம்கூட. உடனடியாக இல்லாவிட்டாலும், அமிதாப்பைப் போல சில ஆண்டுகள் கழித்து அரசியலுக்கு வரலாம். உன்னுடைய அபிப்பிராயம் என்ன?

ரஜினி:- என்னைப்பற்றி எனக்குத் தெரிந்ததைவிட உங்களுக்கு நிறைய தெரியும்.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 95

...அவளையும் என்னையும் அல்லாட விட்டு அழகுபாத்த அந்த நாளு, காலசமுத்திரத்துல விழுந்த ஒத்த மழைத்துளியா உருவழிஞ்சு போயிருக்கும்.

ஆனா ஞாபகம் சாகுமா? சாகாது.

அந்தா! இந்த எடந்தான் அவ விடுகதை போட்டது.

இந்தா! இந்த எடந்தான் நான் மீன்சுட்டுக் குடுத்தது.

உச்சிப்பொழுது.

கம்முன்னு இருக்கு காடு. இல தழை ஆடல. காசுகுடுங்க. இல்லாட்டிக், காகிதம் போடுங்க அப்பத்தான் வருவேங்குது காத்து.

எல்லாக் கைகளையும் தூக்கி ஆகாயத்தக் கும்பிட்டு ஆடாம அசையாம மழைவரம் கேக்குதுக மரங்க.

வடைச்சட்டியில போட்டு ஈரல வறுத்தெடுக்கிற மாதிரி, வெயில் சட்டியில போட்டு பூமிய வறுத்தெடுக்குது சித்திரைமாசம். தரிசுக்காடு மேஞ்சு வந்த மாடுக தாகத்துக்கு எறங்குதுக ஆத்துக்குள்ள.

ஆத்துக்குத் தேமல் விழுந்தமாதிரி அங்கங்க திட்டுத் திட்டாக் கெடக்கு தண்ணி.

மூங்கிமரத்து நெழல்ல சரிஞ்சு சாஞ்சாக கொண்ணவாயனும் அய்யக் காவும்.

எருவு வாங்குன துக்குத் துட்டுக்குப் பதிலாக சுடுகாட்டுப்பொரியும் தேங் காச் சில்லும் குடுத்திருந்தான் தோட்டி துடியாண்டி.

ஒருவாய்பொரி, ஒரு கடி தேங்காயுமா மாத்திமாத்தித் தின்டுக்கிட்டுக் கதபேசுதுக ரெண்டும்.

எ... எ... எ... எங்க வீட்டுக்கு வா.... வா... வா... வாக்கப்பட்டு வாரப்ப எ..... எ.... எ.... என்ன கொண்டு வருவ?

மொறையா வந்து பெண்ணுக் கேளு; மொற செய்யிறத அப்பறம் பாக்கலாம்.



எங்கப்பன் சொ... சொ... சொ... சொல்லிருச்சில்ல. எங்க வீட்டுக்கு நீ மொ.... மொ.... மொறப்பொண்ணாம்..... மூ.... மூ.... மூணு முடிச்சில மூக்கணாங் கயிறு போ... போ... போட்டுற மாட்டேன்?

மூணு முடிச்சு அப்பறம்; மொதல்ல மூணு கதை சொல்றேன்; அத விடுவி பாப்பம்.

சொ... சொ... சொ.... சொல்லு.

கே... கே.... கேப்பம்.

வாயில கெடந்த பொரிய ஒரு கடவாப் பல்லுலயிருந்து மறுகடவாப் பல்லுக்குத் தள்ளி மென்னு அரைச்சு ஒரே முழுங்கா முழுங்கி உள்ள தள்ளிட்டுச் சொல்றா அய்யக்கா,

பொட்டு வைக்காத சாமி ஒரு சாமி
பொச்சுக் கழுவாத சாமி ஒரு ச்சாமி
ஒட்டுத்துணி கட்டாத சாமி ஒரு சாமி.

மொத்தம் மூணு சாமி என்ன சாமி?

சொ.... சொ... சொல்லிப்பிட்டா?

அவளுக்குத் தெரியாதா? அவன் தலையைத் தரையில ஊன்டி மருத வரைக்கும் போனாலும் இந்த மூணு சாமியும் சொல்றதுக்கு அவனுக்கு மூளை இல்லைன்னு.... அந்த தைரியத்துல சொல்றா.

கோழியடிச்சுக் கொழம்பு வச்சு உள்ளங்கையில சோறாக்கிப் போடுறேன் ஒனக்கு. சொல்லாட்டி....

சொ... சொ.... சொ... சொல்லாட்டி இ.... இ.....இ...... இங்கேயே மீன் சுட்டுத் தாரேன்.

அதையும் பாப்பம்.

அவன் முக்குறான்; மொனகுறான்; உருமால அவுக்குறான்; உள்ள முடியிலயும் ஒண்ணு ரெண்டு கொட்டிப்போகத் தலையச் சொறியிறான். என்னமோ ரெண்டுகைகளுக்கு மத்தியில தேங்காய வச்சு ஒரே அமுக்குல அமுங்கி ஒடைக்கிறவன் மாதிரி ஒண்ணுமில்லாத உள்ளங்கையை நசநசநசன்னு நசுக்கிறான். வாய்க்கு வந்த வார்த்தையெல்லாம் கொண்ணிக் கொண்ணிச் சொல்லிப் பாக்குறான்; ஒண்ணும் கதையாகல.

நீ........ நீ......... நீ.......... நீயே சொல்லு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கையைச் சேர்ந்த மற்றுமொரு

# போதைப்பொருள் மன்னன் சித்திக் பாகிஸ்தானில் கைது

(கொழும்பு)

பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த போதைப் பொருள் வியாபார மன்னன் எனக் கூறப்படும் ஒருவரை புலனாய்வுப் பிரிவினர் நேற்று இலங்கைக்கு அழைத்து வந்துள்ளனர்.

இரண்டு நாடுகளின் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொஹமட் சித்திக் என்ற அந்த நபர், பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட வெலே சுதாவின் நெருங்கிய நண்பன் என கூறப்படுகிறது.

இருவரும் ஒரே நேரத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். சித்திக் பாகிஸ்தானை சேர்ந்த ஆமினா என்ற பெண்ணை திருமணம் செய்துள்ளார். இதனால், அவர் இலங்கைக்கு நாடு கடத்தப்படவில்லை.

இவர்கள், ஆரம்பத்தில் மருதானை மஜீட் வீதியில் வசித்து வந்ததுடன் சித்தீக்கின் சகோதரி இலங்கையில் வசித்து வருகிறார்.

சித்திக் என்ற இந்த நபர் பாதாள உலக கோஷ்டியுடன் தொடர்புகளை கொண்டுள்ளதுடன் ஓகோல்ட் மற்றும் ஆர்மி ஜெயா ஆகிய பாதாள உலக தலைவர்களுடன்நெருங்கிய தொடர்புகளை கொண்டிருந்தார்.

சித்திக், ஆயுதம் வைத்திருந்தமை தொடர்பில் இலங்கையில் இறுதியாக கைது செய்யப்பட்டார். சிறையில் அவர், ஓல்கோட் என்ற பாதாள உலக தலைவரை முதல் முறையாக சந்தித்துள்ளார்.

இதனையடுத்து இவரும் இணைந்து இந்தியாவுக்கு சென்றிருந்ததுடன் அங்கு சிறையில் அடைக்கப்பட்டனர். அங்கிருந்து தப்பித்து மீண்டும் இலங்கை திரும்பியுள்ளனர்.

ஓல்கோட்டுடன் இணைந்து டுபாய் சென்ற சித்திக், பாகிஸ்தான் போதைப் பொருள் வியாபாரிகளை சந்தித்துள்ளார்.

சித்திக், ஓல்கோட் என்ற பாதாள உலக தலைவருக்கு ஹெரோயின் போதைப் பொருளை விநியோகித்து வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

களனியில் கடந்த வருடம் கைப்பற்றப்பட்ட 85.5 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் வெலே சுதாவும் சித்திக்கும் சம்பந்தப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் இருந்து கொண்டுவரப்பட்ட கொள்கலன் பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்த ஹெரோயின் தொகை பிடிபட்டது.

46 வயதரன சித்திக், தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் உருது மொழிகளை சரளமாக பேசக் கூடியவர் என சர்வதேச பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

## பேசும் படம்-58

**நல்லூர் முருகனுக்கு சேலையுடன் வந்த வெளிநாட்டவர்**



பாரதி கண்ட புதுமைப் பெண்கள்

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
தபால் முகவரி: ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
ஜி. அபிமன்யு

# 19-வது திருத்த சட்டத்துக்கு எதிராக கம்மன்பில வழக்கு

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்போவதாக மேல் மாகாண சபையின் உறுப்பினரும் பிவித்துரு ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

19 ஆவது திருத்தம், நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்பதே நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேல்மாகாண அழகியல் விடுதியில் நேற்று



வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏழு காரணங்களை உள்ளடக்கியே உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய விருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

முன்மொழியப்பட்டுள்ள திருத்தத்தின் பிரகாரம், ஜனாதிபதி, அரசாங்கம் மற்றும் நிறைவேற்று பிரதானியாக இருந்தாலும் அமைச்சரவையானது பிரதமர் தலைமையில் நடைபெறல் மற்றும் தகவலறியும் உரிமையை சட்டமாக்கல் ஆகியன இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு பங்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (இ-5)


# நாட்டினது நன்மதிப்பு உயர்த்தப்பட்டுள்ளது

### அஜித் மன்னப்பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

குறுகிய காலத்தில் நாட்டின் நன்மதிப்பு உயர்த்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.இன்று சர்வதேச அரங்கில் இலங்கை தொடர்பிலான நன்மதிப்பு உயர்வடைந்து செல்கின்றது.

கடந்த காலங்களில் இலங்கை சர்வதேச அரங்கில்



ஓரம் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது.

கடந்த அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைகளினால் நாட்டுக்கு பாதிப்பு ஏற்பட்டது. எனினும் எமது புதிய அரசாங்கம் நாட்டின் நன்மதிப்பை உயர்த்தி வருகின்றது.

உலக நாடுகள் எம்மை இன்று நல்லவிதமாக பார்க்க ஆரம்பித்துள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும சுட்டிக் காட்டியுள்ளார். (இ-5)

# இளைஞர் சேவை சபையின் 750 இலட்சம் ரூபா மாயம்

தேசிய இளைஞர் சேவை சபையின் 750 இலட்ச ரூபா பணத்தை காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

2014 ஆம் ஆண்டு இளைஞர் சேவை சபையிலிருந்து 750 இலட்சம் ரூபா பணம் மாயமாகியுள்ளது.

இந்தப்பணத்தைக்கொண்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக ஆவணங்கள் காணப்படுகின்றன. எனினும் இந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பொருளும் கிடையாது.

2014 ஆம் ஆண்டுக்காக தேசிய இளைஞர் சேவை சபைக்காக 6 ஆயிரம் இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக ஆயிரத்து 500 இலட்ச ரூபா கடன் தொகையொன்றும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப்பணத்தைக்கொண்டு தேசிய இளைஞர் சேவைகள் சபை கடமைகளை செய்யவில்லை.

தேசிய இளைஞர் சேவைகள் சபையில் கடந்த பத்து ஆண்டுகளாக உள்ளக கணக்காய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

ஸ்ரீலங்கா யூத் என்ற பெயரில் சஞ்சிகையொன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த ச்ஞ்சிகை வேறு ஓர் இடத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இதற்காக திரட்டப்பட்ட பணம், விளம்பர உதவிகள் பற்றிய தகவல்கள் எதுவும் உள்ளடக்கப்படவில்லை.

மாற்றுத் திறனாளிகளுக்காக ஓர் நிகழ்ச்சியொன்று நடத்தி பரிசு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் அந்த பரிசுத் தொகைகள் வழங்கப்படவில்லை என தேசிய இளைஞர் சேவைகள் சபையின் உள்ளகத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (இ-5)

## பொதுக்கூட்டம்

(கரணவாய்)

உடுப்பிட்டி நாவலடி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் 29 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தலைவர் கொ.குணசிங்கம் தலைமையில் மாணவர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-3-60)

## மெய்வல்லுநர் போட்டி இன்று

நாவற்குழி சிவமணி பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாலர் பாடசாலை முன்றலில் இடம்பெறவுள்ளது.

பாலர் பாடசாலை அபிவிருத்தி சபைத் தலைவர் தி.தங்கவேலு தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திருமதி வசந்தாதேவி மோக லிங்கம் தென்மராட்சி பிரதேச செயலக ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ. விநோதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## சோசலிசக் கட்சியின் பொதுக்கூட்டம் நாளை

ஐக்கிய சோசலிசக் கட்சியின் பொதுக்கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகிலுள்ள ரிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கட்சி யின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய, மைத்திரி அரசின் நூறு நாட்களும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களும் [illegible] ளர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுமிராண்டித்தனமான ஈனச்செயல் வலி.தெற்கு தவிசாளர் கடும்கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஏழாலை, மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாசாலைக் குடிதண்ணீர் தாங்கிக்குள் விசமிகளால் காட்டுமிராண்டித்தனமாக நச்சுப் போத்தல் போடப்பட்டுள்ளமை மிகவும் கேவலமான ஒரு செயற்பாடு. இவர்கள் யாராக இருந்தாலும் உடன் கண்டறியப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டும் என வலி.தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

எமது வலி.தெற்குப் பிரதேசத்தில் குடிதண்ணீரில் ஒயில் கலந் துள்ளமை கண்டறியப்பட்டு, வலி.வடக்கு, வலி.தென்மேற்கு, வலி.மேற்கு, நல்லூர் பிரதேசசபையின் சில பகுதிகள் என்று பரவலாகக் குடிதண்ணீர் மாசடைந்து வருகின்றமை எமது குடாநாட்டில் பாரிய அனர்த்த செயற்பாடாகக் காணப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்ததே.

எமது பிரதேசத்திலேயே முதன்முதலில் தண்ணீரில் ஒயில் காணப்பட்டமையால் நாம் உடனடி நடவடிக்கையாக மக்களுக்கு சிறப்பான சேவையை ஆற்றுவதற்கு முன்வந்து அவர்களுக்கு எமது சபைநிதியில் நீர்த்தாங்கி வைத்து, குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்து அவர்களின் பிரச்சினைக்குரிய நிரந்தரத் தீர்வு குறித்தும் ஆராய்ந்து வருகின்றோம்.

இந்நிலையில், இன்று (நேற்று) எமது பிரதேசத்துக்குட்பட்ட ஏழாலை, மயிலங்காடு ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் தாங்கியினுள் நச்சுப் போத்தலை மூடியைத் திறந்த நிலையில் போட்டு தண்ணீரில் நச்சுக் கலவையை சில விசமிகள் உருவாக்கியுள்ளார்கள்.

இதனால் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் அந்த நச்சுநீரை அருந்திய 26 மாணவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசரச் சிகிச்சைப் பிரிவில் தமது உயிருக்காகப் போராடும் துர்ப்பாக்கிய நிலையில் உள்ளார்கள்.

எமது பிரதேசத்தில் பிரதேச செயலகமும் நாமும் (பிரதேச சபையும்) தண்ணீர்த் தாங்கிகளை வைத்துள்ளோம். நீர்ப்பாசனத் திணைக்களமும் நாமும் (பிரதேசசபையும்) மக்களுக்கு நீர்விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

எம்மால் (பிரதேசசபையால்) 99 தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு, எமது சபையால் அவற்றுக்கு நீர்விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறான சம்பவத்தைப் பார்க்கின்றபோது எம்மால் நீர்விநியோகம் செய்யப்படுகின்ற அத்தனை தாங்கிகளின் பாதுகாப்பும் கேள்விக்குறியே? எமக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்காகவும் - எமது சபை நடவடிக்கைகளை முடக்குவதற்காகவும் - சில விசமிகள் திட்டமிட்டு இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டிருக்கலாம்.

இது எமது இனத்தைத் திட்டமிட்டு அழிக்கும் விஷமத்தனமானதும் காட்டு மிராண்டித்தனமானதுமான ஒரு ஈனச் செயற்பாடாகும்.

இந்தச் செயற்பாட்டை மேற்கொண்டவர்கள் யாராகவிருந்தாலும், அரசியல் பின்புலத்தில் இந்தச் செயற்பாடு நடைபெற்றிருந்தாலும் அவர்கள் பாரபட்சம் பாராது, சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு உடன் தண்டிக்கப்பட வேண்டும் என அந்தக் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா:49
உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/418

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 20 செவ்4இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: HNDA/ அரச தொழில்
தொ.இ. B/420

பிறப்பு:1986 RC
நட்சத்திரம்:பூசம்
கி.பா:40
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BA
தொ.இ: B/423

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா. 20 செவ். 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில் A/L பிரான்ஸ் PR
தொ. இ. B/425

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா.37 செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA/ அரச தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ. G/673

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா. 24 உயரம்: 5'
தகைமை/தொழில் A/L அரச தொழில்
தொ.இ. G/677

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா. 31 உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி/அரச தொழில்
தொ.இ.G/680

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா. 44 உயரம்: 5'
தகைமை/தொழில்: BSc, MBA/ அரச தொழில்
தொ.இ. G/681

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆய்வு நூல் வெளியீட்டு நிகழ்வு


(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் இலங்கையின் ''சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத் திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம்'' ஆய்வு நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் ஆசியுரைகளினை நல்லூர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், ஹவாய் ஆதீன குரு சுப்பிரமுனி சுவாமிகளின் சீடர் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ வா.அகிலேஸ்வர குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மேலும் நூல் அறிமுகவுரையினை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதனும் நூல் சமர்ப்பண உரையினை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை வருகை விரிவுரையாளரும் நூலாசிரியருமான தி.செல்வமனோகரனும் வெளியீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் ஆய்வுரையினை யாழ். பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கனும் வழங்கவுள்ளனர். (இ-5)



# மானிப்பாய் மருதடி விநாயகர் பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.




தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வசந்த மண்டப பூஜையுடன் ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது.

இதேவேளை மறுநாள் 15 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (இ-5)

# இடமாற்ற அழைப்பினை நிராகரித்த ஆசிரியைகள்

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் 45 வயதிற்கு மேற்பட்ட 225 இற்கும் மேற்பட்ட பெண் ஆசிரியர்களை வலிகாமம் மற்றும் தீவக வலயங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கு விடுக்கப்பட்ட அழைப்பை ஒட்டுமொத்த ஆசிரியர்களும் நிராகரித்துள்ளனர்.**

ஏற்கனவே தீவகவலயத்தில் நீண்டகாலம் கடமையாற்றியவர்களும், வன்னிப்பிரதேசத்தில் கடமையாற்றியவர்களும் இவற்றுள் அடக்கப்பட்டு பாடசாலை அதிபர்களுக்கு நேற்று முன்தினம் (18.03.2015) கடிதம் அனுப்பப்பட்டு நேற்று (19.03.2015) அவர்கள் யாழ்.கல்வி வலயத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

நேற்றையதினம் ஒன்றுகூடிய 225இற்கு மேற்பட்ட ஆசிரியர்களும் தவணையின் இடைநடுவில் செய்யப்படுகின்ற திட்டமிடப்படாத, முறையற்ற இடமாற்றத்தை தாம் முற்றுமுழுதாக நிராகரிப்பதாகவும், ஏற்கனவே தமது சேவைக்காலங்களை முறையாகக் கணிப்பீடு செய்யாமல் தொடர்ச்சியாக பெயர் பட்டியலை அனுப்புவதையும் (நானகு, ஐந்து தடவைகள்) கண்டித்து போராடத் தீர்மானித்துள்ளதாகவும் அறிவித்துள்ளனர். பாடசாலை முதலாம் தவணைப் பரீட்சை தொடங்கியுள்ள நிலையில் இவ்வாறு திட்டமிடாமல் இடமாற்றங்களைச் செய்யும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறும் ஆசிரியர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இடமாற்றத்திற்கு என்று கல்வி அமைச்சின் சுற்று நிருபம் தெளிவாக உள்ள நிலையில் ஏன் இவர்கள் இவ்வாறு செய்கின்றார்கள் என்ற கேள்வியையும் அவர்கள் கேட்டுள்ளனர்.

குறித்த ஒரு பாடசாலையில் இருந்து 15ஆசிரியர்கள் அழைக்கப்பட்டுள்ளமையையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-5)

# ஏழாலையில் மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன



(யாழ்ப்பாணம்)

லண்டனில் வசிக்கும் ஏழாலையைச்சேர்ந்த சி.சிவகாந்தனின் உதவியுடன், வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனின் ஏற்பாட்டில் தெரிவுசெய்யப்பட்ட வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் ஏழாலை தெற்கு தமிழ்ப் பொதுப் பணிமன்ற சனசமூக நிலையத்தில், மன்றத்தின் தலைவர் சுஜாதரன் தலைமையில் பிற்பகல் 5 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா மற்றும் ஈ.சரவணபவன் , வடமாகாணசபை உறுபபினர் பா.கஜதீபன், வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேசசபைத் தவிசாளர் தி.பிரகாஷ், வலி. வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், பயனாளிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். கடந்த ஆண்டும் சி.சிவகாந்தன் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான உதவிகளை யாழ். பொது நூலகத்துக்கு வடமாகாண சபை உறுப்பினரூடாக முதலமைச்சர் முன்னிலையில் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நாவலரின் சிலை இன்று திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நாவலர் நற்பணி மன்றத் தலைவர் ந.கருணையானந்தனால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் உருவச்சிலை திரைநீக்கம் செய்யும் வைபவம் இடம்பெறவுள்ளது என அதிபர் அறிவித்துள்ளார். (இ-5)

# வெளிநாடு செல்வதற்கு முன்னர் ஆளுநரின் அனுமதி அவசியமே!

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு வெளியே செல்லும் வடமாகாண சபை உறுப்பினர்கள் வடமாகாண ஆளுநரின் முன் அனுமதியைப் பெற வேண்டும் என வடமாகாண சபையின் தவிசாளர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையின் 26 ஆவது கூட்டத் தொடர் கடந்த செவ்வாய்க்கிழமை கைதடியில் உள்ள சபை அலுவலகத்தில் கூடிய போதே தலைவர் இதனை தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபை தலைவருக்கு வடமாகாண ஆளுநரின் சார்பில் செயலாளரினால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கடிதத்தின் பிரதி சபைக்கு வாசித்து காட்டப்பட்டது.

வடமாகாண சபையின் உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விடுமுறைகள் உட்பட எந்தவொரு விடுமுறைக்கும் விண்ணப்பிக்கும் போதும் விடுமுறைக்கான காலம், நோக்கம், தங்கியிருக்கும் முகவரி என்பவற்றை குறிப்பிட வேண்டும் எனவும் தான் அதனை சிபார்சு செய்து ஆளுநருக்கு அனுப்பி வைத்து உரிய நடவடிக்கைகளை எடுக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (இ-281)

# பட்டதாரி ஆசிரியர்களுக்கான நேர்முகத்தேர்வு 23ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் காணப்படும் கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் ஆங்கில பட்டதாரிகளை ஆசிரியர் சேவை 3-1 (அ) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக வடமாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் 15. 03.2015 இல் நடத்தப்பட்ட திறந்த போட்டிப்பரீட்சையில்பெற்றுக்கொண்ட புள்ளிகள் உரிய பாடப்பகுதிக்கான ஆளணிகளின் வெற்றிடங்கள் என்பவற்றின் அடிப்படையில் நேர்முகத் தேர்வு எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 5மணிவரை வடமாகாணக் கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

இந்நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்களை www.np.gov.lk என்ற வடமாகாண இணையத்தளத்திலும் வடமாகாணக்கல்வி அமைச்சிலும் பார்வையிட முடியும்என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலம் கையகப்படுத்தும் மசோதா சோனியா, ஹசாரேவுக்கு கடிதம்!

(டில்லி)

நிலம் கையகப்படுத்தும் மசோதா தொடர்பாக மத்திய அமைச்சர் நிதின் கட்காரி நேற்று காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா, சமூக ஆர்வலர் அண்ணா ஹசாரே உள்ளிட்டோருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

நிலம் கையக்கப்படுத்தும் சட்ட திருத்த மசோதாவில் எந்தவிதமான மாற்றங்களை செய்ய வேண்டும் என்று மத்திய அரசுக்கு நேரடியாக கருத்து தெரிவிக்கலாம் என்று கட்காரி அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே மக்களவையில் குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்ட நிலம் கையகப்படுத்தும் மசோதா, குறித்த திருத்தங்களை அரசியல் கட்சிகள் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநிலங்களவையில் நிறைவேற்றுவதற்காக, இந்த மசோதா மீது மத்திய அரசு சில திருத்தங்களை மேற்கொள்ளும் என்றும் கூறப்படுகிறது. (இ-5)

## சுவீடனில் உணவகத்தில் பயங்கர துப்பாக்கிச்சூடு

**இருவர் பலி; பலர் காயம்!**

(ஸ்ரொக்ஹோம்)

சுவீடனின் 2ஆவது பெரிய நகரமான கோடீபெர்கில் மர்ம நபர்கள் சரமாரியாக நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலர் படுகாயமடைந்தனர். இருவர் பலியாகியுள்ளனர்.

சுவீடனின் தென் - கிழக்கில் உள்ள கோடீபெர்க் நகரில் உள்ள தனியார் உணவு விடுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை அடையாளம் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தினர். அவர்கள் நடத்திய சரமாரி தாக்குதலில் பலர் சிக்கினர். இதில் இருவர் பலியானதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, இந்தச் சம்பவத்தில் தானியங்கி இயந்திரம் மூலம் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். விசாரணை தொடர்ந்து வரும் நிலையில், இந்த தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னணி தெரியவரவில்லை.

இந்தச் சம்பவம் நடந்த பகுதியில் ஏற்கனவே கும்பல்களால் தாக்குதல் ஏற்பட்டது என்பதால் உள்ளூர் வன்முறை கும்பல்களிடம் விசாரணை நடக்கிறது. இந்தத் தாக்குதல் தீவிரவாத சம்பவமாக இருக்க வாய்ப்பில்லை என்றும், இருப்பினும் இது குறித்து தெளிவாக தற்போது முடிவு செய்ய முடியவில்லை என்றும் கோடீபெர்க் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ)

## சிகிரியா ஓவியத்தில் பெயர் எழுதிய யுவதிக்கு மன்னிப்பு வழங்குமாறு பீலிக்ஸ் கோரிக்கை

சிகிரியா ஓவியத்தில தனது பெயரை எழுதிய குற்றச்சாட்டுக்காக இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு யுவதிக்கு மன்னிப்பு வழங்குமாறு நீதியமைச்சரிடம் முன்னாள் சமூக சேவைகள் அமைச்சரான பலிக்ஸ் பெரேரா நேற்று முன்தினம கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளு மன்றில் நேற்று முன்தினம் நடை பெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் கட்டளை மீதான விவாதத்தில் உரையாற்று கையிலேயே அவர் இந்தக் கோரிக் கையை விடுத்தார்.

சகிரியா குன்றில் தனது பெயரை எழுதிய குற்றச்சாட்டுக்காக யுவதி ஒருவருக்கு இரண்டு வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவருக்குத் தந்தை இல்லை. தாயும் இடியப்பம் விற்றே வாழ்க்கையை கொண்டு நடத்துகிறார். சிகிரியா குன்றும் முக்கியம். எனக்கு எனது மகளும் முக்கியம் என அந்தத் தாய் மிகவும் உருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடயம் தெரியாதத்ன் காரணமாகவே தனது மகள் அப்படி செய்தார் என்றும், அது வேண்டுமென்றே செய்யப்பட்ட தவறு அல்ல என்றும் அந்தத் தாய் குறிப்பிட்டுள்ளார்.

சில சமயங்களில் சட்டம் வீரியமாக செயற்படுகையில் கவலையளிக்கும் சம்பவங்களும் இடம்பெறுகிறன. அந்தப் பிள்ளைக்கு மன்னிப்பு வழங்குமாறு கேட்டுக்கொள் கிறேன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

**சந்தேக நபர் தற்கொலை**

## பொலிஸ் உத்தியோகத்தர் பணியிலிருந்து நிறுத்தம்!

ஜாஎல பொலிஸ் சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரொருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவத்தையடுத்து பொலிஸ உத்தியோகத்தரொருவர் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் 17ஆம் திகதி இரவு ஜாஎல - ஏக்கல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

போதைப்பொருட்களை தம்வசம் வைத்திருந்தமை மற்றும் வீடுகளை உடைத்து கொள்ளையடித்தமை தொடர்பாக சந்தேகத்தின பேரில் அவர் கைது செய்யப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், நேற்றுமுன் தினம் காலை சிறைக்கூடத்தில் வைத்து அவர் தமது காற்சட்டை பட்டியை பயன்படுத்தி கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# சிங்கள மொழியில் மட்டும் பெயர்ப்பலகைகள் உள்ளன

## வேலாயுதம் கண்டனம்



**(கொழும்பு)**

**சிங்கள மொழியில் மாத்திரம் பெயர்ப் பலகைகள் காணப்படுவது கண்டிக்கத்தக்கது எனவும் அரசின் மும்மொழிக் கொள்கைக்கு சம அந்தஸ்து வழங்க அனைத்து தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெருந் தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் கே.வேலாயுதம் தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்தின் நூறு நாட்கள் திட்டத்தின் கீழ், சில வாரங்களாக ஊவா மாகாண தமிழ் கல்வியமைச்சினால் பாடசாலை கட்டட திறப்பு விழாக்களும் அடிக்கல் நாட்டு நிகழ்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இது பாராட்டுக்குரிய விடயமாகும்.

ஆனால், புதிததாக திரைநீக்கம் செய்யப்படுகின்ற பெயர்ப் பலகைகள் அனைத்தும் தனிச் சிங்கள மொழியில் மாத்திரமே அமைந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக்கதுமான விடயமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஹபுத்தளை, தங்கமலைத் தோட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற வரவேற்பு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், கடந்த காலத்தில், ஊவா மாகாண சபையிலிருந்து இல்லாதொழிக்கப்பட்ட தமிழ்க் கல்வி அமைச்சு, இம்முறை புதிய மாகாண சபை ஆட்சி மாற்றத்தினூடாக மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஊவாவை தொடர்ந்து மத்திய மாகாண சபையிலும் தமிழ்க் கல்வி அமைச்சு மீண்டும் எற்படுத்தப்பட்டு தமிழர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்காக மத்திய மற்றும் ஊவா மாகாண முதலமைச்சர்களுக்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆனால், மாகாணசபைகளில் தமிழ்க் கல்வி அமைச்சுக்களை ஏற்படுத்துவதனால் மட்டும் தமிழ்க் கல்வி வளர்ச்சியடையாது.

தமிழ்மொழி பேசும் அமைச்சர்களின் கீழ் இயங்கும் தமிழ் மொழி மூல பாடசாலைகளின் பெயர்ப் பலகைகள், சிங்கள மொழியில் மாத்திரம் காணப்படுவது ஏற்புடையதல்ல. புதிய நல்லாட்சியில், அரசின் மும்மொழிக் கொள்கைக்கும் சம அந்தஸ்து வழங்கும் வகையில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், உள்ளூராட்சி மன்றங்கள், மாகாணசபை உட்பட சகல மட்டத்திலும் உள்ள மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் அனைவரும் பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டும். தனியாக தமிழ்க் கல்வி அமைச்சுக்களை மாகாண சபைகளிலே ஏற்படுத்துவதன் நோக்கம் பூரணமாக எட்டப்பட வேண்டும். தமிழ் பாடசாலைகளில் மாத்திரமன்றி ஏனைய துறைகளிலும் நிறுவனங்களிலும் மும்மொழிகளிலும் பெயர்ப் பலகைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும். நீண்ட காலமாக போராடிப் பெற்ற எமது உரிமைகளை நாமே இழப்பதற்கு காரணமாக இவ்வாறான சம்பவங்கள் அமைந்து விடக்கூடாது என்று அமைச்சர் மேலும் வலியுறுத்தினார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி முத்தையா ஈஸ்வரம்

இளவாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Nanterre ஐ வதிவிடமாகவும் கொண்ட முத்தையா ஈஸ்வரம் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி மு.ப.11மணியளவில் 3 Avenue du Climetiere du Vesinet, 78400 Chatou, France(RER@ Direction:Saint-German-en-Laye, ARRET:Le Vesinet-Le Pecq) என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சுப்பிரமணியம் செல்லத்துரை

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்லத்துரை கடந்த 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.4 மணியளவில் 591 Galle Rd, Mount Lavenia, Colombo, என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### மெய்யப்பாபத்தர் சிவசுப்பிரமணியம்

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மெய்யப்பாபத்தர் சிவசுப்பிரமணியம் நேற்று முன் தினம் புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### விக்னேஸ்வரன் சஞ்சீவன்

அராலியைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட விக்னேஸ்வரன் சஞ்சீவன் நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சங்கானை கரைச்சி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி பிரான்சிஸ் ஜெயரட்ணம் மேரிபெனடிக்ராயோசப்பின்

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Tonisvorst ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் ஜெயரட்ணம் மேரிபெனடிக்ராயோசப்பின் கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் St.Godehard Kirche Markt1, 47918 Tonisvorst, Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு பிரதேச சபைகளுக்குமான இடைக்கால தேர்தல் தடையை நீக்குங்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய இரண்டு பிரதேச சபைகளுக்கான வழக்கு விசாரணை ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்படுவதாக நீதிபதிகள் அறிவித்துள்ளனர்.

இரண்டு பிரதேச சபைகளுக்கான தேர்தலுக்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையை நீக்குமாறு உச்ச நீதிமன்றத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபைகளுக்கான தேர்தலை நிறுத்தக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த வாதம் அரசியல் கட்சிகளின் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.நிசாம் காரியப்பர் முன்னிலையாகி குறித்த இரு சபைகளுக்குமான தேர்தலை நடத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை நீக்கப்பட வேண்டும் எனவும் முற்றாக இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் வாதாடினார்.

அதேவேளை சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி நேற்று மன்றுக்கு முன்னிலையாக முடியவில்லை என அறிவித்து அவகாசம் கோரப்பட்டதற்கிணங்க இந்த வழக்கு விசாரணை ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்படுவதாக நீதிபதிகள் அறிவித்தனர்.

குறித்த இடைக்காலத் தடையை நீக்கி வழக்கை தள்ளுபடி செய்வதா அல்லது வழக்கு விசாரணைகளை தொடர்வதா என் பது குறித்து அன்றைய தினம் தீர்மானிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றின் சார்பிலும் சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர். (அ-2)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை

யாழ்.பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது. பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## பெண்ணின் விடுதலையை வலியுறுத்திப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சிகிரியா குகையின் பளிங்குச் சுவரில் தனது பெயரை எழுதிய மட்டக்களப்பைச் சேர்ந்த இளம் பெண்ணை ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டுமென சிறிரெலோ அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நீதிமன்றில் மேன்முறையீடு செய்த காலத்தை வீணடிக்காமல் மனிதாபிமான ரீதியில் விடுதலை செய்யுமாறும் இதனை வலியுறுத்தி போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும் ரெலோ கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## 3 புதிய கழகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக்கழகங்கள் நடத்தும் போட்டிகளில் விளையாடுவதற்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 3 புதிய கழகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சங்கச் செயலாளர் எஸ்.விமலேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், பாசையூர் விம்ஸ், கந்தர்மடம் ரெய்ன்போ மற்றும் சாவகச்சேரி றிபேக் ஆகிய அணிகளுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் 22 கழகங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. புதிதாக இணையும் அணிகள், பதிவுசெய்யப்பட்ட கழகங்களுடன் சிநேகபூர்வ போட்டிகளில் விளையாடிய பின்னரே அங்கத்துவம் வழங்கப்படும்.

நடுவர்களின் கட்டணம் அதிகரிப்பு மற்றும் செலவுகள் காரணமாக புதிய அணிகளுடன் சிநேகபூர்வ போட்டிகளில் விளையாடுவதற்கு பதிவு செய்யப்பட்ட அணிகள் முன்வருவதில்லை.

இதனால் புதிய அணிகள் பாதிப்படைகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு சுற்றுப்போட்டிகளில் விளையாடுவதற்கு புதிய அணிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் விதிகளுக்கமைய இந்த அணிகள் செயற்பட்டு, போட்டிகளில் தங்கள் திறன்களைக்காட்டவேண்டும் என தெரிவித்தார். (இ-23)

## வடுக்கள் வலிப்பதில்லை

# பிரதமர் மோடியின் இலங்கைப் பயணம் புதிய நம்பிக்கைக்கு வித்திட்டிருக்கிறது!

### தினமணி ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு மாகாண முதல்வர் விக் னேஸ்வரன் கூறியிருப்பதைப் போல பிரதமர் நரேந் திர மோடியின் இலங்கைப் பயணம், "புதிய நம்பிக்கைகளுக்கு வித்திட்டிருக்கிறது" என தினமணி ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிககாட்டியுள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தல் பேசிய பிரதமர் மோடி, உள்நாட்டுப் போர் குறித்து குறிப்பிடுகையில், "இலங்கை பல ஆண்டுகளாக போரையும் வன்முறைகளையும் சந்தித்து வந்தது. இப்போது நீங்கள் தீவிரவாதத்தை முறியடித்து, போரை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள்" என்று பேசியிருப்பது தமிழ்நாட்டில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்களுக்கு உடன் பாடில்லாதது. தீவிரவாதம் என்ற சொல் அவர்களைக் கொதிப்படையச் செய்கிறது. அது ஓர் உள்நாட்டுப் போர் என்பதை பிரதமர் மோடி பதிவு செய்திருக்க வேண்டும் என்பதே அவர்களது ஆதங்கம்.

அந்த ஆதங்கம் நியாயமானது. இருப்பினும், இன்னொரு நாட்டுக்கு விருந்தினராகச் செல்லும் வேளையில், அவர்களது நாடாளுமன்றத்தில் நின்று கொண்டு, அவர்கள் உணர்வுகளைப் புண்படுத்தாமல் பேசுவதும், சிலவற்றை மென்மையாகச் சுட்டிக் காட்டுவதுமே இராச்சிய உறவுக்கு தொடர்ச்சியான பாதையை அமைக்கும். "சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்" என்ற பாரதியின் வரிகளை இலங்கை நாடாளுமன்ற உரையில் குறிப்பிட்ட மோடி, "இரு நாடுகளுக்கு இடையிலான நம்பகத்தன்மை, கலாசாரம், பரஸ்பர ஆதரவு ஆகிய தூண்களின் மீது உறவுப் பாலம் அமைக்க வந்துளளேன்" என்று குறிப்பிட்டதன் மூலம், சில கசப்பான விவகாரங்களை மென்மையாகவே அணுக வேண்டியவராக இருககிறார்.

இன்று இந்திய அரசின் முன்பிருக்கும் தவிர்க்கவியலாத் தேவை, இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம், தொழில், சுற்றுலா ஆகியவற்றுக்கான அடிப்படை உறவுகளை முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைக்கு மீட்டெடுப்பதுதான். அத்துடன், இலங்கை வாழ் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளித்தல், அரசியல் அதிகாரப் பகிர்வு பெற்றுத் தருதல், இந்தியாவில் உள்ள இல ங்கை அகதிகள் அவர்களது தாய் நாட்டுக்கு பாதுகாப்பாகத் திரும்புதல் ஆகியவையும் இடம் பெறுகின்றன. முதலாவது, நாட்டின் பொருளாதாரம் சார்ந்தது. இரண்டாவது, தமிழகம் மற்றும் தமிழர்தம் உணர்வுகளின் மீதான அக்கறை. இரண்டையும் சாதிக்க வேண்டும் என்றால், காய்களை மெல்லத்தான் நகர்த்த வேண்டும்.

தமிழ்நாட்டு அரசியல் அமைப்புகள் அனைத்துமே நரேந்திர மோடியை இந்தியப் பிரதமராகப் பார்க்காமல், தமிழகப் பிரதிநிதியாக பார்ப்பதால்தான் இத்தகைய வருத்தங்கள் ஏற்படுகின்றன.

தமிழர்கள் மீதான அக்கறையை வெகு இயல்பான முறையில், அவர்கள் மனச் சங்கடம் கொள்ளாத வகையில இலங்கை நாடாளுமன்றத்தில் பதிவு செய்துள்ளார் மோடி. அவர் பேசியபோது, "சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் விருப்பங்களையும் இணைத்துக் கொள்ளும் போது, நாடு ஒவ்வொரு தனிநபரின் பலத்தையும் பெறுகிறது. மாநிலங்களை, மாவட்டத்தை, கிராமங்களை பரவலாக அதிகாரம் பெறச் செய்யும்போது, நாடு மேலும் மேலும் வலுப்படுகிறது. இது என்னுடைய பாரபட்சமான கருத்து என்று நீங்கள் சொல்லலாம். நான் 13 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்துள்ளேன். தற்போது சில மாதங்களாகப் பிரதமராக இருக்கிறேன. எனது உச்சபட்ச முன்னுரிமை, இந்தியாவில் மாநிலங்களை வலுப்படுத்துவ தற்குதான். கூட்டாட்சியில் முழு நம்பிக்கையுடையவன் நான்" என்று பேசியிருக்கிறார்.

அதாவது, "நீங்களும் இங்குள்ள தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுங்கள், வடக்கு மாகாணத்தை வலுப்படுத்துங்கள்" என்பதை அவர்களது நாடாளுமன்றத்தில் நின்று கொணடு, ஒரு பிரதமர் என்ற முறையில், எல்லை மீறாமல் உணர்த்தியிருக்கிறார். இது ஒரு நல்ல தொடக்கம்.

மீனவர் பிரச்சினையில் அக்கறை காட்டவில்லை, மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசியது ஏன் என்றெல்லாம் எதிர்க்கட்சிகள் மற்றும் தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத தமிழர் ஆதரவு அமைபபுகள் கேள்வி எழுப்பினாலும், இந்த விவகாரத்தில் மோடி மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும், இலங்கை நாட்டவருக்கு எரிச்சல் தராதபடியும் தனது கருத்தைப் பதித்துள்ளார். ஒரு இராச்சிய விவகாரம் இத்தகைய நெளிவு சுளிவுகளுடன்தான் இருக்க முடியும், இருக்க வேண்டும்.

இந்தியாவின் உளவுப் பிரிவு "றோ" தனது தோல்விக்குக் காரணம் என்று மகிந்த ராஜபகஷ வெளிப்படையாகப் பேசிய பிறகும் இந்தச் சந்திப்பு நிகழ்ந்துள்ளது என்பதே, இந்தச் சந்திப்புக்கான காரணங்களை ஊகிக்கப் போதுமானது.


"மீனவர்களின் பிரச்சினையில் இரு நாடுகளைக் காட்டிலும் இரு நாடுகளின் மீனவர்களின் உடன்பாடுதான் மிகவும் இன்றியமையாதது" என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். இதையே வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன்உள்ளிட்டோரும் தெரிவித்து வருகின்றனர். இரு நாடுகளின் மீனவர்களும ஓர் இணக்கமான உடன்பாட்டுக்கு வந் தாக வேண்டிய கட்டாயம் உள்ளது. இந்த உடன்பாட்டை அவர்கள் காண்பதே சரியானதாக இருக்கும். இரு நாடுகளின் ஒப்பந்தங்கள் மூலம் இதற்குத் தீர்வு காண் பது அத்தனை எளிதல்ல.

தமிழர்களுக்கு மேலும் 47 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்படும் என்ற அறிவிப்பும், புதிய தொழில்வாய்ப்பு, முதலீடுகளுக்கான கதவுகளை திறந்திருப்பதும் இந்தியாவின் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும். இந்த வர்த்தகத்தின் வழியாகப் பயன் பெறப் போகிறவர்களில் கணிசமானோர் வடக்கு மாகாணத் தமிழர்களாக இருப்பார்கள்.

மோடியின் இலங்கைப் பயணம் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் பார்வையில் விமர்சனத்துக்கு உட்படுத்தப் பட்டாலும், இந்தப் பயணம் நல்லதொரு தொடக்கம். புண்களைக் கிளறாமல் இருந் தால் ஆறிவிடும். வடுக்கள் இருகத்தான்செய்யும்ஆனால், அவை வலிப்பதில்லை! என மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி செலுத்தாதவர்களின் பட்டியலில் சோனியா, மன்மோகன்சிங், அத்வானி



வரி செலுத்தாமல் நிலுவை வைத்துள்ளவர்கள் பட்டியலில் சோனியா, மன்மோகன் சிங், அத்வானி உட்பட 300இற்கும் மேற பட்ட பிரபலங்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட வரிகளை செலுத்தாமல், நிலுவை வைத்துள்ள பிரபலங்களின் பெயர்களை டில்லி நகராட்சி நேற்று முன்தினம் வெளியிட்டது.

அதில், காங்கிரஸ் தலைவி சோனியா, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி, மத்திய அமைச்சர்கள் ஸ்மிருதி இரானி, நெஜ்மா ஹெப்துல்லா உள்ளிட்ட 166 மக்களவை எம்.பி.க்கள், 151 மாநிலங்களவை எம்.பிக்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும், இலட்சக்கணக்கில் வரி நிலுவை வைத்துள்ளவர்களில் நிஷாத், தேவகவுடா, தெலுங்கானா முதல்வர் சந்திரசேகரராவ் உள்ளிட்டோர் முன்னணியில் உள்ளனர்.

அதேபோல், வரி நிலுவை வைத்துள்ள முன்னாள் மாநிலங்களவை எம்.பிக்கள் 859 பேரும் அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு டில்லி நகராட்சி மன்றம் பலமுறை அறிவித்தும் அவர்கள் பணத்தை செலுத்தாததால், மத்திய பொதுப்பணித்துறை மற்றும் வீட்டு வசதி வாரியத்திற்கு கடிதம் எழுதியுள்ளது.

இதற்கு பதிலளித்துள்ள மத்திய பொதுப் பணித்துறை, இந்த வரி நிலுவைகளை எம்.பிக்களின் சம்பளத்தில் இருந்து பிடித்துக் கொள்ள வழி வகை செய்யப்படும் என தெரிவித்துள்ளது. (இ-5)

### கறுப்புப் பணத்தை வெளிக்கொணர

# மத்திய அரசு புதிய திட்டம்!

கறுப்புப் பணத்தை வெளிக் கொணர்வதற்காக மத்திய அரசு புதிய திட்டம் ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளது.

அதன்படி, வருமான வரி செலுத்துவோர், கணக்கில் காட்டப்படாத தங்களது வருமானம், வெளிநாட்டு சொத்துகள் ஆகியவற்றைத் தெரிவிப்பதற்கு மத்திய அரசு கூடுதலாக சில மாதங்கள் அவகாசம் அளிக்கவுள்ளது.

கறுப்புப் பணத்தை பதுக்குதல் தொடர்பான குற்றங்களைத் தடுப்பதற்கு மத்திய அரசு கொண்டு வரவுள்ள "கணக்கில் வராத வெளிநாட்டு வருமானம், சொத்துகள் (புதிய வரி விதிப்பு) மசோதா-2015"ன் படி, சிறைத் தண்டனை பெறாமல் இருக்க மத்திய அரசு இந்த அவகாசத்தை அளிக்கவுள்ளது.

இந்த மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிறகு, வெளிநாட்டு வருமானம், சொத்துகள் ஆகியவை பற்றிய விபரங்களை அரசுக்கு தெரிவிப்பதற்கான திகதிகள் அறிவிக்கப்படும் என்று மத்திய நிதியமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கடந்த புதன்கிழமை தெரிவித்தார்.

இந்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை கடந்த செவ்வாய்க்கிழமை ஒப்புதல் வழங்கியது.

இந்தப் புதிய மசோதாவில், வெளிநாட்டு வருமானம், சொத்துகள் ஆகியவற்றை மறைத்தால் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை, உள்நாட்டில் வாங்கப்பட்ட சொத்து விபரங்களை மறைத்தல், வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்யாதிருத்தல் ஆகிய குற்றங்களுக்கு 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை ஏய்ப்பு செய்யப்பட்ட வரியைப் போல 300 சதவீத அபராதம் விதிக்கப்படும் ஆகிய சரத்துகள் இடம்பெற்றுள்ளன. (இ-5)

### ஐ.ஏ.எஸ். அதிகாரி மர்ம மரணம்

# பாராளுமன்றத்திற்கு வெளியே பா.ஜ.க.எம்.பிக்கள் போராட்டம்

(டில்லி)

**ஐ.ஏ.எஸ். அதிகாரி மரணம் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்த வலியுறுத்தி பாராளுமன்றத்திறகு வெளியே கர்நாடக மாநிலத்தை சேர்ந்த பாரதீய ஜனதா எம்.பி.க்கள் போராட்டம் நடத்தியுள் ளதோடு இவ்விவகாரத்தில் மாநிலத்தில் ஆளும் காங்கிரஸ் அரசை கடுமையாக விமர்சித்துள்ளனர்.**

கர்நாடக மாநில அரசின் வணிக வரித்துறை கூடுதல் ஆணையாளர் ஐ.ஏ.எஸ். அதிகாரி டி.கே.ரவிகுமார, நேர்மையானவர் என்று பெயர் பெற்றவர். 35 வயதான அதிகாரி ரவிகுமார், கடந்த திங்கட்கிழமை அவரது வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். அவரது சடலம் தூக்கில் தொங்கியது. இந்த சம்பவம் கர்நாடக மாநிலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அந்த மாநில முதலமைச்சர் சித்தராமையா, அதிகாரி ரவிகுமார் மரணம் குறித்து சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிட்டார். தனிப் படை அமைக்கப்பட்டு விசாரணையும் தொடங்கியுள்ளது.



இவ்வழக்கில் சி.பி.ஐ விசாரணை நடத்தக்கோரி பாராளுமன்றத்திற்கு வெளியே காந்தி சிலை அருகே பாரதீய ஜனதா கட்சியின் எம்.பி.க்கள் நேற்றுக்காலை போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் கர்நாடக மாநிலத்தை சேர்ந்த மத்திய அமைச்சர்கள் சதானந்த கவுடா மற்றும் ஆனந்த்குமார் தலைமையிலான எம்.பிக்கள், மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங்கை சந்தித்து பேசிய பின்னர் இப்போராட்டம் நடைபெற்றது. ராஜ்நாத் சிங்கை சந்தித்து பேசிய எம்.பிக்கள் ஐ.ஏ.எஸ். அதி காரி மரணம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். இவ்விவகாரத்தை பாராளுமன்றத்தில் எழுப்ப சபாநா யகர் சுமித்ரா மகாஜனிடம், அனுமதி கேட்கப்படும் என்று எடியூரப்பா தெரிவித்துள்ளார். (இ-5)

# பஞ்சாப் சிறையிலிருந்தபடி கைதிகள் குறூப் போட்டோ!



பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய குற்றத்துக்காக பஞ்சாபில் பாட்டின்டா சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள ரெளடிகளான குல்பர் சிங் மற்றும் அவரது கூட்டாளிகள் நான்கு பேரும் ஒன்றாக போட்டோ எடுத்து அதனை பேஸ்புக்கில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

சிறை என்றாலே தண்டனை அனுபவிக்கும் இடம் என்ற எண்ணத்தையே மாற்றும் விதத்தில், இவர்கள் ஐந்து பேரும் மிகவும் ஒய்யாரமாக அமர்ந்து போட்டோவுக்கு போஸ் கொடுத்துள்ளனர். அதில் ஒரு குற்றவாளி, தொலைபேசியில் பேசியபடி போட்டோவுக்கு போஸ் கொடுத்துள்ளார்.

போட்டோ எடுத்ததும், அதனை பேஸ் புக்கில் பதிவேற்றம் செய்யவும் நவீன தொழில்நுட்பம் கூடிய தொலைபேசிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது குறித்த சர்ச்சை எழுந்ததும், 5 பேரும் பிரிக்கப்பட்டு தனித் தனி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கொடுமை என்னவென்றால், அவர்கள் பயன்படுத்திய தொலைபேசிகள் பொலிஸாரினால் இன்னமும் பறிமுதல் செய்யப்படவில்லை என்பதுதான். (இ-5)

பாரதச் செய்தி

# வான்-பேருந்து மோதி விபத்து

இராமநாதபுரம் மாவட்டம், மதுரை மண்டபம் தேசிய நெடுஞ்சாலையில் சத்திரக்குடி அருகே கீழக்கோட்டை கிராமத்தில் கோழிகள் ஏற்றிச் சென்ற மினிவானுடன்-தனியார் பேருந்து நேருக்கு நேராக மோதிக்கொண்ட விபத்தில் 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்துள்ளனர்.

சத்திரக்குடியை சேர்ந்த கௌசல்யா (வயது-18), லட்சுமி (வயது-[illegible]), இராமநாதபுரத்தை சேர்ந்த வினோதினி (வயது-21), சாரதி உட்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த எஸ்பி மயில்வாகனன் தலைமையிலான பொலிஸாரும், மீட்புக் குழுவினரும் 5 பேரின் உடல்களை மீட்டு இராமநாதபுரம் பிரேத பரிசோதனை கூடத்தில் வைத்துள்ளனர்.

காயமடைந்த 11 பேரும் பரமக்குடி அரசு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சம்பவ இடத்தில் சத்திரக்குடி பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சின் படிவத்தை உறுதிப்படுத்த கிராம அலுவலர்கள் மறுப்பு

(கிளிநொச்சி)

**வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சினால் தற்போது தடுப்பிலுள்ளவர்கள், புனர்வாழ்வு பெற்றவர்கள், மாவீரர்கள் ஆகியோருக்கு உதவித்திட்டங்களை வழங் கும் நோக்கில் தனித்தனியாக கோரப்பட்ட படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.**

இப்படிவங்களைப் பெற்றவர்கள் அதனைப் பூர்த்தி செய்து தமக்குரிய கிராமங்களில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் ஆகியோரின் கையொப்பம் பெறப்பட்டபின்னர் கிராம அலுவலர்களின் கையொப்பம் கோரப்பட்டுள்ளது.

இருப்பினும் பிரதேச செயலர்களின் அனுமதியின்றி தம்மால் இப்படிவங்களில் கையொப்பம் இடமுடியாது என கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிராம அலுவலர்களால் மறுப்புத் தெரிவிக்கப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தப் படிவங்களின் நிலையென்ன என பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

எனவே இது தொடர்பில் இவ்விடயத்திற்கு பொறுப்பான வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் கவனத்தில் எடுத்து கோரப்பட்ட படிவங்களை உரியமுறையில் பூர்த்தி செய்யப்படுவதற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி கிடைப்பதற்கும் ஆவன செய்யவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கின்றனர்.

வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கும் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் புனர்வாழ்வு பெற்ற போராளிகள், வன்னியுத்தத்தில் உயிர்நீத்த மற்றும் காணாமற் போனோரின் பெற்றோர்கள் என சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது, தங்களின் இன்றைய நிலைமை தொடர்பாக அமைச்சருக்கு தெளிவுபடுத்திய அவர்கள், எந்த உதவிகளும் இன்றி தாங்கள் இருப்பதாகவும் இந்த உதவித் திட்ட முயற்சியை வரவேற்பதுடன் இதற்காக தங்களின் முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் அமைச்சரிடம் உறுதியளித்தனர்.

மேலும் இவ்விடயத்தில் எந்தவித அரசியல்வாதிகளையும் உள்வாங்காது தூய நோக்கோடு முன்னகர்த்திச் செல்லுமாறும் அவர்கள் இதன்போது கேட்டுக்கொண்டனர்.

இதன்போது வடக்கு மாகாண அமைச்சர்பா.டெனீஸ்வரன உரையாற்றுகையில், "புனர்வாழ்வு பெற்ற போராளிகள், மரணமடைந்த போராளிகளின் குடும்பங்களையும் அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டே இந்த திட்டம் உருவாக்கப்பட்டது". அத்துடன், இவ்விடயத்தில் அரசியல் கலப்படமின்றி செல்வதே எல்லோருக்கும் நன்மை பயக்குமென்றும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த எந்த சவால்கள் வந்தாலும் அதற்கு முகம் கொடுக்கத் தயார் எனவும் அவர் உறுதியளித்தார். (அ-2-254)




## பொதுநூலக திறப்பு விழா

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் கிளிநொச்சி பொது நூலகத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் நா.வை.குகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

எனவே இந்நிகழ்விற்கு நூலக அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள், பொதுமக்கள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (அ-2-277)

## ஆசிரியர்களை நியமிக்கக்கோரி மாணவர்கள் நேற்று கவனயீர்ப்பு!

(கிளிநொச்சி-1)

பூநகரி கல்விச் கோட்டத்திற்குட்பட்ட கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் நிலவி வரும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பக்கோரியும் க.பொ.த உயர்தர வர்த்தக பிரிவை ஆரம்பிக்குமாறு கோரியும் பாடசாலை மாணவர்களும் பெற்றோரும் இணைந்து பாடசாலைக்கு வெளியே கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை நேற்றுக்காலை 8 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரை மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளை இடைநிறுத்தி முன்னெடுத்தனர்.



கணிதம், வரலாறு, சுகாதாரம், வர்த்தகம் ஆகிய முக்கிய பாடங்களுடன் ஏனைய பாடங்களிற்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருவதாகக் அவர்கள் கூறினர்.

அத்துடன் ஆரம்பப்பிரிவு, இடைநிலைப்பிரிவு ஆகியவற்றில் ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாதுள்ளதாகவும் இதனால் தமது கல்வி வளர்ச்சி பாதிக்கப்படுவதாகவும் அவர் கூறினார். குறித்த பிரச்சினைக்குரிய தீர்வினை பெற்றுத்தர சம்பந்தப்பட்ட கல்வித் திணைக்கள அதிகாரிகள் முன்வரவேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கோசம் எழுப்பியதுடன் பதாகைகளையும் தாங்கியிருந்தனர். (அ-2-277-281)

## கிளிநொச்சி நகரில் பார்த்தீனிய பரம்பல்



(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி நகரில் பார்த்தீனியத்தின் பரம்பல் மிக வேகமாக பரவி வருவதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்ட புதிய செயலக சூழலில் பார்த்தீனியச் செடியின் பரம்பல் காணப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காதவிடத்து மழை காலங்களில் வழிந்தோடும் வெள்ளநீர் மூலம் திருநகர், ஜெயந்திநகர் ஆகிய கிரா மங்களுக்கும் இச்செடி பரவ வாய்ப்புள்ளதாகவும் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இதனை அழிப்பதற்கும் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கும் வடக்கு மாகாண சபையினர், அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-277)

## முன்னறிவித்தலின்றி மின் தடைப்படுகின்றது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் திருநகர் வடக்கு பன்வீதியில் வசித்து வருகின்ற மக்களுக்கு வழங்கப்படுகின்ற மின்சாரம் இரவு 7 மணியிலிருந்து 9 மணிவரை முன்னறிவித்தல் எதுவுமின்றி மின்சாரம் தடைப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மற்றும்பாடசாலைகளில் கல்வி பயின்று வரும் மாணவர்கள் மிகுந்தசிரமங்களைஎதிர்கொள்வதாக கவலைதெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மின்சார சபையிடம் பாதிக்கப்பட்டோர் குற்றச்சாட்டு தொடர்பு கொண்ட போது மின்சாரம் வழங்குவதற்கான வலு (வோட்) போதுமானதாக இல்லை. இப்பிரச்சினையை விரைவில் சீர் செய்து தருவதாக கூறப்படுகின்ற போதிலும் இது வரையிலும் எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட வில்லை.

இதனை உரிய அதிகாரிகள் கவனத்தில் கொண்டு தமக்கான மின்சாரத்தை சீரான முறையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-254)

## பயிற்சி பரீட்சை

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நடப்பாண்டில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான வலயமட்ட பயிற்சிப் பரீட்சை இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2மணிக்கு அவ்வப்பாடசாலைகளில் நடை பெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி லஃமாலினி வெளியிட்டு அறிவித்துள்ளார். (அ-2-15)

## மோ.சைக்கிள் விபத்து முதியவர் உயிரிழப்பு

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் விபத்திற்குள்ளானதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த வயோதிபர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கனகபுரம் வீதியிலுள்ள சேவியர் கடைச்சந்தியில் நடைபெற்றுள்ளது.

இதில் செல்வாநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த பழனி அப்பன் நல்லதம்பி (வயது -62) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்திரராசா குகராசா (வயது-30) என்பவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கனகபுரத்தை நோக்கி பயணித்த துவிச்சக்கரவண்டியும் கனகபுரத்திலிருந்து டிப்போ சந்தியை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்திற்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிபர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணமடைந்தார்.


சம்பவம் அறிந்த கிளிநொச்சி பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (அ-2-15-259)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமருக்கு எதிராகப் போராட களமிறங்கும் நடிகர் சரத்குமார்

**(சென்னை)**

**பிரதமர் ரணில் விக்ரமசிங்க முன்வைத்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக நடிகர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து சரத்குமார் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும தெரிவித்துள்ளதாவது,

பிரதமர் ரணில் விக்ரமசிங்க எல்லை தாண்டும் மீனவர்களை சுட்டுத்தள்ளுவதற்கு அதிகாரம் உள்ளது என அண்மையில் இருவேறு இந்திய ஊடகங்களுக்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கருத்து தெரிவித்திருந்தார்.

இலங்கை பிரதமரின் இந்த ஆணவ பேச்சை கண்டித்து எதிர்வரும் 23ஆம் திகதி சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் ஆர்.சரத்குமார் தெரிவித்துள்ளார்.

குறுகிய கடற்பரப்பு காணப்படுவதினால் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது இயற்கையாக அமைந்தது எனும் போது இலங்கை பிரதமர் மீண்டும் மீண்டும் இவ்வாறான கருத்துக்களை முன்வைப்பது இந்தியர்களை சீண்டி வேடிக்கை பார்க்கும் செயலாக காணப்படுகின்றது என அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

மேலும் இலங்கை இந்தியாவுடன் சுமுக உறவு வைத்து கொள்வது போல் ஒருபுறம் நடித்துக் கொண்டு மறுபுறம் பகையுணர்ச்சியுடன் செயற்படுகின்றது என சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை பிரதமரின் இந்த கருத்தை மத்திய அரசு கண்டிப்பதோடு, இலங்கையையும் கடுமையாக எச்சரிக்க வேண்டும் என சரத்குமார் கேட்டு கொண்டுள்ளார்.(இ-5)

# நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வாரம்

நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வாரமொன்றை முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரையான காலப் பகுதியில் டெங்கு ஒழிப்புத் திட்டங்களை முன்னெடுக்க அமைச்சின் தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவு தீர்மானித்துள்ளது.

வானிலை மாற்றத்துடன் மீண்டும் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தொற்று நோய ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பபா பலிஹவடன தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வருடம் இதுவரையான காலப் பகுதியில் 10 ஆயிரத்து 650 பேர் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதல் 46 வீதமான நோயாளர்கள் மேல் மாகாணத்தில அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 60 | 80 | 50-60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 100 | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 60 | 80 | 50-60 | 60 |
| தக்காளி | 20 | 40 | 30 | 50 | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 30 | 25 | 50 | 60 | 30-50 | 40 |
| கரட் | 150 | 80 | 110 | 120 | 100-120 | 120 |
| பூசணி | 50 | 40 | 30 | 80 | 50 | 60 |
| புடோல் | 40 | 40 | 50 | 60 | 30-40 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 80 | 50-70 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 80 | 80-100 | 50-80 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 100 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 80 | 100 | 100 | 100 | 70 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 50 | 80 | 30-50 | 50 |
| கருணைக் கிழங்கு | — | 40 | 60 | 100 | 50 | 80 |
| பயற்றங்காய் | 50 | 50 | 60 | 100 | 40 | 60 |
| லீக்ஸ் | 200 | 120 | 180 | 180 | 100-110 | 150 |
| பீற்றூட் | 30 | 40 | 100 | 60 | 40 | 40 |
| கறிமிளகாய் | 200 | 120 | 110 | 140 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 150-300 | 300 | 320 | 320 | 300-450 | 400 |
| போஞ்சி | 200 | 140 | 120 | 160 | 120 | 130 |
| கத்தரிதம்புள்ள | — | 40 | 50 | 60 | — | — |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 40 | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 20 | 50 | 50 | 60 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 60 | 45 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | 100 | 120 | 100-120 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 150 | 160 | 80 | 80 |
| முள்ளங்கி | 20 | 20 | 30 | 60 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 40 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 | 10 | 20 |

# போலி நாணயத்தாள்கள் குறித்து எச்சரிக்கை

5000 மற்றும் 1000 ரூபாய் தாள்களை பயன்படுத்தும் போது அது குறித்து மிகுந்த அவதானமாக செயற்படுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதிக அளவான போலி 5000 மற்றும் 1000 ரூபாய் தாள்கள் புளக்கத்தில் இருப்பதாக பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பில் கடந்த காலங்களில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி கேகாலை பகுதியில் வைத்து நேற்று முன்தினம் 22, ஐந்தாயிரம் தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-5)




இலக்கியா நகுலன்

**எப்போதோ கிடைக்கும் அன்பிற்காக எப்போதும் கிடைக்கும் அன்பை இழந்து விடாதே...!**

ருக்சி சிவகுமார்




லக்சி லக்சிகா

டாக்டர் : தினமும் காலையில ஒரு ரம்ளர் வெந்நீர் குடிங்க


நோயாளி : கல்யாணம் ஆனதிலயிருந்து காபி என்ற பெயரில என் மனைவி தரும் வெந்நீரைத் தான் குடிக்கிறன் டாக்டர்.



பிரவின் தாஸ்




சர்மி சர்மிளா




தர்சிகா தாசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை இணைத்து உருவாக்கப்படும் சீனாவுக்கு எதிரான வலைப்பின்னல்

கடந்த வாரம் அமெரிக்க பாராளுமன்றத்தின் ஆயுதப்படைகள் தொடர்பான உப குழுவின் முன்பாக உரையாற்றிய அமெரிக்க கடற்படையின் நடவடிக்கைப் பிரதித் தளபதியான வைஸ் அட்மிரல் ஜோசப் முல்லொய், அதிர்ச்சி தரக்கூடிய பெரியதொரு குண்டைத்தூக்கிப் போட்டிருந்தார். அமெரிக்காவிடம் உள்ள நீர்மூழ்கிகளின் எண்ணிக்கையை விட, சீனாவின் நீர்மூழ்கி களின் பலம் அதிகமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகம் தமக்கு உள்ளதாக அவர் தெரிவித்திருந்தார். உலகிலேயே படைபல ரீதியாக அதிசக்தி வாய்ந்த ஆயுதங்களைக் கொண்ட நாடு அமெரிக்காவே என்ற கருத்து உலகில் உள்ளது.

அமெரிக்கா அடுத்த தலைமுறைக்கான ஆயத தயாரிப்புகள், கண்டுபிடிப்புகளுக்குக் கூட முக்கியமளிக்கும் ஒரு நாடு. ஆனால், அமெரிக்காவையும் மிஞ்சக் கூடியளவுக்கு சீனாவின் ஆயுதப் போட்டி அதிவேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. இரகசியமான பல ஆயுதங்கள், ஏவுகணைகளை சீனா தயாரிப்பதாக சொல்லப்படுகிறது. நீர்மூழ்கியிலிருந்து அமெரிக்காவைத் தாக்கும் அணுவாயுத ஏவுகணைகளைக்கூட சீனா பரிசோதித்துள்ளதாக தகவல். இந் நிலையில்தான், சீன நீர்மூழ்கிகள் விவகாரத்தில் அமெரிக்கா அதிகம் முன்னெச்சரிக்கையுடன் செயற்படத் தொடங்கியுள்ளது.

பொருளாதார ரீதியாக மட்டுமின்றி, படைபல ரீதியாகவும், அமெரிக்காவுடன் போட்டியிடும் நாடாக சீனாவே மாறியிருக்கிறது. இந்தியப் பெருங்கடலில், சீனாவின் ஆதிக்கம் குறித்து இந்தியா கவலை கொள்கிறது என்றால், கூடவே சீனாவின் வளர்ச்சி குறித்து அமெரிக்காவும் கவலை கொண்டிருக்கிறது என்பதே உண்மை. இந்தியப் பெருங் கடலின் ஊடாக, சீனாவின் செல்வாக்கு, மேற்கு நோக்கி விரிவாக்கமடைந்து விடும் என்று அமெரிக்கா தீவிர கவலை கொண்டிருக்கிறது. உலகின் அனைத்துப் பகுதிகளிலும், சீனா தனது கடலா திக்கத்தை விரிவாக்கி வருகிறது என்பதற்கான ஆதாரங்களை வைஸ் அட்மிரல் ஜோசப் முல்லொய் அண்மையில் முன்வைத்திருக்கிறார்.

அதில் முக்கியமானது இந்திய கடற்பரப்பில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவது பற்றியதாகும். கொழும்புத் துறைமுகத்துக்கு சீன நீர்மூழ்கிகள் இரண்டு கடந்த ஆண்டு மேற்கொண்ட பயணத்தையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். இந்தியப்பெருங்கடலில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்கனவே இந்தியாவுடன் இணைந்து அமெரிக்கா செயலாற்றத் தொடங்கிவிட்டது.


அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல் மிக்க ஒரு சக்தியாக சீனா மாறி வரும் நிலையில், அதனை தனித்துக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கும் அமெரிக்கா சென்றிருக்கிறது. இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான எம்.கே. நாராயணன், கடந்தவாரம் கொச்சியில் நடந்த "ஆசியப் பிராந்தியமும், அமெரிக்காவின் மீள்சமநிலையும்" என்ற கருத்தரங்கில் பேசிய போது, ஆசியாவில் இந்தியாவின் துணையின்றி அமெரிக்காவினால் சீனாவைக் கட்டுப படுத்த முடியாது என்று குறிப்பிட்டார். எனவே தான், அமெரிக்கா, இந்தியா மற்றும் ஏனைய நாடுகளின் துணையுடன், சீனாவை எதிர் கொண்டு வருகிறது எனவும் இவர் கூறியிருந்தார்.


இந்தியப் பெருங்கடலில், சீனாவின் ஆதிக கத்தைக் கட்டுப்படுத்த, இந்தியாவின் ஆதரவு மட்டும், அமெரிக்காவுக்குப் போதாது. இந்த இரண்டு நாடுகளும் ஏற்கனவே இணைந்து பணியாற்றி வந்த நிலையில்தான், கொழும்புத் துறைமுகத்துக்குள் பிரவேசிக்க அனுமதி கொடுத்ததே, மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் செய்த மிகப்பெரிய தவறாகும். அதுதான் வரலாற்று ரீதியான இலங்கையின் அரசியல் மாற்றங்களுக்கும் காரணமாகியது.

மஹிந்த ராஜபக்ச ஆட்சியைத் தோற்கடிக்க, இந்தியாவும், அமெரிக்காவும் முக்கிய பங்கு வகித்திருந்ததாக கூறப்படுகிறது. கடந்த வாரம், ஹொங்கொங்கிலிருந்து வெளியாகும், சவுத் சைனா போஸ்ட் நாளிதழுக்கு மஹிந்த ராஜபக்ச அளித்துள்ள பேட்டியில், இந்த இரண்டு நாடுகளும் தன்னைத் தோற்கடிப்பதற்கு தமது தூதரகங்களைப் பயன்படுத்தியதாகக் குறிப்பிட்டிருந்தார்.

சீன நீர்மூழ்கிகளுக்கு இடமளித்ததன் மூலம், இந்தியப் பெருங் கடலில், சீனாவுக்குப் பட்டுக் கம்பளம் விரித்திருந்தது முன்னைய அரசாங்கம். அது வரையில், நீர்மூழ்கிகளின் ஆதிக்கத்துக்கான களமாக இந்தியப் பெருங்கடல் இருந்ததில்லை. இந்த நிலையை ஒரேடியாக மாற்றியது சீன நீர்மூழ்கிகளின் வருகை. இந்தியப் பெருங் கடலில், சீனாவின் ஆதிக்கத்தை அச்சத்துடன் பார்க்கின்ற இந்தியாவும், உலகளவில் சீனாவின் வளர்ச்சியை அச்சத்துடன் பார்க்கின்ற அமெரிக்காவும், கைகோர்த்துச் செயற்படுகின்றன. ஆனாலும், இந்தியப் பெருங்கடலில், சீனாவின் ஆதிக்கம் முற்றுமுழுதாக உடைக்கப்பட வேண்டுமாயின், இந்தப் பிராந்தியத்திலுள்ள ஏனைய சிறிய நாடுகளும் தமது வலைப் பின்னலுக்குள் கொண்டு வரப்பட வேண்டும் என்பதில இந்த நாடுகள் உறுதியாக இருக்கின்றன.







இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை, மொரிசியஸ், சீஷெல்ஸ்நாடுகளுக்கான பயணம் இதில் முக்கியமானது. ஏற்கனவே திட்டமிட்டபடி, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி மாலைதீவுக்கு செல்லவில்லை. அங்கு ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பே அதற்குக் காரணம். ஆனால் மாலைதீவுப் பயணம் மிகவும முக்கியமானது. ஏனென்றால், ஏற்கனவே இந்தியாவின் முழுமையான கட்டுப்பாட்டிலிரு ந்த மாலைதீவு, சில ஆண்டுகளாகவே சீனா வின் செல்வாக்குக்குட்பட்ட பகுதியாக மாறி வருகிறது. சீனாவின் கொழும்புத் துறைமுக நகரத்திட்டத்தை புதிய அரசாங்கம், மீளாய்வு செய்தது போலவே, முன்னைய அரசாங்கத்தினால் இந்திய நிறுவனத்திடம் வழங்கப்பட்ட மாலே விமான நிலைய விரிவாக்கப் பணிகளை மாலைதீவின் தற்போதைய அரசாங்கமும் மீளாய்வு செய்தது. கடைசியில் அந்த திட்டம் இந்தியாவிடமிருந்து பறிக்கப்பட்டு, சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது இந்தியாவுக்கு மாலைதீவின் மீதிருந்த செல்வாக்கு உடைந்து போனதை வெளிப்படுத்தியது. அதுமட்டுமல்ல, சீன நீர்மூழ்கிகளுக்கு இனி கொழும்புத் துறைமுகத்தில் இடமளிக்கப்படாது என்று பீஜிங்கில் வைத்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தபோது, அது குறித்து ரொய்ட்டருக்கு கருத்து வெளியிட்ட சீன பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர், இதன் மூலம் இந்தியப் பெருங்கடலில் சீன நீர்மூழ்கிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்று கூறியிருந்தார்.

கொழும்புத் துறைமுகத்தில் சீன நீர்மூழ்கிகளுக்கு இடமளிக்கப்படாது போனால், தமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும், மாலைத்தீவு, பாக்கிஸ்தான் போன்ற ஏனைய துறைமுகங்களும் அந்தப் பகுதியிலேயே இருப்பதாகவும் சீன பாதுகாப்பு அதிகாரி கூறியருந்தார். இதிலிருந்து, இலங்கையையடுத்து மாலைதீவின் மீது சீனா கண்வைத்திருக்கிறது என்பது உறுதியாகியிருக்கிறது. ஏற்கனவே தனது கடல்வழிப்பட்டுப் பாதைத் திட்டத்தில் மாலைதீவையும் சீனா இணைத்துக் கொண்டுள்ளது. இந்த நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சீஷெல்ஸ், மொறிசியஸ் இலங்கைக்கான பயணங்களைப் போன்றே மாலைத்தீவுக்கான பயணமும் முககியமானது. ஆனால்அது சாத்தியமாகவில்லை.

மாலைதீவின் அரசியல் சூழலை அழுத்தங்களின் மூலம் இந்தியா மாற்றியமைக்க முனைந்தாலும், அது வெற்றியளிக்கவில்லை. இந்தியாவுக்கு தெற்கு மற்றும் மேற்கிலுள்ள இந்த நான்கு தீவுகளையும், ஒருங்கிணைத்து, சீனாவுக்கு எதிரான ஒரு பாதுகாப்பு வலைப்பின்னலை உருவாக்க முயன்றிருந்தார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. இது தனியே மோடியினது திட்டம் மாத்திரமல்ல.

அமெரிக்காவினதும் திட்டமும் கூட இந்தியப் பெருங்கடல் பாதுகாப்பு விவகாரங்களைப் பொறுத்தவரையில் இப்போது, இந்தியாவின் பாதுகாப்பு நலன்களும் அமெரிக்காவின் பாது காப்பு நலன்களும் கிட்டத்தட்ட ஒரே விதமானதாகவே உள்ளன. சீனாவின் சவால்களை முறியடிப்பதே இரு நாடுகளினதும் முக்கியமானதும் பொதுவானதுமான பிரச்சினையாக மாறியுள்ளது.

இந்தச் சூழலில் இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் இந்த இரண்டு நாடுகளுக்கும் மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. இந்தநிலையில், அமெரிக்காவும் இந்தியாவும் எதிர்காலத்தில் இரண்டு முக்கியமான விடயங்களுககு முன்னுரிமை கொடுக்கக்கூடும். முதலாவது, தமது பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்தக்கூடிய, தற்போதைய அரசாங்கத்தைப் பாதுகாப்பதில் கூடிய கவனம் செலுத்தப்படும். அதற்காக, தமது எல்லா வளங்களையும், இலங்கைக்கு பகிர்ந்தளிக்கவும் இந்த நாடுகள் தயங்காது. இரண்டாவது, முடிந்தவரைக்கும் சீனாவின் தலையீடுகளை குறைக்கும் வகையில், அதனை அந்நியப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடும். கொழும்புத் துறைமுக நகரத் திட்ட விவகாரத்தில், இலங்கை அரசாங்கம் சீனாவுடன் முட்டி மோதுகிற அளவுக்கே சென்றிருக்கின்றது.

சீனாவைக் கடுமையாக எரிச்சலடையும் அளவுக்கு இலங்கையின் நகர்வுகள் அமைந்திருக்கின்றன என்றால், இதற்குப் பின்னால், தற்போதைய அரசாங்கத்தின் முடிவுகள் மட்டும் காரணம் என்று கருத முடியவில்லை. இந்தியாவும், அமெரிக்காவும்கூட இந்த முடிவுகளின் பின்னணியில் இருந்திருக்கக்கூடும். மஹிந்த ராஜபக்சவை அதிகாரத்திலிருந்து வெளியேற்றுவதற்கு உதவியதற்கான கைமாறாகக்கூட இந்த விடயத்தில் புதிய அரசாங்கம் தீவிரப் போக்கை காண்பிக்கலாம்.

இது இறுதியான முடிவாக இல்லாவிட்டாலும், சீனாவுக்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுத்து வருகிறது. இந்த அழுத்தங்களை சீனா நிச்சயம் எதிர்பார்த்திருக்காது. மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின்மீது சீனா கொண்டிருந்த நம்பிக்கைதான் பெரியளவிலான முதலீடுகளை செய்வதற்கு காரணம். ஆனால், அத்தகைய பெரிய முதலீடுகளுக்கும் ஆபத்தை விளைவிக்க தமது நீர்மூழ்கிகளே காரணமாகிவிடும் என்று சீனா எதிர்பார்க்கவில்லை. இதனை எதிர்பார்த்திருந்தால், சீனா தனது நீர்மூழ்கிகள் விவகாரத்தில் கொஞ்சம் கவனமாக செயற்பட்டிருக்கும். எவ்வாறாயினும் இப்போதைய நிலையில், சீன நீர்மூழ்கிகள் தான், ஆசியக்கண்டத்தின் அரசியல் போக்கை மாற்றியமைக்குக் காரணமாகியுள்ளன. இத்துடன் இது நின்றுவிடும் எனக் கூற முடியாது அதன் தாக்கம் இன்னும் பல விவகாரங் களில் எதிரொலிக்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட விவாதத்தின் போது

# அருங்காட்சியகத்தினுள் ஆயுததாரிகள் அட்டூழியம்

### 19 பேர் உயிரிழப்பு

**நாடாளுமன்றத்தில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் குறித்த விவாதம் நடந்து கொண்டிருந்த போது துனிஷியாவின் தலைநகர் ட்யுனீஷ் நகரிலுள்ள அருங்காட்சியகத்தில் நேற்று முன்தினம் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 19 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர்களில் 17 பேர் வெளிநாட்டவர் எனவும் அந்த நாட்டு பிரதமர் தெரிவித்துள்ளார்.**



பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்டிருப்பதாக உள்ளூர் வானொலி தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் மத்திய ட்யூனிஷில் நாடாளுமன் றத்திற்கு அருகில் அமைந்திருக்கும் பார்தோ அருங்காட்சியகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்தபோது, நாடாளுமன்றத்தில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் குறித்த விவாதம் நடந்துகொண்டிருந்தது. தாக்குதலையடுத்து நாடாளுமன்றத்தில் இருந்தவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதேவேளை பார்தோ அருங்காட்சியகத்தில் பயங்கரவாதத் தாக்குதல் நடந்திருக்கிறது என உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் முகமது அலி அரோவி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்கள் ஏ.கே ரக துப்பாகிகளை வைத்து தாக்குதலை நடத்தியதாக அவர் தெரிவித்தார்.

அருங்காட்சியகத்திலிருந்து பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் வெளியேற்றப்பட்டுவிட்டாலும், சிலர் இன்னும் உள்ளே சிக்கியிருப்பதாக நம்பப்படுகிறது. பாதுகாப்புப் படையினர் அருங்காட்சியகத்தினுள் நுழைந்துள்ளர் என முகமது அலி அரோவி தெரிவித்துள்ளார். பழங்காலக் கலைப்பொருட்கள் நிறைந்த அந்த அருங்காட்சியகம் ட்யூனிஷ் நகரில் சுற்றுலாப் பயணிகள் தேடிவரும் இடமாக இருந்து வந்தது. அருகில் உள்ள லிபியாவில் நிலைமை ஸ்திரமின்றிக் காணப்படு வதால், துனீஷியாவிலும் பாதுகாப்பு குறித்த கவலைகள் அதிகரித்துள்ளன.

பெரும் எண்ணிக்கையிலான துனீஷியர்கள் சிரியாவிலும் ஈராக்கிலும் நடக்கும் சண்டையில் ஈடுபடுவதற்காக சென்றுள்ளனர். அவர்கள் நாடு திரும்பினால், இங்கும் தாக்குதலை நடத்தலாம் என அஞ்சப்படுகிறது.

பெரிதும் சுற்றுலாத்துறையை நம்பியிருக்கும் அந்த நாட்டுக்கு இந்த தாக்குதல் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5)




## பாகிஸ்தானில் மேலும் 9 பேருக்கு தூக்குத்தண்டனை நிறைவேற்றம்

பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் 9 தூக்குத்தண்டனை கைதிகளுக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் லாகூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த 9 மரண தண்டனை கைதிகளுக்கு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக கடந்த 17 ஆம் திகதி ஒரே நாளில் 12 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

பாகிஸ்தான் சிறைகளில் மொத்தம் 8 ஆயிரம் மரண தண்டனை கைதிகள் உள்ளனர். அவர்களில் இதுவரை 48 கைதிகள் தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் பெஷாவர் நகர் இராணுவ பாடசாலையில் கடந்த டிசெம்பர் 16 ஆம் திகதி தலிபான் தீவிரவாதிகள் கொடூர தாக்குதல் நடத்தினர். இதில் 132 மாணவர்கள் உட்பட 145 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இதைத் தொடர்ந்து மரண தண்டனைக்கு 6 ஆண்டுகளாக விதிக்கப்பட்டிருந்த தடையை பாகிஸ்தான் அரசு நீக்கியது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## லண்டனில் ஆபாசபடம் பார்த்த 3 நீதிபதிகளின் பதவி பறிப்பு!

பணி நேரத்தில் அலுவலக கணனியில் ஆபாச படம் பார்த்த 3 நீதிபதிகளின் பதவி பறிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் மாவட்ட நீதிபதி டிமோத்தி பவுலெஸ், குடியுரிமைத் துறை நீதிபதி வாரென் கிரான்ட், மாவட்ட துணை நீதிபதி மற்றும் பதிவாளர் பேட்டர் புல்லக் மற்றும் ஆண்ட்ரு மா ஆகியோர் பணி நேரத்தில் அலுவலக கணனியில் அலுவலக இணையத்தை பயன் படுத்தி ஆபாச படம் பார்த்ததாக புகார் எழுந்தது.

இங்கிலாந்து உச்ச நீதிமன்றத்தில் நடந்து வந்த இந்த வழக்கில் நேற்று தீர்ப்பளிக்கப் பட்டது. அந்த தீர்ப்பில், ""நமது நாட்டு நீதித் துறை சட்டங்களின் படி, இவர்களின் செயல்பாடு மன்னிக்கத் தக்கதல்ல.

எனவே, டிமோத்தி பவுலெஸ், வாரென் கிராண்ட், பேட்டர் புல்லக் ஆகியோரை பணி நீக்கம் செய் வதை தவிர வேறு வழியில்லை. எனவே, அவர்கள் பணி பறிக்கப்படுகிறது எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தப் புகாரில் சிக்கிய ஆண்ட்ரு மா என்பவர், அண்மையில் அவராகவே முன்வந்து தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். (இ-5)

## ஓசாமா பின்லேடனைக் காட்டிக் கொடுத்த மருத்துவரின் சட்டத்தரணி சுட்டுக்கொலை

ஓசாமா பின்லேடனை கண்டுபிடிப்பதற்கு அமெரிக்க படையினருக்கு உதவிய பாகிஸ்தானிய மருத்துவரின் முன்னாள் சட்டத்தரணி ஆயுததாரிகளால் நேற்றுமுன் தினம் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணிகளை நிறைவு செய்த நிலையில் தனது இல்லத்தை நோக்கி சென்று கொண்டிருந்த போது பெஷாவர் மாகாணத்தின் வடகிழக்கு பகுதியில் வைத்து அடையாளம் தெரியாத ஆயுத தாரிகளால் சுடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சமியுல்லா அப்ரிடி என்ற குறித்த சட்டத்தரணி தனது காரில் பயணித்துக்கொண்டி ருந்த போது இடைமறிக்கப்பட்டு இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 2013 ஆம் ஆண்டும் குறித்த சட்டத்தரணி, தீவிரவாத குழுக்களினால் அச்சுறுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-5)


## பாகிஸ்தான் தலிபான் தீவிரவாதிகளால் ஆளும்கட்சித் தலைவர் சுட்டுக்கொலை!

பாகிஸ்தானில் ஆளும் கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் ஹாஜி சர்தார் முகமதை தலிபான் தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொன்றனர். பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

இந்த சம்பவம் நடந்த அதே நேரத்தில் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் 34 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தீவிரவாதிகள் பலருக்கு தண்டனை வேகமாக நிறைவேற்றப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்துள்ள தீவிரவாதிகள், அரசியல்வாதிகளை குறிவைத்து தாக்குதலை தொடங்கியுள்ளனர்.

பாகிஸ்தானில் வடமேற்கில் அமைந்துள்ள பெஷாவர்



நகரைச் சேர்ந்தவர் ஹாஜி சர்தார் முகமது. இவர் ஆளும் பாகிஸ்தான் முஸ் லிம் லீக் கட்சியின் இளைஞர் பிரிவு தலைவராக உள்ளார்.

நேற்றுமுன் தினம் வாகனத்தில் சென்று கொண்டி ருந்த அவரை தீவிரவாதிகள் திடீ ரென சுற்றி வளைத்து துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரி ழந்தார்.

இந்த சம்பவத்துக்கு தெஹ்ரி இ தலிபான் பாகிஸ்தான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர்களை எங்கள் அமைப்பு வேட்டையாடத் தொடங்கிவிட்டது. இனி அடுத்தடுத்து இதுபோன்ற சம்பவங்களை நிறைவேற்றுவோம் என்று அந்த அமைப்பினர் கூறியுள்ளனர்.

### இராணுவத் தாக்குதலில் 34 தீவிரவாதிகள் பலி!


இதேவேளை ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய கைபர் பகுதியில் தலிபான் மற்றும் லஷ்கர்-இ-இஸ்லாம் தீவிரவாதிகளை குறிவைத்து பாகிஸ்தான் இராணுவத்தினர் வான் வழி தாக்குதல் நடத்தினர்.

தீவிரவாதிகள் மறைந்திருந்த இடங்களை குறிவைத்து விமானங்கள் மூலம் சரமாரியாக குண்டுகள் வீசப்பட்டன. இதில் 34 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று பாகிஸ்தான் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் எல்லையில் பதுங்கியுள்ள தீவிரவாதிகள்தான் பாகிஸ்தானில் அவ்வப்போது குண்டு வெடிப்புகள், தற்கொலைப்படை தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். 4 நாட்களுக்கு முன்பு 2 கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தற்கொலைப்படை தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் மேற்கத்தேய நாடுகள் கொடுத்த நெருக்கடி காரணமாக பாகிஸ்தான் இராணுவம் மீண்டும் எல்லைப் பகுதியில் தீவிரவாதிகள் மீது தாக்குதலை தீவிரப் படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சிங்கப்பூரை நிறுவிய லீ க்வான் கவலைக்கிடம்



சிங்கப்பூரைத் தோற்றுவித்த லீ க்வான் யூவின் உடல்நிலை கவலைக்கிடமாகவுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

91 வயதாகும் லீ, உடல் நலம் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த மாதம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

1965 ஆம் ஆண்டு மலேசியாவிடம் இருந்து சிங்கப்பூர் விடுதலையடைந்த பிறகு தற்போதைய சிங்கப்பூருக்கான அடித்தளத்தை அமைத்த லீ, அந்நாட்டின் முதல் பிரதமராவார். இவர் 1990 ஆம் ஆண்டு வரை பதவியில் தொடர்ந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியின் வருகை ஆட்சிமாற்றத்தில் மாறுதலை ஏற்படுத்துமா?



மோடி இலங்கை வந்திருந்தார். இது பெரிய செய்தி. ஒரு மிகச் சிறிய நாட்டின் பக்கத்திலுள்ள அணுஆயுத வல்லரசு இந்தியாவின் பிரதமர் அவர். ஆசியாவில் சீனாவை அடக்க அமெரிக்க யானைப் பாகன் பயன்படுத்தப்போகும் அங்குசம். இவ்வாறாக இலங்கை அரசியலிலிருந்து இந்திய தேசத்தை வர்ணிக்கலாம். மறுபுறம் பார்த்தால் மகிந்த ஆட்சி உருவாகுவதற்கு உதவிய நாடு. அமெரிக்காவையும், சீனாவையும் ஓரங்கட்ட 'சீபா' ஒப்பந்தத்தை நிறைவேற்றிடத் துடித்து தோல்வியுற்ற நாடு என்றும் கூறலாம்.

1980 ஆரம்பத்தில் உருவான அமெரிக்க- இந்திய பனிப்போர், 1987 இல் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக புதிய வடிவம் அடைந்தது. இன்றும் அந்த ஒப்பந்தம் இருக்கிறது. ஆனால் கொழும்புத் துறைமுகத்தில் ஒரே மாதத்தில், இரு தடவைகள் சீனாவின் அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்கள் வந்ததால், ஒப்பந்தம் கேள்விக்குள்ளானது.

2009 இற்குப் பின்னர், இந்தியாவின் அமெரிக்காவுடனான பனிப்போர் சீனாவுடன் தாவி, இப்போது துறைமுகநகர திட்டம் கிடப்பில் போடும் அளவிற்கு முறுகல் நிலையை எட்டியுள்ளது. அதே வேளை ஆசியப்பிராந்திய புதிய சமநிலை உருவாக்கத்தில் வியட்நாமிற்கு அடுத்ததாக இலங்கையில்தான் அமெரிக்க-இந்திய் தந்திரோபாயக் கூட்டு, இயங்கு நிலையை வந்தடைதுள்ளதாகக் கணிப்பிடலாம்.

இந்த வருடத்திற்கான சீனாவின் மொத்த உள்ளூர் உற்பத்தியின் வளர்ச்சி 6.5% ஆகக்குறையுமென மதிப்பிட்டாலும், ஆசியாவில் அதன் மேலாதிக்க விரிவாக்கத்தை இந்தியா பெரும் அச்சுறுத்தலாகப் பார்க்கிறது. இதனடிப்படையிலேயே அமெரிக்காவுடன் ஒரு தற்காலிக தந்திரோபாயக் கூட்டு ஒன்றினுள் தன்னை பிணைத்துக்கொள்ள இந்தியா முன்னிற்பதைக் காணலாம்.

ஆழமாக நோக்கினால் அமெரிக்க சார்பு அணிகளின் பலவீனத்தையும் இந்தியா பயன்படுத்திக்கொள்ள முற்படுகிறது என்பதை அவதானிக்கலாம். அதாவது, அரச வட்டி வீதத்தை 1.75 ஆகக் கீழிறக்கிய தென்கொரியாவின் பொருண்மியப் பலவீனமும், இக்கட்டான காலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய தாங்குதிறன் ஐரோப்பிய வங்கிகளுக்கு இல்லை என்கிற மதிப்பீடுகளும், திறைசேரி திவாலாகிப்போன கிரேக்கத்தின் கையறு நிலையும், இலங்கையின் புதிய ஆட்சிக்கு கடன் கொடுக்க மறுத்த அனைத்துலக நாணய நிதியமானது பொருளாதாரம் நிலைகுலைந்து போகும் உக்ரெய்ன் இற்கு ஓடோடிச் சென்று 17.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்க முன்வரும் காரணங்களையும் இந்திய புரிந்துகொள்கிறது.

அமெரிக்காவின் பங்குச் சந்தை இப்போது ஜொலித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் ஐரோப்பாவின் பொருளாதாரம் அதன் மத்திய வங்கியிடம் கையேந்திக் கொண்டிருக்கிறது. கார்பரேட் முதலீட்டாளர்கள் ஆசியாவை நோக்கி நகர்கின்றார்கள். சீனாவின் வளர்ச்சி வீதம் குறைவடைவதனால், அவர்கள் முதலீட்டிற்கான வேறு சாதகமான நாடுகளைத் தேடுகின்றார்கள். அதுமட்டுமல்லாது அமெரிக்க- சீன அதிபர்களின் விஜயமானது இந்தியாவை நோக்கி இக்கார்பாரெட்களை திரும்பிப் பார்க்க வைக்கிறது. ஆக மொத்தம் ஆசியாவைப் பொறுத்தவரை இந்தியாவிற்கே இது சாதகமாக அமையுமென எதிர்பார்க்கலாம்.

அதேவேளை சீனாவின் முத்துமாலை சுற்றிவளைப்பினை உடைத்தெறிய வேண்டுமாயின், யாரோடு கூட்டுச் சேர்ந்தாவது, தன்னைப் பொருண்மிய ரீதியாகவும், படைத்துறைரீதியாகவும் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற முடிவிற்கு டெல்லியின் தென்வளாகம் வந்திருப்பது போல் தெரிகிறது. இதில் விசித்திரமான நகர்வுகளும் நடைபெறுகின்றன. அதாவது அமெரிக்க- இந்திய இராஜதந்திர நெருக்கத்தால் சீனாவின் முதலீடுகளும் இந்தியாவில் அதிகரிக்கிறது.

தற்போதுள்ள 400 மில்லியன் சீன முதலீட்டினை, 10 பில்லியன் டொலர்களாக அதிகரிக்கும் பல உடன்பாடுகளில் மோடியும் ம்க்ஷி ஜின்பிங்கும் கடந்த வருடம் கைச்சாத்திட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் பராக் ஒபாமாவின் அண்மைய விஜயம் 4 பில்லியன் முதலீட்டைக்கூடக் கொண்டு வரவில்லை. இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரை, அமெரிக்காவோடு ஒரு இணக்கப்பாடு தனக்கு இருப்பதுபோல் மைத்திர்-ரணில் ஆட்சி அதிகாரத்திற்கு காட்டிக்கொள்ள இந்தியா முனைகிறது.

ஆட்சி மாற்றமானது நாடாளுமன்றத் தேர்தலோடு முற்றுப்பெறும் வரை, இதே போக்கில் இந்தியா தனது காய்களை நகர்த்துமென எதிர்பார்க்கலாம். ஐ.நா. அறிக்கை தொடக்கம், முன்னைய ஆட்சியாளர்களால் களவாடப்பட்டதாகச் சொல்லப்படும் பணத்தினை மீண்டும் நாட்டிற்குள் கொண்டுவரும் விவகாரம்வரை, இந்தியாவின் அனுசரணையை அரசும் எதிர்பார்க்கும், இந்தியாவும் அதற்காகப் பாடுபடுவதுபோல் காட்டிக்கொள்ளும்.

'நாட்டின் வருமானத்தைப் பொறுத்தமட்டில், கையும் கணக்கும் சரியாக இருப்பதால் மேலதிக கடன் வழங்கத் தேவையில்லை' என்று கிறிஸ்டின் லகாட்டின் ( இவர்தான் ஐ.நா.சபையின் அடுத்த பொதுச் செயலாளர் என்று நம்பப்படுகிறது) அனைத்துலக நாணய நிதியம் இலங்கையைக் கைவிட்ட விவகாரமும் இந்தியாவிற்கே சாதகமாக அமையப் போகிறது.

அதாவது உறுதியான ஆட்சி ஏற்படும் வரை, வாக்குறுதிகளை வழங்கும் வைபவங்களே நிகழும். பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூன் அவர்களை மைத்திரிபால சிறிசேன சந்தித்தாலும் இதுதான் நடக்கும். இந்த வகையான இடைக்கால நெருக்கடியை இலங்கை எதிர்கொள்ளும் போது, 'குறை நிரப்பும்' பங்கினை இந்தியா மனமுவந்து ஏற்கும் நிலை தோன்றுமென்பதே நிஜமானது. இந்த விஜயத்தின் போது ஏற்கனவேயுள்ள சுதந்திர வர்த்தக உடன்பாட்டின் ஆழ- அகலங்கள் விரிவுபடுத்தப்படும் என்கிறார்கள்.

எப்படியிருந்தாலும இந்தியாவிற்குச் சார்பான வர்த்தக உபரி அப்படியே இருக்கும். இன்னும் சொல்லப்போனால் வெகுவாக அதிகரிக்கும். இந்த அச்சத்தினை வெளிப்படுத்தும் ஜாதிக ஹெல உறுமயவின் பட்டாலி சம்பிக்க ரணவக்க, இலங்கையின் பொருளாதாரமானது முற்றுமுழுதாக இந்தியாவின் பிடிக்குள் அகப்படுவது ஆபத்தானது என்கிறார். அதாவது இதனை இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், 'கடனை ஓரிடத்திலிருந்து மட்டும் வாங்காமல், எல்லா வல்லரசுகளிடமிருந்தும் பகிர்ந்து பெற்றுக் கொள்ளுங்கள்' என்பது போலிருக்கிறது சம்பிக்கவின் அறிவுரை.

அதாவது 'மகிந்தர் விட்ட தவறை நீங்களும் விடாதீர்கள்' என்று சொல்ல வருகிறாரா? இல்லையேல் இந்தியா குறித்தான மகாவம்ச மயக்கத்திலிருந்து பேசுகிறாரா? என்று தெரியவில்லை.

இருப்பினும் சிங்களத்தின் இராஜதந்திர மைய ஓட்டத்திலிருந்து முரண்படாமல் அவர் பேசுகிறார் என்பதுதான் உண்மை.

வருகை தந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், 'அமைச்சர்' என்கிற வகையில் இவரையும் சந்திப்பாரென எதிர்பார்க்கப்பட்டிருந்தன. இவரின் வருகையை இரண்டு தரப்பினர் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தனர்.

ஒரு தரப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பு. மறுதரப்பு மைத்திரி- மகிந்த கட்சி (கள்).

பூகோள எதிர்கால அரசியலையும், இந்துசமுத்திரப் பிராந்திய அரசியலையும் இணைத்துப் பார்க்கும்போது, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மைத்திரியின் தலைமையிலான, ஆனால் மகிந்த அணியின் ஆதரவு பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெற்று ஆட்சியமைப்பதை ' ஒரு தரப்பு' விரும்பும்.

அச்சக்தி எதுவென்பதை தேர்தலின் போதும், அது முடிந்த பின்னரும் மக்கள் தெரிந்து கொள்வார்கள். ஆட்சிமாற்றத்தின் திசையை, தமக்குச் சார்பாக திருப்ப வருகிறாரா மோடி என்கிற பேச்சும் காதில் விழுந்தது. பொறுத்திருந்து பார்ப்போம்.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13இற்கு அப்பால் தீர்வு குறித்து முதலில் பேசியவர் மகிந்ததான்!

## லக்ஸ்மன் கிரியெல்ல நாடாளுமன்றில் தெரிவிப்பு



13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டம் குறித்து இந்திய பிரதமர் மோடி கூறியதாக எதிர்க்கட்சியினர் குழப்பமடைந்துள்ளனர்.

(கொழும்பு)

**13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டம் பற்றி முதலில் கூறியது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.**

உண்மையில் முதலில் 13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டம் குறித்து மகிந்த ராஜபக்ஷவே உறுதியளித்திருந்தார்.

உள்நாட்டு விசாரணை குறித்து முதன்முதலில் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு மகிந்த ராஜபக்ஷவே உறுதியளித்திருந்தார். இந்த விடயங்களை இன்று பலர் மறந்து விட்டனர்.

உள்நாட்டு விசாரணைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த சர்வதேச பிரச்சினைக்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சர்வதேச சவால்களை எதிர்நோக்கும் போது கட்சி பேதங்களை பார்க்கக் கூடாது என லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பை தடைசெய்ய வேண்டுமாம்

## முன்னாள் பிரதமர் கோரிக்கை

பயங்கரவாத அமைப்புக்களான அல்கொய்தா மற்றும் தலிபான் ஆகியவற்றின் வரிசையில் ஐ.எஸ். ஐ.எஸ். என்ற பயங்கரவாத அமைப்பையும் இலங்கை அரசாங்கம் தடை செய்ய வேண்டும் என்று முன்னாள் பிரதமர் தி.மு. ஜயரத்ன நேற்று முன்தினம் சபையில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபை சட்டத்தின ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

உறுப்பினர் தி.மு.ஜயரத்ன இங்கு



மேலும் கூறுகையில், சர்வதேச அமைப்புக்கள் தமக்கு ஏற்றவாறு செயற்படுகின்ற அதேவேளை தாம் நினைத்தவாறு தீர்மானங்களையும் மேற்கொண்டு வருகின்றன. அத்தகைய அமைப்புக்கள் தமக்கு கட்டுப்பட்டு நடவாத நாடுகள் மீது அழுத்தங்களை பிரயோகிக்க முற்படுகின்றன. இதனை ஏற்க முடியாதுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் உருவெடுத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற பயங்கரவாத அமைப்பு தலைகளை வெட்டி மனிதப்படுகொலைகளை மேற்கொண்டு வருகின்றது. இது தொடர்ந்து செல்கின்றது. எனவே ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற பயங்கரவாத அமைப்பை அல்கொய்தா மற்றும் தலிபான் போன்ற பயங்கரவாத அமைப்புக்களின் வரிசையில் இலங்கை அரசாங்கம் தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மகிந்த ஆட்சியைக் கவிழ்த்தது பலசேனாவின் நடவடிக்கையே

## யோகராஜன் எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பொதுபல சேனாவின் நடவடிக்கைகளால்தான் சர்வதேசத்தின் ஆதரவை இழந்தோம் என்பது மட்டுமல்ல பொதுபல சேனாவின் நடவடிக்கைகள் காரணமாகவே மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியும் கவிழ்ந்தது என பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபைச்சட்டத்தின் ஒழுங்கு விதிகள் தொடர்பான பிரேரணை விவாதத்தில் உரையாற்றும் போதே ஆர். யோகராஜன் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஐ.நாவில் இலங்கைக்கு ஆதரவு வழங்க உறுதியளித்து இறுதி நேரத்தில் பல நாடுகள் அதனை வாபஸ் பெற்றன. இதற்கு பொதுபல சேனாவின் நடவடிக்கைகளே காரணம் என்று உண்மையை ஏற்றுக்கொண்ட முன்னாள் அமைச்சர் டியூ. குணசேகரவை பாராட்டுகிறேன்.

சர்வதேச நாடுகளின் ஆதரவை மட்டுமல்ல, மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி கவிழவும் பொதுபல சேனாவே காராணமாக அமைந்தது.

பௌத்தர்களின் ஆதரவுடன் மட்டும் வெற்றி பெறலாம் என்று மகிந்த எண்ணியிருந்தார்.

ஆனால் சிறுபான்மை மக்களின பெரும் ஆதரவுடன் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார்.

அதேவேளை ஊழல் மோசடி



கள் காரணமாக சிங்கள மக்களும் மகிந்தவை தோல்வியடையச் செய்தனர்.

19 ஆவது திருத்தச் சட்டம் வரவேற்புக்குரியதாகும். இதன் மூலம் ஆட்சி மாற்றல் தடுக்கப்பட்டுள்ளது. இது மக்களின் வாக்குரிமையை பாதுகாக்கும் நடவடிக்கையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## பகுத்தறிவுப் பகலவன்

பகுத்தறிவுப் பகலவனாக விளங்கியவர் பெரியாராவார். பல தனித்த சிந்தனைகளுக்கெல்லாம் சொந்தக்காரர் அவர். பல திருப்புமுனைகளை ஏற்படுத்திய சிந்தனைகள் அவருடைய சிந்தனைகள். எதையும் பளிச்சென்று சொல்வது, தெளிவாகச் சொல்வது இவையெல்லாம் அவருடைய இயல்பு என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். அதாவது ஒருமுறை ஒருத்தர் அவரிடம் கேள்வி கேட்டாராம்.

ஐயா சுயநலத்துக்கும் பொதுநலத்துக்கும் ஓர் உதாரணம் சொல்லுங்கள் அப்படியென்று. அப்போது பெரியார் தெளிவாக, கூர்மையாக பதில் சொல்லியிருக்கிறார். மழை பெய்வது பொது நலம், குடைபிடிப்பது சுயநலம் என்று.

உலக அளவில் இதுவரைக்கும் எந்தவொரு அறிஞரும் இப்படியொரு உதாரணம் சொல்லியிருப்பார்களா? என்பது ஆச்சரியம். சுயநலத்திற்கும் பொதுநலத்திற்கும் எளிமையான விளக்கமல்லவா இது. இப்படித் தனக்கென்று தனித்துக் கருத்துக்களைச் சொல்லக்கூடிய ஆற்றல் பெரியாரிடம் உண்டு.

அதோடு பெரியாரிடம் இருக்கிற மிகச்சிறந்த குணம் என்னவென்றால், சிக்கனம். நேர சிக்கனம், அதேநேரத்தில் பொருளாதாரச் சிக்கனம். இரண்டுமே நமக்குப் படிப்பினையாக அமையக் கூடியது. சிக்கனம் என்றால் தேவையான செலவுகளை மட்டும் செய்துவிட்டு தேவையில்லாத செலவுகளைச் சுருக்கமாகச் செய்வது, அதுதான் சிக்கனம். செலவே செய்யாமல் இருப்பதல்ல. அவருடைய சிக்கனச் சிந்தனைக்கு ஒரு சான்று சொல்வார்கள்.

அதாவது ஒரு தடவை கோயம்புத்தூர் புகையிரத நிலையத்தில் தொழிலதிபர் ஜி.டி.நாயுடு பிரயாணம் செய்வதற்கு வந்தார். அப்போது புகையிரதத்தில் மூன்றாவது பெட்டியில் பெரியார் உட்கார்ந்திருக்கிறார். அந்தக் காலத்தில் புகையிரதப் பெட்டியில் மூன்று வகுப்புகளுண்டு. ஜி.டி.நாயுடு பெரியார் இடத்துக்கு வந்து அவருடைய பயணத்தைப் பற்றி விசாரித்துவிட்டு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார். பேசிக்கொண்டே இருக்கும் போதே ஜி.டி.நாயுடு ஓர் ஆளை அனுப்பி முதல் வகுப்பு டிக்கெட் ஒன்று வாங்கிக்கொண்டு வரச் சொன்னார்.

வசதி குறைவாக இருக்கிற இந்த மூன்றாம் வகுப்புப் பெட்டியில் ஏன் பிரயாணம் செய்கிறீர்கள்? முதல் வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்யலாமேயென்று அந்த டிக்கெட்டைப் பெரியாரிடம் அவர் கொடுத்தார். பின்பு அவர் தன்னுடைய பெட்டிக்குத் திரும்பிவந்துவிட்டார். அதன் பின் ஒரு புகையிரத நிலையத்தில் இந்தப்புகையிரதம் நின்றிருக்கிறது. பெரியார் எப்படியிருக்கிறார் என்று பார்க்க திரும்ப ஜி.டி.நாயுடு அங்கே போயிருக்கிறார். முதல் வகுப்புப் பெட்டிக்கு அவரைதேடிக் கொண்டு போனால் பழையபடி மூன்றாம் வகுப்புப் பெட்டியிலே பெரியார் உட்கார்ந்திருந்தாராம். நான் உங்களுக்கு முதல் வகுப்பு டிக்கெட் வாங்கிக் கொண்டு வந்தேனே. நீங்கள் முதல் வகுப்பிலேயே பயணம் செய்யலாமே. இங்கேயே உட்கார்ந்திருக்கிறீர்களே அப்படியென்றாராம்.

அப்போதுதான் பெரியார் சொல்கிறார். இங்கே ஒன்றும் கஷ்டமாக இல்லை. நன்றாகத்தான் இருக்கிறது. எந்த வகுப்பில் உட்கார்ந்தால் என்ன? புகையிரதம் போகவேண்டிய இடத்திற்குப் போகத்தான் போகின்றது. அதனால் நான் என்ன செய்தேனென்றால் அந்த முதல் வகுப்பு டிக்கெட்டை வீணாக்கவில்லை. திரும்ப அந்த நிலைய அதிகாரிகளிடம் கொடுத்துப் பணமாக்கிவிட்டேன். அதைக்கட்சி நிதியில் சேர்த்துவிட்டேன். எதற்குத் தேவையில்லாமல் பணத்தை வீணாக்கவேண்டும். அது ஒரு நல்லகாரியத்துக்குப் பயன்படட்டுமே என்று சொன்னவுடன் ஜி.டி.நாயுடு பெரியாரை ஆச்சரியமாகப் பார்த்தார். இப்படியெல்லாம் சிக்கனத்துக்கு பெயர் போனவர் தான் பெரியார் .

சுயமரியாதைக் கருத்துடன் பேசுவார். அதன்படி அவரும் நடப்பார். அவர் மேடையில் பேசிக்கொண்டு இருக்கும்போது கூட்டத்தில் முதல் வரிசையில் இருந்த ஒருத்தர். தன்னுடைய காலுக்கு மேல் கால்போட்டு உட்கார்ந்திருந்தார். ஒருத்தர் அதை வந்து கண்டித்திருக்கிறார். பெரியார் பேசிக்கொண்டு இருக்கிறார். நீங்கள் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருக்கிறீர்கள். மரியாதை வேண்டாமாவென்று. அதற்குப் பெரியார் அவரைக் கண்டித்தார். அவருடைய கால் மேல்தானே அவர் கால் போட்டிருக்கிறார். அதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. அவர் வேறு ஆள்மேல் கால்போட்டால்தான் குற்றமே தவிர அவருடைய கால் மேல் அவர் கால்போட்டது குற்றமில்லையே என்று கூறினார்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமத்திற்கு ஒருமில்லியன்ரூபா நிதி கிடைத்தது; வேலைகள் ஆரம்பம்

(மல்லாவி)

அரசாங்கத்தின் 100நாள் வேலைத்திட்டத்தின் கீழ் கிராமங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் ஒரு கிராமத்திற்கு ஒரு மில்லியன் ரூபா நிதியுதவித்திட்டம் ஊடாக துணுக்காய்பிரதேச செயலக பிரிவிற்கு 2 கோடியே 10 இலட்சம் ரூபா நிதிகிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இந்நிதியினைப் பயன்படுத்தி கிராமங்களில் காணப்படும் மிக அவசியமான பொது வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குண பாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரி விக்கையில், அரசாங்கத்தின் நூறு

## துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

நாள் வேலைத் திட்டத்தின் ஊடாக கிராமங்களில் காணப்படும் மிக அவசியமான வேலைத் திட்டங்களை அங்கு வசித்து வருகின்ற கிராம மக்களினால் இனம் காணப்பட்டு அதை கிராமசேவகர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் 10 இலட்சம் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் படி துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் உள்ள 20 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் தலா 10 இலட்சம் ரூபா வீதம் 2 கோடி ரூபாவிற் கான வேலைகள் நடைபெறவுள்ளன.

20 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் இனங் காணப்பட்ட வேலைகளை மிக விரைவாகவும் தரமாகவும் பூர்த்திசெய்யும் முதல் கிராமத்திற்கு மேலும் ஒரு தொகுதி வேலைகளைப் பூர்த்தி செய்ய மேலதிகமாக 10 இலட்சம் ரூபா (போனஸ்) நிதி வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)

# சீர்திருத்த தண்டனையை உதாசீனம் செய்தால் இரட்டிப்புத் தண்டனை

(கிளிநொச்சி)

சிறிய குற்றங்களில் ஈடுபடுபவர்கள், நீதிமன்றத்தால் விதிக்கப்படும் சமுதாயச் சீர்திருத்தப் பணிகளில் ஈடுபடவேண்டும் என்றும்தண்டனையை உதாசீனம் செய்தால் இரட்டிப்புத் தண்டனை வழங்கப்படும் என்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சமுதாயசார் உத்தியோகத்தர் கே.எம்.றஜீம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில், சிறிய குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மீண்டும் குற்றமிழைக்கக்கூடாது என்பதற்காகவும்சமுதாயத்தில் நற்காரியங்களை செய்யவேண்டும் என்பதற்காகவும் இந்தத் தண்டனை நீதிமன்றத்தால் வழங்கப்படுகின்றது.

இந்தத் தண்டனையை பெற்றவர்கள் பொது இடங்களை துப்புரவுசெய்தல், ஒழுங்கமைத்தல் போன்ற சமுதாயப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். சிலர் இந்தத் தண்டனையை உதாசீனம் செய்து வருகின்றனர். வழங்கப்பட்ட தண்டனைக்கு ஏற்ப இவர்கள் முறையாக நடந்து கொள்ள வேண்டும். இல்லாது விடின் வழங்கப்பட்ட தண்டனையை விட இரட்டிப்புத் தண்டனையை எதிர்கொள்ள நேரிடும்.

இந்த வருட தொடக்கத்தில் இருந்து இதுவரையான காலப்பகுதி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் 7 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 34 பேரும் சமுதாய சீர்திருத்த தண்டனையை பெற்றுள்ளனர். கடந்த 2014 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் 96 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 109 பேரும் இந்த தண்டனையைப் பெற்றதாக அவர் கூறினார். (அ-2)

# மாற்றுத்திறனாளிகளுக்கு புனர்வாழ்வு அளித்தல் தொடர்பான செயலமர்வுகள்

(மல்லாவி)

சமூக சேவைகள் அமைச்சினால், வடமாகாணத்திலுள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் கடமையாற்றுகின்ற சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக சேவை உதவியாளர்கள் உட்பட அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் ஆகியோருக்கு மாற்றுவலுவடையோருக்கான சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு அளித்தல் தொடர்பான செயலமர்வு ஒன்று இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் கொழும்பு மாலம்பே கல்விப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சின் செய்திப்பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வடக்கு மாகாணத்தில் போர்ச் சூழல் நிலைகள் காரணமாகவும் மற்றும் ஏனைய வழிகளாலும் மாற்றுத்திறனாளிகளாக ஆக்கப்பட்டுள்ளவர்களுக்கான தேசியமட்டத்திலான புனர்வாழ்வுத் திட்டத்தை சமூக சேவைகள் அமைச்சு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தை வடக்கு மாகாணத்திலும் நடைமுறைப்படுத்தும் செயற்பாடாக மாவட்ட ரீதியாக மாதிரி பிரதேச செயலகப்பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு முதலில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில் கண்டாவளை பிரதேச செயலகப்பிரிவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவும் வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவும் மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேச பிரிவுகளில் உள்ள மாற்றுவலுவுற்றோர் தொடர்பான வேலைத்திட்டங்கள் விசேடமாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து இத்திட்டம் ஏனைய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளதாகவும் சமூக சேவைகள் அமைச்சின்செய்திப்பிரிவுமேலும் தெரிவித்துள்ளது. (அ-2-15)






முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் பண்பாட்டு விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கலாசார பேரணியானது மாலை 4 மணிக்கு முள்ளியவளை நெடுங்கேணி சந்தியில் இருந்து ஆரம்பமாகி மு/வித்தியானந்தாக் கல்லூரியை வந்தடைந்தது.இதன்போது கலைஞர்கள் கௌரவிப்பு,சிலம்போசை ,நூல்வெளியீடு போன்ற கலைநிகழ்வுகள் நடைபெற்றன.

(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# யூனியன்குளம் கிராமத்தில் தொடரும் கசிப்பு உற்பத்தி

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி யூனியன்குளம் கிராமத்தில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை என்பன அதிகரித்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் பொலிஸார் நடமாட்டம் குறைவாகவுள்ளதாகவும் இதனை கட்டுப்படுத்த எவரும் முன்வராத நிலையிலும் இச் சட்டவிரோதகசிப்புஉற்பத்திதொடர்வதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இக்கிராமத்தில் வசித்து வருகின்ற குடும்பஸ்தர்கள் விவசாயம் செய்வதுடன் கடற்தொழிலையும் மேற்கொண்டுவருகின்றனர்.

இவ்வாறு உழைத்து ஊதியத்தை தினமும் இவர்கள் கசிப்பு அருந்துவதற்கு பயன்படுத்தவதால் தமது குடும்பத்தை முன்னேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக குடும்ப பெண்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கசிப்பை அருந்தி விட்டு வீடு வந்து சேரும் இவர்கள் மனைவியுடனும் தமது பிள்ளைகளுடனும் சண்டையிடுவதால் [illegible] தமது கல்வியை இரவு [illegible]ளில் வீட்டிலிருந்து கற்கமுடியாதுள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கசிப்பை அருந்தி விட்டு வரும் நபர்கள் வீதியால் பயணிப்போரை அவதூறான வார்த்தைகளால் பேசி வீண் விதண்டாவாதத்தில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையை கட்டுப்படுத்த கிளிநொச்சிமாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட [illegible] (அ-2-282)

# உத்தியோகத்தரை கடித்த நபர் பொலிஸாரால் கைது

(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலகத்தில் கடமையில் இருந்த உதவிப் பிரதேச செயலாளரை தகாத வார்த்தையால் திட்டியதுடன் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரை கடித்ததாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா பிரதேச செயலகத்திற்கு காணிப்பிரச்சினை தொடர்பாக வவுனியா, சமனங்குளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் சென்றுள்ளார். அது தொடர்பாக உதவி பிரதேச செயலாளருடன் கதைத்த போது அவர் தனக்கு சார்பாக செயற்படாததால் கோபமடைந்த குறித்த நபர் உதவி பிரதேச செயலாளரை கண்டபடி தகாத வார்த்தையால் திட்டியபடி பிரதேச செயலகத்தை விட்டு வெளியேற முற்பட்டுள்ளார்.

இதனையடுத்து அங்கு நின்ற சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் அவரை தடுக்க முற்பட்ட வேளை அவரது கையில் கடித்து விட்டு தப்ப முயன்ற நிலையில் தமக்கு அறிவிக்கப்பட்டு குறித்த நபரை தாம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடித்ததால் காயமடைந்த சமுர்த்தி உத்தியோகத்தர் வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட குறித்த நபர் சுவிஸ் நாட்டில் இருந்து அண்மையில் வந்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடும்பாவி சாகாளோ ஒரு கோடி மழை பெய்யாதோ!
மாபாவி சாகாளோ ஒரு மாரி மழை பெய்யாதோ!
- நாட்டார் பாடல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பிஞ்சுகள் பருகும் தண்ணீரில் நஞ்சு கலந்த நஞ்சடைத்த இதயத்தார் நடமாடவோ!

ஏழாலை மயிலங்காடு ஸ்ரீமுருகன் வித்தியாலய குடிநீர்த் தாங்கியில் கிருமிநாசினி கலக்கப்பட்டது என்ற செய்தி பெரும் பரபரப்பையும் தாளாத அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

குடிநீர்த் தாங்கிக்குள் கிருமிநாசினிப் போத்தல் கிடப்பது கண்டறியப்பட்டதன் மூலம் குடிநீரில் கிருமிநாசினி கலக்கப்பட்டுள்ளமை நிரூபணமாகின்றது.

சின்னஞ்சிறு பிள்ளைகள் குடிக்கின்ற நீருக்குள் நஞ்சைக் கலக்கின்ற படுபாதகத்தை கொடுஞ்செயல் என்று கூறினாலும் அது போதாது.

இனத்தால், மதத்தால், மொழியால் என எந்தப் பேதங்களும் சின்னஞ்சிறு பிள்ளைகள் என்ற விடயத்தில் கிடையாது.

ஒரு குழந்தை தவிக்கும் போது அங்கு மனிதம் மட்டுமே துடிக்கும். சாதி, சமயம், இனம் என்ற எந்தப் பேதமும் அங்கு அடங்கி ஒடுங்கிவிடும். அந்த அளவிற்கு சின்னஞ்சிறு பிள்ளைகள் விடயத்தில் இரக்கமும் கருணையும் இருக்கும்போது, பள்ளிக் குழந்தைகள் ஓடிச்சென்று பருகுகின்ற தண்ணீரில் நஞ்சைக் கலந்த, நஞ்சடைத்த அந்த இதயம் இருக்கிறதே அது இந்த உலகம் முழுவதையும் அழிக்க வல்லது.

குடிதண்ணீரில் நஞ்சு கலந்ததான செய்திகளை உலகெங்கும் தேடினாலும் காண்பது அரிது என்பதாக நிலைமை இருக்கையில்,

எங்கள் தமிழ் மண்ணில்-சைவமும் தமிழும் விளைந்து ஓங்கி வளர்ந்த ஏழாலைத் திருமண்ணில் இக் கொடுஞ் செயலைச் செய்தது யார்? இத்தகைய கொடும் செயலின் பின்னணி என்ன? குடிதண்ணீரில் நஞ்சைக் கலந்து அந்தப் பள்ளி மாணவச் செல்வங்களை அவலத்துக்கு ஆளாக்குவதன் மூலம் கொடுஞ்செயல் செய்தவர்கள் எதனை எதிர்பார்க்கின்றனர் என்பது துருவித் துருவி ஆராயப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் பொலிஸார் மட்டும் தேடுதல், விசாரணை நடத்துவர் என்று எண்ணினால் சூத்திரதாரிகள் தப்பிக் கொள்ளும் வாய்ப்பு நிறையவே உண்டு. எனவே தாகம் தீர்க்கும் தண்ணீரில் நஞ்சு கலந்த வஞ்சகர்களை ஊர் திரண்டு, பள்ளிச் சமூகம் திரண்டு கண்டறிய வேண்டும்.

அதே சமயம் தகவல்கள் தெரிந்தவர்கள் அதனைத் தங்களோடு வைத்திராமல் பொலிஸாருக்குத் தெரியப்படுத்துவதும் அவசியம்.

இத்தகைய ஈனச் செயல்களை கண்டும் காணாமல் இருப்பது மிகப்பெரும் பாவம். இவற்றுக்கு அப்பால் குடிதண்ணீரில் நஞ்சு கலந்தமை தொடர்பான விசாரணைகள், அவற்றின் தொடர் நடவடிக்கைகள் குறித்து உடனுக்குடன் பொலிஸார் தகவல் வெளியிடவேண்டும்.

வடபுலத்தைப் பொறுத்தவரை எத்தகைய கொடுஞ்செயல் நடந்தாலும் அவை பற்றிய விசாரணைகளை பொலிஸார் வெளிப்படுத்துவதில்லை. இதன் காரணமாகப் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்ற கருத்தும் மக்கள் மத்தியில் உண்டு.

எனவே தகவல்கள் வெளிப்படுத்தப்படவேண்டும். தகவல் அறியும் உரிமையைப் பாதுகாக்கின்ற பொறுப்பு பொலிஸாருக்கும் உண்டு. இது தவிர, குடிதண்ணீரில் நஞ்சு கலந்த ஈனச் செயல் குறித்து அனைவரும் விழிப்பாக இருப்பது அவசியம்.

நஞ்சு படைத்த இதயத்தினர் நம் மண்ணில் நடமாடுவதால், உண்மையைக் கண்டறியும் வரை பொது இடங்களில் குடி நீர் அருந்துவோர் மிக மிகக் கவனமாக இருப்பதும் கட்டாயம்.

# ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து என்னை நீக்க முடியாது-திஸ்ஸ

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து என்னை நீக்க எவருக்கும் அதிகாரம் இல்லை என கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியில் இருந்து தன்னை நீக்கியமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றது.

விசாரணையில் ஆஜராகிய பின்னர், நீதிமன்றத்திற்கு வெளியில், ஊடகவியலாளரிடம் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நான் எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் என்ற காரணத்தினாலேயே இந்த வழக்கை தொடுத்துள்ளேன்.

ஐக்கிய தேசியக் கட்சியை விட்டுச் செல் லும் நோக்கம் எனக்கில்லை. என்னை கட்சியின் அங்கத்துவத்தில் இருந்து நீக்குவதற்கு முன்னர், என்னிடம் விளக்கம் எதுவும் கேட்கப்படவில்லை. இதன் காரணமாகவே நான் மனுவை தாக்கல் செய்தேன் என திஸ்ஸ அத்த நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் பிரதிவாதிகள் தரப்பில் எதிர் தரப்பு வாதங்களை முன்வைக்கவும் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் வழக்கை விசாரிப்பது எனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (செ-11)

# தேநீருக்குள் மயக்க மருந்திட்டு திருடப்பட்டது வர்த்தகரின் மோதிரம்

(கரணவாய்)

தேநீருக்குள் மயக்க மருந்தைக் கலந்து கொடுத்து வர்த்தகர் ஒருவருடைய மோதிரத்தை நூதனமாக திருடிய திருட்டுச் சம்பவம் ஒன்று நெல்லியடி நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்குச் சென்ற புத்தளத்தைச் சேர்ந்த இருவர் தாம் வெங்காயம் கொள்வனவு செய்ய வந்துள்ளதாகக் கூறி சுமார் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்துள்ளனர்.

பின்னர் குறித்த வர்த்தக நிலைய வர்த்தகரை தேநீர் அருந்த அழைத்துள்ளனர். அவர் மறுத்த போதும் வந்தவர்களில் ஒருவர் தாம் தேநீர் வாங்கி வருவதாகக் கூறிச் சென்று அருகில் உள்ள தேநீர்க்கடையில் தேநீர் வாங்கி வந்துள்ளார்.

அதனை அருந்திய வர்த்தகர் மயக்கம் அடைந்துள்ளார். உடனே அவருடைய கையில் இருந்த தங்க மோதிரத்தை கழட்டி விட்டு தாங்கள் கொண்டு வந்திருந்த போலியான மோதிரத்தை அவருடைய கையில் அணிவித்து விட்டு குறித்த நபர்கள் நழுவிச் சென்றுள்ளனர்.

மயக்கம் ஓரளவு தெளிந்த பின் வர்த்தகர் தனது கைகளைப் பார்த்த போது தனது மோதிரம் காணாமல் போயுள்ளதை உணர்ந்துள்ளார்.

எனினும் மயக்கம் முற்றாக விலகாத நிலையில் வர்த்தகர் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-60)

# தென்மராட்சி கல்வி வலயத்தின் நாத நர்த்தன வர்ணம்-2015

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்தும் நாத நர்த்தன வர்ணம் நாளை சனிக்கிழமை மு.ப 9.30 மணியளவில் சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் வலயக் கல்வி பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் 12 நடன ஆற்றுகை நிகழ்ச்சிகளும் ஒளியும் வெளியும் நிறமும் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் சிறப்பு விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்களம் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் கௌரவ விருந்தினராக சாவகச்சேரி நகராட்சி மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை, வட மாகாணக் கல்வித் திணைக்களம், அழகியல் ஆசிரிய வளவாளர் திருமதி ம.விக்னராஜா, வேள்ட் விஷன் லங்கா-சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தி திட்ட முகாமையாளர் அ.கி.றொசைரோ மற்றும் வேல்ட் விஷன் லங்கா செயற்திட்ட முகாமையாளர் இ.ஜெ.அன்ரனி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையை வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் மற்றும் ஆய்வுரையினை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி ப.சிவநாதன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (செ)

# குமாரசுவாமிகளின் ஜயந்தி தினவிழா

(யாழ்ப்பாணம்)

சிவத்திரு வ.குமாரசுவாமிகளின் 70வது ஜயந்தி தினவிழா நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் கொண்டாடப்படுகின்றது.

அன்றைய தினம் விசேட பூஜைகள், ஆராதனைகள், சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன. (செ-11)

# இலங்கை வருகிறார் கட்டார் மன்னர்

கட்டார் மன்னர் தமீம் பின் அஹமட் அல் தானி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 24-ம் திகதி மன்னர் வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் இலங்கை - கட்டார் ஆகிய நாடுகளுக்கான இரு தரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இவ்விஜயத்தின் போது இளைஞர், விளையாட்டு, கலாசாரம், சுகாதாரம், தகவல் தொழிநுட்ப பரிமாற்றம், தகவல் தொலைதொடர்பு உள்ளிட்ட உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்டார் மன்னர் இலங்கைக்கு மாத்திரமல்லாது இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுப்போட்டி

(மல்லாவி)

ஐரோப்பிய யூனியனின் நிதி அனுசரணையுடன் (அக்ராட்) உயிலங்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு மு/மல்லாவி மத்திய கல் லூரி மைதானத்தில் நடைபெறுமென மேற்படி கிராம அபி விருத்திச் சங்கத் தலைவர் அ.ஸ்ரீகாந்தன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்ச்சிஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (அ-2-15)

# புதிய மண்டப திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் 11 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய மண்டபத் திறப்பு விழாவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வைத்திய நிபுணர் கனகசபை தேவகாந்தன் தம்பதிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## அமைதியின் சொற்கள்

சாந்தியை அடைய எல்லாவற்றையும் விட்டுவிடவேண்டும் என மக்கள் எண்ணுகிறார்கள். அது உண்மை அல்ல. நீங்கள் இந்த உலகில் வாழ்ந்து கொண்டு சமுதாயத்தில் இருந்து கொண்டு சாந்தியை அனுபவிக்கலாம்.

(பிரேம்ராவத்)




## நல்ல கணவராய் இருங்கள்

★ பொருளுக்காக மட்டும் நீங்கள் பேராசை கொண்டு பெண்களை திருமணம் செய்து கொள்ளாதீர்கள். அது பாவகாரியங்களை செய்வதற்கு தூண்டுகோலாக இருக்கும்.

★ நெருங்கிய உறவில் திருமணம் செய்யாதீர்கள். ஏனென்றால் பிறக்கும் குழந்தை குறையுள்ளதாக இருக்கும்.

★ குறைந்த செலவில் அமையப் பெற்ற திருமணமே இறையருளை அள்ளித் தருவதாகும்.

★ திருமணத்தை விளம்பரப்படுத்துங்கள். அவற்றை பள்ளிவாசலில் நடத்துங்கள். அதற்காக முரசு கொட்டுங்கள்.

★ ஒருவரை ஒருவர் நேசிப்பதற்கு இல்லற வாழ்வைத் தவிர வேறு எதுவுமே இல்லை.

★ மனைவியிடம் நல்லவரே உங்களில் நல்லவர். நான் என் மனைவிமார்களுக்கு நல்லவனாக இருக்கிறேன்.

★ குணம் கெட்ட ஆயிரம் ஆண்களை விட நற்குணம் கொண்ட ஒரு பெண்ணே சிறந்தவள்.

★ நீங்கள் கற்புடையவர்களாக இருங்கள். உங்கள் மனைவியரும் கற்புடையவர்களாக இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரப்பந்து, மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பிக்குக

(சங்கானை)

சங்கானை ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தின் ஆண்டு விழா மற்றும் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு மாவட்ட ரீதியாக மென்பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டம் நடத்தப்படவுள்ளது.

5 பேர் கொண்ட (Over Game) கரப்பந்தாட்டமும் 7 பேர் 7 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளது. போட்டிக் கட்டணம் 1000 ரூபாவாகும்.

தொடர்பு கொள்ள வேண்டிய விளையாட்டுக் கழகங்கள் இன்று 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். தொடர்பு இலக்கம் - 077-219 2433. (க)

# உலக கோப்பையை வெல்வோம்; தென்னாபிரிக்க கப்டன் டிவில்லியர்ஸ்



தென்னாபிரிக்க அணி முதல் முறையாக உலக கோப்பை போட்டியில் 'நாக்அவுட்'டில் வெற்றி பெற்றது. அந்த அணி கால் இறுதி ஆட்டத்தில் இலங்கையை நசுக்கி தள்ளியது. இந்த வெற்றி குறித்து தென்னாபிரிக்கா கப்டன் டிவில்லியர்ஸ் நிருபர்களிடம் கூறியதாவது,

எங்களது பந்துவீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. குறிப்பாக இம்ரான் தாகீரும், டுமினியும் நேர்த்தியுடன் பந்து வீசினார்கள். சுழற்பந்து வீரர்களான இருவர் மீதும் எனக்கு அதிகமான நம்பிக்கை இருக்கிறது.

இந்த வெற்றி சிறப்பானது. உலக கோப்பையை வெல்வோம் என்பதில் எங்களது நம்பிக்கை அதிகரித்துள்ளது. மிகச்சிறந்த நிலையை நாங்கள் எட்டுவோம்.

இவ்வாறு டிவில்லியர்ஸ் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்கா அணி அரை இறுதியில் நியூசிலாந்து அல்லது வெஸ்ட்இண்டீசை 24 ஆம் திகதி சந்திக்கிறது. (க)

# உலககோப்பையின் 3 ஆவது காலிறுதி; ஆஸி-பாகிஸ்தான் இன்று பலப்பரீட்சை



உலக கோப்பை கிரிக்கெட் போட்டியின் 3ஆவது காலிறுதி ஆட்டம் அடிலெய்டுவில் இன்று வெள்ளிக்கிழமை நடக்கிறது.

இதில் 'ஏ' பிரிவில் 2ஆவது இடத்தை பிடித்த அவுஸ்திரேலியா 'பி' பிரிவில் 3ஆவது இடத்தை பிடித்த பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

போட்டியை நடத்தும் நாடுகளில் ஒன்றான அவுஸ்திரேலியா 7 ஆவது முறையாக அரை இறுதிக்கு தகுதி பெறும் ஆர்வத்தில் உள்ளது.

இன்றைய ஆட்டம் இந்திய நேரப்படி காலை 9 மணிக்கு தொடங்குகிறது. ஸ்டார் ஸ்போர்ட்ஸ் டெலிவிசனில் இந்தப்போட்டி நேரிடையாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

இரு அணி வீரர்கள் விபரம்:

**அவுஸ்திரேலியா:** கிளார்க் (கப்டன்), வார்னர், ஆரோன் பிஞ்ச், ஸ்டீவன் சுமித், வோட்சன், மக்ஸ்வெல், பல்க்னெர், ஹாடின், ஜான்சன், ஸ்டார்க், கும்மின்ஸ், பெய்லி, டோகர்ட்டி, ஹாசல்வுட், மிச்செல் மார்ஷ்.

**பாகிஸ்தான்:** மிஸ்பா உல் ஹக் (கப்டன்), சேஷாத், சர்பிராஸ் அக்மது, ஹாரிஸ், சோகைல், யூனுஸ்கான், கமரன் அக்மல், அப்ரிடி, வகாப் ரியாஸ், சோகைல் கான், ரசத் அலி, ஆதில், ஜாம் ஷெட், யாசிர்ஷா, சோயிப் மசூத். (க)

# கோலிக்கு கிடைத்த இரண்டாவது லட்டு



இந்தி நடிகை ராக்கி சாவந்த், இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் கோலியை தான் காதலிப்பதாக கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே கோலியும், பாலிவுட் நடிகை அனுஷ்கா சர்மாவும் காதலித்து வருவதாக செய்திகள் வெளிவந்த நிலையில் இருக்கிறது.

இந்நிலையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட ராக்கி சாவந்த், விராட் கோலியை தான் காதலிப்பதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், பாலிவுட் நடிகை அனுஷ்கா சர்மாவும், விராட் கோலியும் காதலிப்பது ஊர் அறிந்த விடயமாக இருக்கலாம்.

ஆனால் கோலி தனது காதலை ஒப்புக் கொண்ட போதிலும், அனுஷ்கா மட்டும் அது பற்றி பேசுவதே இல்லை.

அனுஷ்கா சர்மா கோலியின் காதலை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் நான் என் காதலை கோலியிடம் தெரிவிக்கிறேன் என்று கூறியுள்ளார்.

பாலிவுட்டில் நுழைந்து த[illegible] கவர்ச்சியால் அனைவரையும் கவர முயன்ற ராக்கி சாவந்த், பின்னர் படவாய்ப்புகள் இல்லாமல் புது கட்சி தொடங்கி தேர்தலில் போட்டியிட்டு மண்ணை கவ்வியது குறிப்பிடத்தக்கது. (க)

# சீண்டிப் பார்த்த ருபேல் சினம் கொள்ளாத கோலி



இந்திய அணியின் துணை அணித்தலைவர் விராட் கோலியை ருபேல் ஹொசைன் சீண்டிப் பார்த்தும் அவர் கண்டுகொள்ளாமல் சென்றுள்ளார்.

உலகக்கிண்ணப் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் விராட் கோலி 3 ஓட்டங்களில் ருபேல் ஹொசைன் பந்தில் ஆட்டமிழந்தார்.

அப்போது கோலியைப் பார்த்து வெறுப்பேற்றும் வகையில் வங்க தேச பந்துவீச்சாளர் ருபேல ஹொசைன் நடந்து கொண்டார். ஆனால் ஹொசைனின் நடவடிக்கையைப் பார்த்து கோலி கண்டு கொள்ளவில்லை.

கோலி சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்கவே ருபேலும் ஆக்ரோஷத்தால் கத்தியுள்ளார்.

[illegible] நடந்து சென்றுள்ளார். (க)

# ஒருநாள் போட்டி ஓய்வு முடிவில் மாற்றம் இல்லை-மிஸ்பா



பாகிஸ்தான் கப்டன் மிஸ்பா உல்-ஹக் அளித்த ஒரு பேட்டியில் 'உலக கோப்பை போட்டியுடன் ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் எனது முடிவில் மாற்றம் இல்லை. நான் ஓய்வு பெறுவதற்கு இது சரியான தருணமாக நான் கருதுகிறேன்.

உலக கோப்பையின் முடிவு மற்றும் எனது செயற்பாடுகளை பொறுத்து எனது முடிவில் மாற்றம் இருக்காது. டெஸ்ட் போட்டியில் தொடர்ந்து கப்டனாக நீடிப்பேன்' என்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோஹித் சர்மா சதம்

# இலங்கை சிங்கங்கள் பின்னால் வெளியேறின வங்கத்துப் புலிகள்



ஆட்டநாயகன் ரோஹித் சர்மா

உலகக்கிண்ண காலிறுதி ஆட்டத்தில் இந்திய அணி 110 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. முதல் காலிறுதியில் தென்னாபிரிகக அணி இலங்கை அணியை 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் இந்திய அணி நேற்று பங்களாதேஷ் அணியுடன் மோதியது.

இதில் நாணயச்சுழற்சியில் வெனற இந்திய அணி முதலில் துடுப பெடுத்தாடியது. ரோஹித் சர்மாவும் ஷிகர் தவானும் தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

இந்திய அணி 75 ஓட்டங்களை எட்டிய போது 30 ஓட்டங்களில் தவான் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய விராட் ஹோலி வெறும் 3 ஓட்டங்கள், ரஹானே 19 ஓட்டங்கள் என அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். மறுமுனையில் நிதானமாக விளையாடிய ரோஹித் சர்மா 70 பந்துகளில் அரைசதம் அடித்தார்.

இதனையடுத்து ரோஹித்துடன் ரெய்னா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சை பின்னி எடுத்தது.

இந்திய அணி 38.1 ஓவரில் 186 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

சில நிமிடங்களில் மீண்டும் தொடங்கிய ஆட்டத்தில் அதிரடியாக விளையாடிய ரோஹித் சர்மா சதம் கடந்து 137 ஓட்டங்கள் எடுத்தார். இதுதான் உலகக் கிண்ணத்தில் ரோஹித் சர்மாவின் முதல் சதம் என்பது குறிப்பிடத்தக்கது. ரெய்னா அரைசதம் கடந்து 65 ஓட்டங்கள் எடுத்தார்.

50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 302 ஓட்டங்கள் குவித்தது.

இதனையடுத்து பங்களாதேஷ் அணி 303 ஓட்டங்கள் இலக்குடன் களமிறங்கியது.

பங்களாதேஷ் அணியின் தொடக்க வீரர் தமிம் இக்பால் 25 பந்துகளில் 25 ஓட்டங்கள் எடுத்தார். கேயாஸ் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து சவும்யா சர்க்காரும் மக்மதுல்லாவும் இணைந்து நிதானமாக ஓட்டங்களை சேர்த்தனர். எனினும் இந்த ஜோடியும் நிலைக்கவில்லை.

மக்மதுல்லணா 21 ஓட்டங்கள் எடுத்த போது மொஹமட் ஷமி பந்தில் தவானிடம் பிடிகொடுத்தார்.

அடுத்து சவும்யா சர்க்காரும் மொஹமட் சமி பந்தில் தோனியிடம் பிடிகொடுத்தார். தொடர்ந்து விளையாடிய பங்களாதேஷ் அணி 193 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதனால் இந்திய அணி 110 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக சதம் அடித்த இந்திய அணியின் ரோஹித் சர்மா தெரிவானார். (க)



## தோனி தலைமையில் 100வது வெற்றி

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் நேறறு மெல்போர்னில் நடந்த பங்களாதேசுக்கு எதிரான காலிறுதி போட்டியில் இந்தியா 109 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

தோனி கப்டன் பதவி ஏற்று பெறும் 100-வது வெற்றி இதுவாகும். இதுவரை இந்திய அணிக்கு 138 போட்டிகளில் கப்டனாக பணியாற்றியுள்ளார் தோனி.

அவரது தலைமையிலான அணி 100 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. 35 போட்டிகளில் தோல்வி அடைந்துள்ளது. ஒரு போட்டி சமனிலையிலும், 3 போட்டிகள் முடிவு இல்லாமலும் இருந்துள்ளது.

இதுதவிர, தோனி தலைமையில் இந்தியா இருபது ஓவர் உலகக்கோப்பை மற்றும் 2011-ம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியில் சம்பியன் பட்டம் வென்றுள்ளது. இந்திய அணியின் வெற்றி கப்டனாக தோனி திகழ்ந்து வருகிறார்.

ரிக்கி பொண்டிங் தலைமையில் அவுஸ்திரேலிய அணி 165 போட்டியிலும், அலன் போர்டர் தலைமையில் அதே அணி 107 போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

## குற்றவியல் முறைமை சட்டக்கோவை 15 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

### த.தே.கூட்டமைப்பு ஆதரவளிப்பு

(கொழும்பு)

குற்றவியல் நடவடிக்கை முறைமை சட்டக்கோவை சட்டத்தின் கீழான கட்டளை நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் 53 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி கட்டளை மீதான விவாதத்தின் நிறைவில் அதனை நிறைவேற்றும் பொருட்டு பெயர் கூறி வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும் என்று அநுரகுமார எம்.பி. கேட்டுக்கொண்டதற்கிணங்க பெயர்கூறி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது ஜனநாயக தேசியக் கூட்டணி மாற்றுக்குழு உறுப்பினரான அஜித்குமார மாத்திரமே எதிர்த்து வாக்களிக்க அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவாக வாக்களித்தது.

அத்துடன், மேற்படி வாக்கெடுப்பின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அமைச்சர் கள் பலரும் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் பலரும் சபையில் சமுகமளித்திருக்கவில்லை.

இதேவேளை, சபையில் அமர்ந்திருந்த முன்னாள் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ ஆகிய இருவரும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது சபையிலிருந்து எழுந்து வெளியேறினர்.

மேலும், வாக்கெடுப்பு நடந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சபையின் கதவைத் திறந்து உள் நுழைய எத்தனித்த உறுப்பினர் வாசுதேவ நூணயக்கார மீண்டும் அங்கிருந்து சென்றுவிட்டார்.

இறுதியில் கட்டளைக்கு ஆதரவாக 54 வாக்குகளும், எதிராக ஒரு வாக்கும் கிடைக்கப்பெற்றதாக அறிவித்த குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார், கட்டளை மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதாக அறிவித்தார். (செ-11)

## இந்திய அணி வெற்றி: வீரர்களுக்கு தோனி பாராட்டு



உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில்நேற்று நடந்த காலிறுதி ஆட்டத்தில, இந்திய அணி பங்களாதேஷ் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. இந்த வெற்றி குறித்து இந்திய அணியின் கப்டன் தோனி கூறியதாவது,

இது மிகச்சிறப்பான ஆட்டம். நாங்கள் சில நல்ல ஆட்டங்களை வெளிப்படுத்தியுள்ளோம். அதே நேரத்தல்ஒரு மாதததிற்கு முன் நாங்கள் இங்கு சற்று திணறினோம். தற்போது ஏற்பட்டிருக்கும் மாற்றத்திற்கு யார் காரணம் என்பதை சுட்டிக்காட்டுவது கடினமான ஒன்று. இந்த வெற்றிக்கு ஒட்டு மொத்த அணியின் உழைப்பே காரணம்.

அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் பட்டியலில் அணியில் உள்ள பல வீரர்கள் இல்லை. ஆனால் சிறப்பாக துடுபபாட்டம் செய்து வருகிறோம். தென்னாபிரிக்கா, நியூசிலாந்து உட்பட நாங்களும் உலகக் கோப்பைக்கு முன் தடுமாறினோம். ஆனால், தற்போது சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்துகிறோம். ஒரு பேட்ஸ்மேன் போர்ம் இல்லாமல் இருந்து மீண்டும் போர்முக்கு வருவது போலத்தான் இது அமைந்துள்ளது. கிரிக்கெட்டில் சிறிய விடயங்களை கூட சரியாக செய்ய வேண்டியது அவசியம். இவ்வாறு அவர் கூறினார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை நீர்த்...



குறித்த பாடசாலையில் நேற்றுக் காலை வேளை பாட சாலை மாணவர்கள் தண்ணீர் அருந்துவதற்காகச் சென்றுள்ளனர். தண்ணீரில் துர்நாற்றம் வீசியதனால் சில மாணவர்கள் தண்ணீரை அருந்தவில்லை. எனினும் சில மாணவர்கள் தண்ணீர் அருந்தியுள்ளனர்.

தண்ணீர் அருந்தாத மாணவர்கள் தண்ணீரில் துர்நாற்றம் வீசுவதாக கூறியுள்ளனர். இவ்விடயம் உடனடியாக அதிபர் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து குறித்த நீர்த்தாங்கியின் மேல் ஏறிப் பார்த்த பொழுது பயிர்களுக்கு அடிக்கப்படும் கிருமி நாசினிப் போத்தல் இருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

உடனடியாக கிருமிநாசினி கலந்த நீரை அருந்திய மாணவர்கள் 26 பேரும் தற்பாது காப்பு நடவடிக்கைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டனர். அவர்களில் சிலர் வைத்திய சாலைக்கு கொண்டு வரும்போது மயக்கமடைந்தனர். இதனால் நீர் அருந்திய 26 பாடசாலை மாணவர்களும் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் பின்னரே அவர்கள் சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

இருபத்தியாறு மாணவர்களும் ஆபத்தான கட்டத்தினை தாண்டியுள்ளதாகவும் தற்போது மாணவர்கள் அனைவரும் நலமாக இருப்பதாகவும் ஓரிரு நாள் அவதானிப்பின் பின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்படுவர் என யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீபவானந்தராஜா வலம்புரியிடம் தெரிவித்தார்.

இந்நிலையில் குடிநீரில் கலக்கப்பட்டது ஒகனோ பொஸ்பேற் எனப்படும் கிருமிநாசினி என கண்டறியப்பட்டுள்ளதுடன், குறித்தகளை நாசினி திட்டமிட்டே மாணவர்களின் குடிநீர் தாங்கியில் கலக்கப்பட்டுள்ளதாக ஊர்மக்கள் மற்றும் பாடசாலை சமூகம் குற்றம் சாட்டியுள்ளது. குறித்த சம்பவத்தில் கிருமி நாசினியை குடிநீரில் கலந்தவர்கள், நீர் விநியோகிக்கும் பிரதேச சபையின் மீது பழி சுமத்துவதற் காக இந்த செயலை செய்திருப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளதுடன், குறித்த சம்பவத்தின் சூத்திரதாரிகளைஅடையாளம் காணுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் பாடசாலைக்கும்சென்ற வடமாகாண விவசாய அமைச்சர் மற்றும் கல்வியமைச்சர் ஆகியோர் பெற்றோர் ஆசிரியர்கள், கிராமத்தவர்களுடன் கலந்துரையாடல் நடத்தியதுடன்,

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள், உப செயலாளர் சிவஸ்ரீ சுந்தரராஜ சர்மா உட்பட பலர் சென்று பார்வையிட்டிருந்தனர்.

வடமாகாண முதலமைச்சரின் பணிப்பிற்கமைவாக மேற்படி இரு அமைச்சர்களும் வடமாகாண பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் குறித்த சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்துமாறு கோரியிருப்பதுடன் முறைப்பாட்டையும் கொடுத்திருக்கின்றனர்.

இதேவேளை குறித்த சம்பவம்தொடர்பில்விசாரணை நடத்துவதற்கு விசேட பொலிஸ்படை உருவாக்கப்பட்டிருக்கின்றது. (செ-11)

## கைது செய்யும் போது...

மன்ற உறுப்பினர் சரண குணவர்தனவை பார்க்கச் சென்றிருந்த போதே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் தன்னுடன் மிக நெருக்கமாக இருந்த நபர்கள் முறையற்ற விதத்தில் கைது செய்யப்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இது நல்லாட்சி அல்ல என்று கூறியுள்ள மகிந்த ராஜபக்ஷ, பொலிஸாரின் கைது நடவடிக்கைகள் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அழுத்தங்களுக்கு அடிபணிந்து செயற்பட வேண்டாம்என்று பொலிஸாரையும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே, போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள்பற்றி உள்நாட்டு விசாரணை நடத்தப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருப்பது பற்றி மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

உறுதி மொழிகளை வழங்கினால் அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்றும் இது அவர்களின் அரசாங்கம், அவர்களால் எதுவும் செய்ய முடியும் என்றும் கூறினார் மகிந்த ராஜபக்ஷ.

இவ்வாறு உள்நாட்டு விசாரணை நடத்தப்பட்டால் போரில் ஈடுபட்ட ராணுவத்தினர் காட்டிக் கொடுக்கப்படுவார்கள் என்று எதிர்தரப்பினர் முன்வைக்கும் விமர்சனங்களை சுட்டிக்காட்டி ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அரசாங்கம் அவர்களை காட்டிக் கொடுக்கக் கூடும். ஆனால் மக்கள் இராணுவத்தினரை காட்டிக் கொடுக்க மாட்டார்கள் என்று மகிந்த ராஜபக்ஷ பதில் கூறியுள்ளார். (செ-11)

## இலங்கையின் தேசிய...

சந்திப்பில் கம்மன்பில இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் பாட அனுமதிக்கின்ற சுற்று நிருபம் அரசியலமைப்புச் சட்டத்தை மீறும் செயல் என பொது பல சேனா அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் விடுத்த அறிக்கை அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது எனவும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய ஜனாதிபதிக்கு அதற்கான சுற்று நிருபத்தை அரச நிறுவனங்களுக்கு அனுப்ப முடியாது எனவும்பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். நியமிக்கப்பட்ட தேசிய நிறைவேற்றுச் சபையும் அரசியலமைப்புச் சட்டத்தை மீறி நியமிக்கப்பட்டுள்ளது.

இதனால், தமிழில் தேசிய கீதம் பாடுவதை ஜனாதிபதி அனுமதிக்கக் கூடாது. அரசாங்கம் புதிய பிரச்சினைகளை உருவாக்க முயற்சித்து வருகிறது எனவும் ஞானசார தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

அதேவேளை அரசியலமைப்பின் பிரகாரம் தேசிய கீதத்தின் மொழி மாற்றப்பட வேண்டுமாயின் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என பொது பல சேனா அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் டிலாந்த வித்தானகே தெரிவித்துள்ளார். (எ-11)

## தேசிய கீதத்தை தமிழில்...

அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற தேசிய நிறைவேற்றுச் சபையில் தமிழில் தேசிய கீதத்தை பாட இடமளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஆனால்; அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் ஒன்றை மீண்டும் அமுல்படுத்த வேண்டிய அவசியமில்லை.

அரசியலமைப்பின் பிரகாரம் தேசிய கீதத்தை தமிழிலும் பாட முடியும். அதற்கு ஜனாதிபதியின் அனுமதி அவசியமில்லை.

கடந்த அரசாங்கத்தில் இது சம்பந்தமாக பிரச்சினை இருந்த போதிலும் அமைச்சர் என்ற வகையில், வடக்கு மாகாணத்தில் நான் கலந்து கொண்ட நிகழ்வுகளில் தேசிய கீதத்தை தமிழில் பாட இடமளித்தேன்.

முந்தைய அரசாங்கம் வடக்கு மாகாணத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் தேசிய கீதத்தை சிங்களத்தில் பாட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது. அதில் இராணுவத்தினர் தலையிட்டனர். எனினும் நான் அதற்கு இடமளிக்காது அரசியலமைப்புச் சட்டத்தின்படி செயற்பட்டேன்.

வடக்கில் நடைபெறும் அப்படியான நிகழ்வுகளின் போது தேசிய கீதத்தை சிங்களத்தில் பாடினால், எங்களில் 5 பேருக்கு புரியும். அதில் என்ன கூறப்படுகிறது என்பது மக்கள் அனைவருக்கும் புரியாது.

தமிழில் பாடினால், அனைவருக்கும் புரியும். அந்த மக்கள் தமிழில் நமது தேசிய கீதத்தை பாடுவது குறித்து நாம் மகிழ்ச்சியடைய வேண்டாமா?

தமிழில் தேசிய கீதம் பாடுவது பற்றி ஜனாதிபதி எந்த புதிய சட்டத்தை பிறப்பிக்கவில்லை.

புதிதாக அனுமதி வழங்க தேவையில்லை. இருக்கும் அரசியலமைப்புச் சட்டத்தை அமுல்படுத்த ஜனாதிபதி ஒருவர் புதிதாக அனுமதி வழங்க தேவையில்லை.

தேசிய கீதத்தை தமிழில் பாடுவது அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமை எனவும்ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## நாடாளுமன்றத்தில்...

குறிப்பிட்டுள்ளார்.

அவர்களின் பெயர்களை தற்போது வெளியிடப் போவதில்லை.

தனது இந்த தகவல் பொய்யானது என்றால், அதனை பகிரங்கமாக அறிவிக்குமாறு எதிர்க்கட்சியினருக்கு சவால் விடுக்கின்றேன் எனவும் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் இந்த சவாலை விடுத்த போது எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் இருந்தார், எனினும் எவரும் அமைச்சரின் சவாலை ஏற்றுக்கொள்ள வில்லை.

நாடாளுமன்றம் தியவன்னா ஓயாவின் தண்ணீருக்கு மத்தியில் இருந்தாலும் தண்ணீருக்கு மத்தியில் அல்ல, எத்தனோல் நதிக்கு மத்தியில் இருப்பதாக தாம் உணர்வதாகவும் நிதியமைச்சர் மேலும் கூறியுள்ளார். (செ-11)

## மோடி வந்து...

தெரிவித்துள்ளார் எனவும்.

வடக்கிற்கு சென்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் திருத்த சட்டம் தொடர்பில் இந்திய பிரதமர் நம்பிக்கை அளித்துள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து அமைதியான சூழலை தோற்றுவித்துள்ள நிலையில் மோடி இலங்கைக்கு வந்து என்ன செய்தார் என அவர் கேள்வியெழுப்பியதுடன்,

யுத்தத்தினால் காயமுற்று நலிவடைந்த மக்களின் இதயங்கள் தற்போது குணமடைந்து வரும் நிலையில். இந்திய பிரதமரின் இச்செயற்பாடு நாட்டை நேசிக்கும் அரசியல் கட்சியான தம்மால் ஒரு போதும் அனுமதிக்க முடியாது என வீரகுமார திசாநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்.
Computer Repair
0779086737. 52, Hospital Road,
GUNAA BEST PC Jaffna.
(9843)

RAVEENS EMC
KARAVEDDY
Grade 6 - 11 (English Medium)
Exam Papers for Term 1 - 2015
AVAILABLE NOW
Check it out Via www.raveensemc.com
T.P : +94 21 226 331 (C-397)
E-mail : examboard@raveensemc.com

1ம் ஆண்டின் நிறைவை
இனிமையாக்க... சுவையாக்க...
வெள்ளி முதல் திங்கள் வரை
4 நாட்கள்
அதிரடிச் சலுகை
அனைத்து உணவுகளுக்கும்
15% விலை தள்ளுபடி
சுவைப் பிரியர்களின்
சூப்பர் ஸ்ரார்...
கோல்டன் ஸ்ரார்
ரெஸ்ரோரண்ட்
(ஆரியகுளம் சந்தி அருகில்)
0778890888
(9844)

இறுவெட்டு தயாரிப்பதற்கான
தொழில் நுட்பத்திறனுடையோர் தேவை
செவிப்புல, கட்புல சாதன தொழில் நுட்பம் திறனுடையோர் 27.03.2015 க்கு முன்னர் எம்முடன் கடிதம் மூலம் சுயவிபரத்துடன் தொடர்பு கொள்ளவும்.
ஆறுதல், நிறுவனம்.
இல.51, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
(C-405)

JOB VACANCY
British College of Higher Studies
reguires teacher staff (Age below 50)
for the post below
1. Post of English Lecturer
(Male/Female) - Full Time/Part Time
2. Post of Sinhala Lecturer
(Male/Female) - Full Time/Part Time
• Attractive Salary package will be offered
• Suitable candidates are reguired to apply in person/ by post/through e-mail on or before 31.03.2015
• Short listed candidates will be called for an interview (C-395)
British College of
Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna.
Tel:021-2224550
Hotline(s):0777585913, 0777222422

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org